கல்கி



KALKI ஆகஸ்ட் 1, 1954 4 அணா


ஒவ்வொரு தினமும்
நீங்கள் அழுக்கிலுள்ள
கிருமிகளின் அபாயத்
துக்குள்ளாகலாம்.
இந்தக் கிருமிகளை
லைப்பாய் சோப்பினால்
கழுவிக்களைந்து தினமும்
உங்களைக்காப்பாற்றிக்
கொள்ளுங்கள்.
லைப்பாயின் "பாதுகாக்கும்
நுரை" உங்கள் ஆரோக்கி
யத்தைக்காப்பாற்று
கிறது.
லைப்பாய்
சோப்
தினசரித்தொல்லையான
அழுக்கிலிருக்கும் கிருமி
களிலிருந்து உங்களைப்
பாதுகாக்கிறது.
LIFEBUOY
SOAP
LIFEBUOY
SOAP

கல்கி பொருளடக்கம்

மலர் 14 | இதழ் 1 — 1954 ஆகஸ்டு 1 — ஜய ௵ ஆடி 17

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.


ஜூலை 30 முதல்
தமிழ்நாடெங்கும்
நடைபெறுகிறது!
நரசு ஸ்டூடியோஸ்
துளி விஷம்
திரைக்கதை, வசனம், டைரக்ஷன்
A.S.A.சாமி
நரசு நகர், கிண்டி, மதராஸ்-15

கல்கி

மலர் 14 — இதழ் 1

தமிழ்த் திருநாடு தன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. —பாரதியார்

புயல் அடங்கியது! பலி நின்றது!

உலக நாடுகளிடையே சுதந்திர இந்தியாவின் மதிப்பும் மாண்பும் இமயத்துக்குச் சமமாக உயர்ந்திருக்கின்றன.

பாரதத் தவப் புதல்வர் ஜவாஹர்லால் நேருவைப் பிரதம மந்திரியாக அடையும் பாக்கியம் பெற்ற இந்திய மகா ஜனங்கள் பெருமிதமும் பூரிப்பும் அடையும்படியான சம்பவம் இப்போது நிகழ்ந்திருக்கிறது.

நேருஜியின் இடைவிடாத சீரிய முயற்சியால் சென்ற இருபது வருஷங்களாக உலகம் கண்டிராத அற்புத நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

போர் வெறிப் புயல் அடங்கி, பெரும் அளவில் நடந்து வந்த நரபலி நின்றிருக்கிறது.

உலகப் பிரச்னைகளை ஒட்டி எந்த வல்லரசுக் கட்சியிலும் சேராமல் பாரதநாடு நடுநிலைமைக் கொள்கையைக் கடைப்பிடித்து வருகிறது அல்லவா?

அது, எத்தகைய நன்மைக்கும் வழியில்லாத அர்த்தமற்ற கொள்கை என்று உலக ராஜதந்திரிகளில் ஒரு சாரார் கூறினார்கள்.

இரண்டு 'கட்சிகளுக்கும் நல்ல பிள்ளையாக நடந்து கொள்ளும் 'வௌவால்' கொள்கை என்று மற்றொரு சாரார் வர்ணித்தார்கள்.

இந்தியாவின் இன்றைய இன்னல்களுக்கு மேற்படி நடுநிலைமைக் கொள்கைதான் காரணம் என்று உள் நாட்டிலும் சில கண்டனவாதிகள் குறிப்பிட்டனர்.

ஆனால், இந்தியா அனுஷ்டித்து வரும் நடுநிலைமைக் கொள்கை பயத்தையோ, கோழைத்தனத்தையோ, சுயநலத்தையோ அடிப்படையாகக் கொண்டதில்லை என்று ஜவாஹர்லால்ஜி அடிக்கடி வலியுறுத்தினார்.

அக் கொள்கை ஜீவ சக்தி பொருந்தியது; உலக நீதியையும் நேர்மையையும் அடிப்படையாகக் கொண்டது; யுத்தம் ஒழிந்து சமாதானம் நிலவுவதற்குப் பேருதவி அளிக்கக் கூடியது என்று இடைவிடாமல் கூறி வந்தார்.

இப்போது நிகழ்ந்துள்ள சம்பவம், ஜவாஹர்லால்ஜியின் தலைமையில் இந்தியக் குடியரசு சர்க்கார் அனுஷ்டித்து வரும் நடுநிலைமைக் கொள்கை நூற்றுக்கு நூறு சரி என்பதை சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபித்திருக்கிறது.

அந்தக் கொள்கையைக் கண்மூடித்தனமாக ஆட்சேபித்த கண்டனவாதிகளையெல்லாம் தலைகுனியும்படி செய்திருக்கிறது.

இந்தியா எந்த வல்லரசின் கட்சியிலும் சேராமல் நடுநிலைமை வகித்து வந்ததால்தான், அது வெவ்வேறு கொள்கைகளையுடைய வல்லரசுகளின் மதிப்புக்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமாக முடிந்தது.

இந்தியாவின் சீரிய கொள்கையில் பிரிட்டன், பிரான்ஸ், சீனா, ருஷ்யா முதலிய வல்லரசுகளுக்கு நம்பிக்கை இருந்ததால்தான், சென்ற ஏழு வருஷ காலமாக இந்தோ—சீனாவில் நடந்து வந்த கோர யுத்தம் நிற்பது சாத்தியமாயிற்று.

சென்ற இருபது வருஷ காலமாக உலகத்தின் ஏதாவதொரு பாகத்தில் பரந்த அளவில் கோரமான யுத்தம் நடந்து கொண்டுதான் இருந்தது; இப்போதுதான் முதல் தடவையாக உலகம் யுத்தத்திலிருந்து விடுதலை அடைந்திருக்கிறது என்று உலக ராஜதந்திரி ஒருவர் கூறியுள்ளார்.

ஆம், முதலில் சீனாவுக்கும் ஜப்பானுக்கும் உக்ரமான போர் நடந்து கொண்டிருந்தது.


அது முடிவதற்குள் 1939-ம் வருஷம் இரண்டாவது உலக மகாயுத்தம் எட்டுத் திசைகளையும் சூழ்ந்து கொண்டு அல்லோல கல்லோலப் படுத்தியது.

அந்த யுத்தம் முடிந்ததும் முடியாததுமாக டச்சுக்காரர்களின் ஆதிக்கத்தை எதிர்த்து இந்தோனேஷ்யர்கள் போரைத் தொடர்ந்தனர்.

அதன் பிறகு இரண்டு வருஷம் கொரியாவில் கோரமான யுத்தம் நிகழ்ந்தது.

சென்ற ஏழு வருஷ காலமாக இந்தோசீனர்களுக்கும் பிரஞ்சுக்காரர்களுக்கும் பயங்கரமான யுத்தம் நடந்து வந்துள்ளது.

இந்தியாவின் பொறுப்பு!



"இந்தோ சீனாவில் சமாதான மேற்பார்வைக் கமிஷனின் தலைமைப் பதவியை ஏற்க இந்தியா முடிவு செய்துள்ளது. இது மிகவும் கடினமான பொறுப்பு" என்று நேருஜி தெரிவித்திருக்கிறார். கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த வியட்மின் சர்க்காரையும் பிரஞ்சு ஏகாதிபத்திய சர்க்காரையும் ஒரு சமாதானத் தட்டில் தண்ணீர் குடிக்கும்படி செய்வது கடினமான வேலைதானே!

எனவே, சென்ற இருபது வருஷ காலத்தில் முதல் தடவையாக இப்போது யுத்தம் நின்றிருப்பது உலக மக்கள் யாவரும் குதூகலப்பட வேண்டிய முக்கிய விஷயம் அல்லவா!

இந்தோ-சீனப் பிரச்னையை ஒட்டி ஜினிவாவில் நடந்த மகாநாடு முறிந்திருந்தால், அதன் விளைவாக உலகம் அணுகுண்டு, ஹைட்ரஜன் குண்டு யுத்தத்துக்கு இலக்காகும்படி நேர்ந்திருக்கலாம் என்று ஜவாஹர்லால்ஜி சென்ற வாரம் அஜ்மீரில் நடந்த அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் குறிப்பிட்டார்.

எனவே, அத்தகைய பேராபத்திலிருந்து உலகத்தைக் காப்பாற்றிய பெருமை நேருஜிக்கே உரியது என்பதை எவரும் மறுக்க முடியாது.

ஜினிவா மகாநாட்டில் கலந்து கொண்ட வல்லரசுப் பிரதிநிதிகளும் இந்த உண்மையை ஒத்துக் கொண்டிருக்கிறார்கள்.

முன்பு கொரியா யுத்தம் உலக யுத்தமாக மாறாமல் தவிர்ப்பதற்கு நேருஜி காரணமாக இருந்தது போலவே, இன்று இந்தோ சீன யுத்தம் நின்றதற்கும் நேருஜியின் இடைவிடா முயற்சியே காரணம் என்பதை ஒப்புக் கொள்ளாதவர் இருக்க முடியாது.

"தெரிதலும், தேர்ந்து செயலும், ஒரு தலையாச்
சொல்லலும் வல்லது அமைச்சு"

என்ற தமிழ் மறை தந்த முனிவரின் உபதேசத்துக்கு இணங்க, பாரதத்தின் பிரதம மந்திரியாக இருக்கும் ஜவாஹர்லால்ஜி மிகவும் நெருக்கடியான சமயத்தில் உறுதியுடன் நின்று உலகத்துக்கே நீதியையும் நல்வழியையும் எடுத்துக் கூறும் மந்திராலோசகராக இருந்து வருகிறார்.

ஜினிவா மகாநாடு வெற்றி பெற்று, இந்தோ சீன போர் நின்றதற்கு நேருஜிக்கு அடுத்தபடியாக, பிரான்ஸ் பிரதம மந்திரி மெண்டஸ் பிரான்சைக் குறிப்பிட வேண்டும்.

சென்ற மகா யுத்தத்துக்குப் பிறகு பிரான்ஸ் தேசத்தில் பத்தொன்பது தடவைகள் மந்திரி சபை அற்பாயுளில் வீழ்ச்சி அடைந்ததாகக் கணக்கு எடுத்திருக்கிறார்கள்.

இந்தோ சீனப் பிரச்னையைத் திருப்திகரமாகத் தீர்க்க முடியாததாலேயே சென்ற ஜூன் மாதம் லேனியல் மந்திரி சபை வீழ்ச்சியுற்றது.

அம் மாதம் இருபதாம் தேதி பிரான்ஸ் பிரதம மந்திரி பதவியை ஸ்ரீ மெண்டஸ் பிரான்ஸ் ஏற்ற போது அவர் செய்த சபதம் எல்லோரையும் திகைக்க வைத்தது.

"இன்னும் சரியாக ஒரு மாதத்துக்குள், ஜூலை மாதம் இருபதாம் தேதிக்குள் இந்தோ சீனப் பிரச்னையைத் தீர்ப்பேன். இல்லாவிடில் பிரதம மந்திரி பதவியை ராஜிநாமா செய்து விடுவேன்" என்று கூறினார் ஸ்ரீ பிரான்ஸ்.

அவர் செய்த மேற்படி சபதம், இந்தோசீன யுத்தம் நின்று சமாதானம் ஏற்படுவதற்குற்ற சூழ்நிலையை உண்டு பண்ணியது.

சென்ற ஏழு ஆண்டுகளாகப் பிரான்சில் பிரதம மந்திரி பதவி வகித்த எவராலும் செய்ய முடியாத ஒரு காரியத்தை, ஸ்ரீ மெண்டஸ் பிரான்ஸ் தாம் பதவிக்கு வந்த ஒரு மாத காலத்துக்குள் நிறைவேற்றியது உலகம் பாராட்டத் தக்க சாதனை அல்லவா!

ஜினிவா மகாநாட்டில் பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா, ருஷ்யா, குடியரசு சீனா, வியட்மின்,

வியட்நாம், லாவோஸ், கம்போடியா முதலிய ஒன்பது நாடுகள் கலந்து கொண்டன.

தற்போது ஏற்பட்டுள்ள ஒப்பந்தத்தின் படி வியட்நாமில் பதினேழாவது அட்சரேகைக்கு வடக்கே உள்ள பிரதேசம் வியட்மின்களின் ஆட்சியில் இருந்து வரும்.

தற்போது பிரான்ஸின் ஆதிக்கத்தில் இருந்து வரும் மொத்தம் நாலு லட்சம் ஜனத் தொகையுள்ள ஹனாய், ஹெய்பாங் இந்த இரண்டு முக்கிய நகரங்களும் வியட்மின்களுக்கு விட்டுக் கொடுக்கப் பட்டிருக்கின்றன.

1956-ம் வருஷம் ஜூலை மாதம் இருபதாம் தேதிக்கு மேற்படாமல் வியட்மின் பிரதேசங்கள் உள்பட வியட்நாம் முழுவதும் தேர்தல்கள் நடத்தி ஆட்சி முறையை நிர்ணயம் செய்ய வேண்டும்.

ஒப்பந்த ஷரத்துக்களை நிறைவேற்ற இந்தியாவின் தலைமையில் போலந்து, கானடா பிரதிநிதிகள் அடங்கிய சர்வதேச சமாதான மேற்பார்வைக் கமிஷனை நியமிக்க வேண்டும்.

இவைதான் ஜினிவாவில் ஏற்பட்டுள்ள ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்கள் ஆகும்.

மேற்படி கமிஷனுக்குத் தலைமை வகிக்கும் மகத்தான, கஷ்டமான பொறுப்பைத் தட்டிக் கழிக்காமல் இந்தியா ஏற்றுக் கொண்டிருப்பதாக ஜவாஹர்லால்ஜி ஆஜ்மீர் அ. இ. கா. கமிட்டிக் கூட்டத்தில் அறிவித்துள்ளார்.


ஜினிவாவில் ஏற்பட்டுள்ள ஒப்பந்தம் உலகத்துக்கு வெற்றி, உலகத்தில் உள்ள சமாதானவாதிகளுக்கு வெற்றி என்று ஜவாஹர்லால்ஜி கூறியிருப்பது குறிப்பிடத் தக்கது.

உலக நன்மைக்காக, உலக சமாதானத்துக்காக, அணுகுண்டு, ஹைட்ரஜன் குண்டு யுத்தத்திலிருந்து உலகத்தை உய்விப்பதற்காக இந்தியா ஏற்றுக் கொண்டுள்ள பொறுப்பு வெற்றி பெறப் பிரார்த்திப்போமாக.

காந்தி மகான் வருகிறார்!

மானிட வர்க்கத்தின் மாமணியாகத் திகழ்ந்த மகாத்மா காந்தியின் திருநாமம் உலக மக்களின் செவிகளில் என்றென்றும் ஒலித்து வரும். அந்த மகான் தன்னலமற்ற வாழ்க்கையில் புரிந்த அற்புதங்கள் சரித்திரத்தின் பொன் ஏடுகளை என்றென்றும் அலங்கரித்து வரும். காந்தி மகானின் புகழ் சந்திரசூரியர் உள்ளளவும், நட்சத்திர ஜோதியாக, நந்தா விளக்காகச் சுடர் விட்டுப் பிரகாசித்து வரும். அம்முனிவர் பெருமானின் புகழ் உடல் நம் மனசை விட்டு என்றும் அகலாது.

நீங்களும் புறப்படுங்கள்!



மாஹி மக்கள் நடத்திய போராட்டத்தின் பலனாக, அப் பிரதேசத்தைப் பிரஞ்சுக் காரர்கள் காலி செய்து விட்டனர். கோவாவில் போர்த்துகியரின் பிடிவாதம் மட்டும் நெடுநாள் நீடித்திருக்க முடியுமா?

ஆனால், அவரது பூத உடல் மறைந்து விட்டதே, அவரது புனிதத் திருமேனியைத் தரிசிக்க முடியாதே என்ற ஏக்கம் நம்மில் பலர் உள்ளத்தில் குடி கொண்டிருக்கிறதல்லவா ! அந்த ஏக்கத்தைப் போக்கிக் கொள்வதற்கு ஒரு சந்தர்ப்பம் இதோ நமக்குக் கிடைத்திருக்கிறது. இதோ அந்த மகானை நேரில் காண்கிறோம். அவர் முகமலர்ச்சியுடன் சிரிப்பதைப் பார்த்து மகிழ்கிறோம்.

"இந்தியாவின் குரல்" (The Voice of India) என்ற சினிமாச் செய்திப் படத்தின் மூலம் காந்திஜியைத் தத்ரூபமாக எல்லோரும் கண்டு மகிழ ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

காந்தி மகானின் வாழ்க்கையில் ஒரு முக்கியமான கட்டத்தில் நிகழ்ந்த பல அற்புதமான சம்பவங்கள் இப் படத்தில் இணைக்கப் பட்டிருக்கின்றன.

லாகூர் காங்கிரசில் காந்திஜி பேசுகிறார் ; சரித்திரப் பிரசித்தி பெற்ற தண்டி யாத்திரையைத் தொடங்குகிறார் ; வட்ட மேஜை மகாநாட்டுக்காக லண்டனுக்குச் செல்லுகிறார் ; மன்னரைக் காண பக்கிங்காம் அரண்மனைக்கு விஜயம் செய்கிறார் ; முசோலினியின் சர்வாதிகார ஆட்சியின் கீழ் இத்தாலியிலே சிறுவர் படை அணி வகுப்பைப் பார்வையிடுகிறார் ; அறிஞர் ரோமெயின் ரோலந்துடன் அளவளாவுகிறார்;—இவைபோன்ற இன்னும் பல அற்புதக் காட்சிகள் படம் எடுக்கப் பட்டிருக்கின்றன.

ஜவாஹர்லால்ஜி, கான் அப்துல் கபார்கான் முதலிய தலைவர்களும், அரிய தேசத்தொண்டு புரிந்து ஜோதிவானில் மறைந்த நேதாஜி சுபாஷ் சந்திர போஸ், சர்தார் வல்லபாய் பட்டேல், கவியரசி சரோஜினி, ஸ்ரீமதி கமலாநேரு முதலிய அரும்பெரும் தலைவர்களும் காட்சி அளித்து நம்மை மெய்சிலிர்க்கும்படி செய்கிறார்கள்.

மேற்படி படம் ஒரு மணி நேரம் காட்டப் படுகிறதெனில், காந்தி மகான் தோன்றும் இன்னும் எத்தனை காட்சிகளைக் கண்டுகளிக்க முடியும் என்பதை ஊகித்துக் கொள்ளலாம்.

காந்தி மகானின் பேரன்புக்குப் பாத்திரர்களான ஸ்ரீமதி மீராபென், பியாரிலால், தேவதாஸ் காந்தி இம்மூவரும் ஆங்கிலத்தில் விமர்சனம் செய்கிறார்கள். உலகின் பல பகுதிகளில் உள்ள எல்லா நாடுகளிலும் இந்தப் படத்தைக் காண்பிக்க உத்தேசித்திருக்கிறார்கள்.

அதற்குத் தகுந்தவாறு பின்னணி சங்கீதம் மேல்நாட்டு முறையிலும், இந்திய, மத்திய கிழக்கு நாடுகளில் நிலவும் பாணியைத் தழுவியும் அந்தந்த நாட்டினரும் ரசிக்கக்கூடிய விதத்தில் அமைக்கப் பட்டிருக்கிறது.

இப்படம் ஆகஸ்டு மாதம் முதல் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 10·30 மணிக்குச் சென்னை வெல்லிங்டன் டாக்கீஸில் விசேஷக் காட்சியாகக் காட்டப் படுகிறது. இந்தக் காட்சிக்குச் சென்னை கவர்னர் கனம் ஸ்ரீ ஸ்ரீபிரகாசா தலைமை தாங்குகிறார்.

இந்தப் படம் லாப நோக்கத்துடன் தயாரிக்கப் படவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. இதன் மூலம் கிடைக்கும் வருமானம் யாவும் அகில இந்திய காந்தி ஞாபகச் சின்ன நிதியில் சேர்க்கப் படும். மேற்படி நிதிக்கு அந்தந்த மாகாணத்தில் கிடைக்கும் தொகை அந்தந்த மாகாண மக்களின் நன்மைக்காகவே உபயோகிக்கப்படும் என்பதையும் நினைவூட்ட விரும்புகிறோம். எனவே, சென்னை மாகாண மகாஜனங்கள் திரள் திரளாகச் சென்று காந்திஜியைத் தரிசித்து, காந்தி ஞாபகச் சின்ன நிதிமூலம் ஏழை மக்களுக்கு உதவி புரிவார்களாக.

மட்டம் என்று தெரிந்தும் கட்டிக் கொண்டு அழுவதேன்?

இந்திய நாட்டில் ஆரம்பப் பள்ளிக்கூடங்களிலும் உயர்தரப் பள்ளிகளிலும் படிக்கும் லட்சக்கணக்கான மாணவர்களுக்கும், அவர்களுக்குப் பாடம் போதிக்கும் ஆசிரியர் பெருமக்களுக்கும், கல்வி இலாகா அதிகாரிகளுக்கும், கனம் பொருந்திய கல்வி மந்திரிகளுக்கும் இரண்டு வாரத்துக்கு முன்பு பண்டித ஜவாஹர்லால் நேரு ஒரு நல்ல அத்தாட்சிப் பத்திரம் கொடுத்தார்.

ஆரம்பப் பள்ளிக்கூடங்களிலும், உயர்தரப் பள்ளிகளிலும் இப்போது அளிக்கப்படும் கல்வி "முற்றும் பயனற்றது" என்றார். அவர் உபயோகித்த (Utterly Useless) என்ற ஆங்கிலச் சொற்களில் உள்ள வன்மை தொனிப்பதற்கு "மட்டத்திலும் மட்டமானது" என்று சொல்வதும் பொருத்தமாயிருக்கும்

தற்போது அமுலில் உள்ள கல்வி முறைக்குப் பண்டித ஜவாஹர்லால் நேரு அளித்த பட்டம் அந்தக் கல்வி முறையில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் பொருத்தமானதுதானே !

இத்தகைய மட்டத்திலும் மட்டமான 'முற்றிலும் பயனற்ற' கல்வி முறையை நாடெங்கும் எத்தனை லட்சம் சிறுவர் சிறுமியர் பயின்று வாணாளை வீணாக்கி வருகிறார்கள் !

அந்தக் கல்வியைப் போதிப்பதில் எத்தனை ஆயிரம் ஆசிரியர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள் ! ஈடுபட்டிருப்பதுமல்லாமல் "சம்பளம் போதாது !" என்று முறையிட்டுக் கொண்டும் வருகிறார்கள் !

இந்தக் கல்வி முறையை நிர்வகித்து நடத்தி வைப்பதற்குக் கல்வி இலாகாக்கள் எத்தனை ! அவற்றில் பெரும் சம்பளங்கள் வாங்கிக் கொண்டு டைரக்டர்கள், உதவி டைரக்டர்களாகப் பதவி வகிப்பவர்கள் எத்தனை பேர் !

கனம் கல்வி மந்திரிகள், அவர்களுடைய காரியதரிசிகள், சிப்பந்திகள் எத்தனை எத்தனை பேர் !

இவ்வளவு மட்டத்திலும் மட்டமான முற்றிலும் உபயோகமற்ற கல்வி முறைக்காக எத்தனை கோடி ரூபாய் வருஷந்தோறும் பொது மக்களும் சர்க்காரும் செலவழித்து வருகிறார்கள் !

இந்தியா சுதந்திரம் பெற்ற ஏழு ஆண்டு காலத்தில் ஆரம்பக் கல்விக்கும் உயர்தரப் பள்ளிகளுக்கும் தேசமெங்குமுள்ள இராஜ்ய சர்க்கார்களும் மத்திய சர்க்காரும் செலவு செய்யும் தொகை மட்டும் ஐம்பது கோடிக்கு மேல் அதிகரித்திருக்கிறது ! தனிப்பட்ட தர்மவான்களும் பொது மக்களும் செலவு செய்திருக்கும் தொகை நூறு கோடிக்கு மேல் இருக்கும் ! (சர்க்கார் செலவு செய்வதும் பொது மக்களிடம் இருந்து வசூலிக்கும் வரிப் பணந்தான் என்பதை மறக்க வேண்டாம் !)

இவ்வளவு மகத்தான தொகையை விழுங்கி ஏப்பம் விட்டுக் கொண்டிருக்கும் முற்றிலும்


மணியம்
ஆசிரியர்
கல்கி
எழுதும்
அமர தாரா
சமூகத் தொடர்கதை
அன்னை தந்தையை இழந்த அநாதைப் பெண் இந்துமதி; வாழ்க்கையில் வெற்றியின் சிகரத்தைக் காண்கிறாள்; புகழும் செல்வமும் சுகபோகமும் அவள் காலடியில் கிடக்கின்றன!
அவ்வளவையும் ஒருநாள் அடித்த வாழ்க்கைப் புயலில் இழந்து விடுகிறாள்; துன்பக்கடலில் விழுந்து தவிக்கிறாள்!
இந்த உலகில் வாழும் மனிதர்களிலே அன்பே உருவமான அமரர்களும் உண்டு, இரக்கமென்பதறியாத அரக்கர்களும் உண்டு என்று காண்கிறாள்.
அந்தப் பெண்மணியின் அன்பும் இன்பமும் பெருமிதமும் பெருந் துயரமும் ததும்பும் வாழ்க்கை வரலாறுதான் அமர தாரா!
செப்டம்பர் 5ம் இதழில் ஆரம்பமாகிறது

பயனற்ற கல்வி முறையைப் பயனுள்ள நல்ல முறையாக மாற்றி அமைப்பதற்கு இதுவரை யாராலும் முடியவில்லை! இந்தியா சுதந்திரம் அடைந்து ஏழு ஆண்டுகள் ஆகியும் முடியவில்லை! —இது எவ்வளவு பரிதாபமான நிலைமை என்று சொல்லவும் வேண்டுமா!

ஆஜ்மீரில் சென்ற வாரத்தில் கூடிய அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியிலும் பண்டித நேரு நமது கல்வி முறையைப் பற்றிப் பிரஸ்தாபித்தார்.

"பதினாயிரம் என்ஜினியர்களையும் ஓவர்ஸியர்களையும் கொண்டு வாருங்கள்! அத்தனை பேருக்கும் நான் வேலை சம்பாதித்துக் கொடுக்கிறேன். ஆனால் வெறும் பி. ஏ.க்களுக்கும், எம். ஏ.க்களுக்கும் என்னால் உத்தியோகம் கொடுக்க முடியாது!" என்று சொன்னார்.

ஆனாலும் பண்டித ஜவாஹர்லால் அவர்களின் ஆட்சியின் கீழ், வெறும் பி. ஏ., எம். ஏ., பட்டதாரிகளை உற்பத்தி செய்யும் கலாசாலைகள் அதிகமாகிக் கொண்டிருப்பதேன்!

என்ஜினியரிங் கல்லூரிகளில் "இடமில்லை" என்று மாணவர்களை நிராகரித்துக் கொண்டிருப்பதேன்! மட்டமானதென்று நன்றாகத் தெரிந்துள்ள கல்வி முறையை இன்னமும் கட்டிக் கொண்டு அழுவதேன்!

கொரியாப் பிரச்னையும், இந்தோ சீனப் பிரச்னையும் இப்போது ஒருவாறு தீர்ந்து விட்டபடியால், நமது மாபெருந் தலைவர் நேரு நமது கல்விப் பிரச்னையின் மீது கவனம் செலுத்த வேண்டும் என்று விரும்புகிறோம்.

அவரே கூறுகிறபடி முற்றிலும் பயனற்றதாயும் கோடானு கோடி ரூபாய்களை விழுங்குவதாயுமுள்ள இந்த மட்டமான கல்வி முறையை மாற்றி அமைக்கப் பண்டித ஜவாஹர்லால் நேரு மனம் வைத்து முயற்சி செய்தால் முடியும்.

அப்படி அவர் முயற்சி தொடங்கும்போது, நாட்டில் உள்ள படித்த முட்டாள்கள் படிக்காத முட்டாள்கள் எல்லாருமாகச் சேர்ந்து நேருஜியைப் பிரதம மந்திரி பதவியினின்றும் துரத்த முயன்றாலும் முயல்வார்கள்!

ஆனால் தீரர் ஜவாஹர்லால்ஜி அம்மாதிரி முயற்சிகளுக்கெல்லாம் அஞ்சிப் பின் வாங்கி விடமாட்டார் அல்லவா!

ஆகஸ்டு முதல் தேதி

குடியாத்தம் தொகுதியில் வாழும் சகோதர சகோதரிகளுக்கு ஆகஸ்டு முதல் தேதி ஒரு விசேஷத் திருநாளாகும்.

அன்று குடியாத்தம் தொகுதியில் சென்னை ராஜ்ய சட்டசபைக்கு உபதேர்தல் நடைபெறுகிறது.

இந்த உபதேர்தலில் காங்கிரஸ் அபேட்சகராகச் சென்னை ராஜ்ய முதன் மந்திரி ஸ்ரீ காமராஜ் நாடார் நிற்கிறார்.

ஸ்ரீ காமராஜ் நாடார் ஏப்ரல் மாதம் சென்னை ராஜ்ய முதன் மந்திரியானார்.

அவர் பதவிக்கு வந்தபின் குடியாத்தம் தொகுதியில்தான் முதன் முதலில் உபதேர்தல் நடக்கிறது. அந்த வாய்ப்பைப் பயன் படுத்திக் கொண்டு தங்கள் தொகுதியில் நிற்குமாறு குடியாத்தம் மக்களில் பலர் ஸ்ரீ காமராஜரைக் கேட்டுக் கொண்டனர். எனவே குடியாத்தம் தொகுதியில் அவர் அபேட்சகராக நிற்கிறார்.

இந்த உப தேர்தலில் அவர் வெற்றி பெறுவார் என்பது உறுதியானாலும் அதை எண்ணி அலட்சியமாக இருந்து விடக் கூடாது.

குடியாத்தம் தொகுதியில் உள்ள வயது வந்த ஒவ்வொருவரும் இந்த உப தேர்தலில் தங்கள் வோட்டு உரிமையை அவசியம் பயன் படுத்த வேண்டும். காங்கிரஸின் சின்னமாகிய இரட்டை மாட்டுப் பெட்டியில் கவனத்துடன் வோட்டுப் போட வேண்டும்.

அவரவர்கள் வோட்டுப் போடுவது மட்டும் போதாது. காங்கிரஸ் அபேட்சகர் ஸ்ரீ காமராஜ் அமோகமாக வெற்றிபெற அவர்களால் இயன்ற வரை பிரயத்தனம் செய்ய வேண்டும். அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் அலட்சியமாய் இருந்து விடாமல் ஆகஸ்டு முதல் தேதியன்று வோட்டுச் சாவடிக்குப் போய் வோட்டுப் போடும்படி தூண்ட வேண்டும்.

ஸ்ரீ காமராஜ நாடார் தமிழ் நாட்டுக்கும் காங்கிரஸுக்கும் செய்து வந்திருக்கும் நெடு நாளையத் தொண்டைக் குறித்துப் புதிதாக ஒன்றும் சொல்ல வேண்டியதில்லை. சாதாரண தொண்டராக இருந்து, மாகாண காங்கிரஸ் தலைவராகி, அகில இந்திய காங்கிரஸ் காரியக் கமிட்டியிலும் இடம் பெற்றவர். கடைசியாக இப்போது 'ஆங்கிலம் படித்த பட்டதாரிகள்தான் அரசாங்க நிர்வாகம் செய்ய முடியும்' என்ற தவறான நம்பிக்கையைப் பொய்ப்பித்து நாட்டுக்குப் பெருந் தொண்டு ஆற்றியிருக்கிறார். இந் நாட்டில் பிறந்த ஒவ்வொரு பிரஜையும் இந்திய ஜனநாயக ஆட்சியில் எவ்வளவு உயர்ந்த பதவியையும் அடையலாம் என்று நிரூபித்திருக்கிறார். ஆதலின், இந்தியாவில் உண்மையான ஜனநாயகம் நிலைபெறுவதற்கு ஒப்பற்ற தொண்டு செய்திருக்கிறார்.

குடியாத்தம் உபதேர்தல் முடிவு வெளியாகும் போது மிகப் பெரும்பாலான மக்களின் வோட்டுகள்மூலம் காங்கிரஸ் அபேட்சகர் ஸ்ரீ காமராஜ நாடாரை, சென்னை ராஜ்யத்தின் முதன் மந்திரியை, பெருமிதத்துடன் தேர்ந்தெடுத்தோம் என்ற நல்ல பெயர் குடியாத்தம் தொகுதியில் நிலைநாட்டப்படும் என்று நம்புகிறோம்.

துரோகத்தின் பலன்!

—கொழும்பு, ஜூலை மீ 24உ

சுமார் இரண்டு லட்சத்துக்கு அதிகமான இந்திய வம்சாவளியினர்களை இலங்கையிலிருந்து நாடு கடத்தும் கைங்கர்யத்தை இந்திய ஹைகமிஷனர் ஸ்ரீ தேசாய் சென்ற வாரம் செய்திருக்கிறார். வாச பர்மிட்டு முடிந்தவர்களை நாடு கடத்தும் ஒரு ஏற்பாட்டுக்கு இலங்கை அரசாங்கத்துக்குச் சகல விதத்திலும் உதவி புரிவதாக அவர் வாக்களித்துள்ளது, இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளியினர்களுக்குப் பெரும் அதிர்ச்சியை விளைவித்துள்ளது.

இங்குள்ள சுமார் பத்து லட்சம் இந்திய வம்சாவளியினர்களில் எட்டு லட்சம் பேர் தோட்டத் தொழிலாளர்கள். மற்ற இரண்டு லட்சம் பேர்களும் நகரப் புறங்களில் வசிப்பவர்கள். தோட்டத்



ஐயப்பன் நாடகம் பார்த்துவிட்டு, ராஜாஜி நவாப் ராஜமாணிக்கம் நாடக மேடை மூலமாகப் பக்தியை வளர்ப்பதற்குச் செய்து வரும் முயற்சியைப் பாராட்டினார். மகிழ்ச்சியுடன் ஸ்ரீ ராஜமாணிக்கத்தின் நெற்றியில் விபூதியும் இட்டார்.

தொழிலாளர் சமீப காலம் வரையில் தோட்ட முதலாளிமார்கள் கொடுத்த பற்றுச் சீட்டுகளை வைத்துக் கொண்டு பிரயாணம் செய்து வந்தார்கள். நகரப்புறங்களிலிருந்த இரண்டு லட்சம் பேர்கள் மட்டுமே இமிகிரேஷன் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டுப் பிரயாணத்துக்காகவும் வேறு பல காரணங்களுக்காகவும் பாஸ்போர்ட்டும் அவற்றில் வாச பர்மிட்டும் வாங்கியிருக்கின்றனர். இவர்களில் இலங்கைப் பிரஜாவுரிமைக்குச் சட்டப்படி மனுக் கொடுத்தவர்களும் அனேகர் இருக்கின்றனர். இலங்கைப் பிரஜாவுரிமைக்கு மனுக் கொடுத்தவர்களுக்குப் பிரத்தியேகமான பிரயாண தஸ்தாவேஜுகளை இலங்கை அரசாங்கம் வழங்காமலிருந்ததை முன்னிட்டும் இந்தியர் பாகிஸ்தானியர் பிரஜாவுரிமைச் சட்டத்தின்படி இலங்கைப் பிரஜாவுரிமை பெறத் தாங்கள் இந்திய வம்சாவளியினர்தான் என்பதை முதலில் நிரூபிக்க வேண்டியிருந்ததாலும் இவர்களும் இந்திய பாஸ்போர்ட் வாங்க வேண்டிய அவசியமேற்பட்டது. இதிலிருந்து இந்திய பாஸ்போர்ட்டும் அதில் வாச பர்மிட்டும் வாங்கியவர்களெல்லாம் இந்தியப் பிரஜைகளல்லவென்பது தெளிவானது. இந்திய மத்திய அரசாங்கம் சொல்லி வந்ததும் இதுவரையில் இந்தக் கொள்கைதான்.

தற்சமயம் சுமார் 25,000 பேர்களுடைய வாச பர்மிட்டுகள் காலாவதியாகி விட்டன. இவர்களை நாடு கடத்துவது பற்றி இந்திய ஹை கமிஷனர் ஸ்ரீ தேசாய்க்கும் இலங்கைப் பிரதம மந்திரிக்குமிடையில் ஒரு மகாநாடு நடை பெற்றது. இந்த 25000 பேர்களில் அடுத்த மூன்று மாதங்களுக்குள் ஐயாயிரம் பேர்களையும் அதன் பிறகு கோஷ்டி கோஷ்டியாக மற்றவர்களையும் இந்தியாவுக்கு நாடு கடத்திவிட இலங்கை தயாரித்த திட்டத்தை ஸ்ரீ தேசாய் அப்படியே ஒப்புக் கொண்டிருப்பதுடன், இவ் விபரீதத் திட்டத்தை வெற்றிகரமாக நடத்தி வைக்க உதவி புரியவும் உறுதி கூறியிருக்கிறார்.

முதலில் சுமார் ஐயாயிரம் பேர்கள் மட்டும் தானே நாடு கடத்தப்படவிருக்கிறார்கள் என்று நினைக்கலாம். ஐயாயிரம் பேர்களானாலும் சரி அல்லது ஐந்து பேர்களானாலும் இந்தியா பாஸ்போர்ட் வைத்திருப்பவர்களெல்லாம் இந்தியப் பிரஜைகள்தான் என்பதையும் அவர்களைக் கட்டாயத்தின் பேரில் நாடு கடத்த இலங்கைக்கு உரிமை உண்டென்பதையும் இந்திய ஹை கமிஷனர் கொள்கையளவில் அங்கீகரித்ததின் விளைவு மிகவும் பாரதூரமானது.

(1) முதலாவதாக முன்னாள் பிரதமர் ஸ்ரீ டி. எஸ். சேனநாயகா இலங்கைப் பிரஜைகளாகாத இந்திய வம்சாவளியினர் இலங்கையில் ஜீவிய காலம் வரை தொடர்ந்திருக்க அனுமதிக்கப்படுவார்களென்று வாக்குறுதியளித்தார். யானை தன்னுடைய தலையில் தானே மண்ணை வாரிப் போட்டுக் கொண்ட மாதிரி இந்த வாக்குறுதியை

இந்திய ஹை கமிஷனரின் நடவடிக்கை செல்லாக் காசாக்கி விட்டது.

(2) முன்னாள் பிரதமருடைய வாக்குறுதியை அனுசரித்து இந்தியர்களுக்கு வாசபர்மிட்டுகளைப் புதுப்பித்துக் கொடுக்குமாறு கேட்க இமிகிரேஷன்சட்டத்தின் 14 (3) (பி) ஷரத்தில் உரிமையளிக்கப் பட்டிருந்தது. இதை மீறி இலங்கை காரியங்கள் செய்ய இந்திய ஹை கமிஷனர் இந்திய அரசாங்கத்தின் பெயரினால் சர்வ சுதந்திரமளித்து விட்டார்.

(3) பிரஜாவுரிமைக்கு மனுக் கொடுத்திருந்தாலும் இந்திய பாஸ்போர்ட் வைத்திருப்பவர்களெல்லாம் இந்தியப் பிரஜைகள் என்ற ஒரு விபரீதமான கொள்கையை அவர் அங்கீகரித்திருக்கிறார்.

(4) இப்பொழுது வாசர்பர்மிட் காலாவதியாகியுள்ள 25,000 பேர்களை மட்டுமின்றி அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள் வாசர்பர்மிட் காலாவதியாக வேண்டிய மற்றும் சுமார் ஒரு லட்சம் பேர்களை இந்தியாவுக்கு நாடு கடத்தவும் இலங்கைக்கு இனி அதிகாரமுண்டு.

(5) நாடற்றவர்களுக்கு வேலையும் ரேஷனுமில்லையென்று இலங்கை அரசாங்கம் பொருளாதார நிர்ப்பந்தங்களைத் திணிக்கும் பொழுது மற்றும் பல்லாயிரக்கணக்கான இந்திய வம்சாவளியினர் இந்தியா பாஸ்போர்ட்டுகளைக் கட்டாயத்தின் பேரில் வாங்க நேரிடலாம். அவர்களையெல்லாம் வேண்டாத சமயம் இலங்கை அரசாங்கம் நாடு கடத்துவதை இனி யாரும் தடுக்க முடியாது.

(6) கட்டாய நாடு கடத்தலுக்கு இந்தியா சம்மதிக்க முடியாதென்றும் அதற்குச் சம்மதித்தால் தென்னாப்ரிக்காவிலுள்ள இந்தியர்களையும் இந்தியா திருப்பி அழைத்துக் கொள்ள நேருமென்றும் ஆரம்ப முதற்கொண்டு பாரதப் பிரதமர் நேருஜி சொல்லி வந்தார். இதன் காரணமாக லண்டனில் சென்ற வருடம் நடைபெற்ற நேரு—சேனநாயகா ராஜிப் பேச்சுகள் முறிந்து போயின. இவ் வருடம் டில்லியில் பேச்சுகள் நடந்தபொழுதும் நேருஜி வலியுறுத்திய இந்தக் கொள்கையை இலங்கை அரசாங்கம் ஒப்புக் கொண்டிருந்தது. இப்பொழுது ஒரு நொடியில் இக் கொள்கையை ஸ்ரீ தேசாய் தவிடுபொடியாக்கி விட்டார்.

டில்லியில் கைச்சாத்திடப்பட்ட இலங்கை—இந்தியா ஒப்பந்தத்தின் ஒரு ஷரத்தைக் கூட இலங்கை அரசாங்கம் மதித்து நடக்காதிருக்கும் சமயத்தில் நாடு கடத்தலைப் பற்றிப் பேசுவதற்கே சம்மதிக்கக் கூடாதென்று இலங்கை ஜனநாயக காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ எஸ். தொண்டமான் பலமாக எச்சரித்தார். இந்த எச்சரிக்கையையும் அலட்சியம் செய்து பல ஆயிரம் பேர்களின் வயிற்றெரிச்சலை ஸ்ரீ தேசாய் வாரிக் கட்டிக் கொண்டிருக்கிறார். இலங்கையைத் திருப்திப் படுத்துவதற்காக இந்திய வம்சாவளியினருக்குத் துரோகம் செய்யத் துணிந்த ஸ்ரீ தேசாய்க்குக் கைமேல் கிடைத்த பலன் என்ன தெரியுமா! சென்ற சர்க்கார் கட்சிக் கூட்டத்தில் முன்னாள் பிரதமர் ஸ்ரீ டட்லி சேனநாயகா உள்படப் பல பிரபல சர்க்கார் கட்சி அங்கத்தினர்கள் ஸ்ரீ தேசாயைப்பற்றித் தாறுமாறாகப் பேசினார்கள். அவருக்கு மூளைக் கோளாறு ஏற்பட்டிருக்க வேண்டுமென்று பிரதம மந்திரியே பார்லிமெண்டில் பகிரங்கமாகச் சொன்னார். இப்பொழுது தேசாயைத் திருப்பி அழைத்துக் கொள்ளுமாறு நேருஜியிடம் கேட்பது பற்றி இலங்கை மந்திரிசபை யோசித்து வருகிறது. இவ்வளவு ஆர்ப்பாட்டத்துக்கும் இலங்கை கண்ணிய மற்ற முறையில் நடப்பதாக ஸ்ரீ தேசாய் சொன்னாரென்று ஒரு பத்திரிகை பிரசுரித்தது தான் காரணமாம்! தன்வினை தன்னைச் சுடும் என்பதுபோல இந்திய வம்சாவளியினருக்குச் செய்த துரோகத்தின் பலன் இன்று ஸ்ரீ தேசாய்க்குக் கைமேல் கிடைத்துக் கொண்டிருக்கிறது. ஒரு தென்னாட்டுத் தமிழர் இலங்கையில் இந்திய ஹை கமிஷனரா யிருந்திருந்தால் இந்தியாவையும் இந்திய ஹை கமிஷனையும் இந்தியர்களையும் அவமதித்து அவமானப் படுத்தும் இன்றைய இழி நிலை ஏற்பட்டிருக்குமா!

—ரஜனி

அட்டைப் பட விளக்கம்

சிறு கதை

ஒரு வீட்டில் ஒரு புருஷனும் ஸ்திரீயும் குடியிருந்தார்கள். ஒரு நாள் இரவில் புருஷன் வீட்டுக்கு வரும் போது ஸ்திரீ சமையல் செய்து கொண்டிருந்தாள். சோறு பாதி கொதித்துக் கொண்டிருந்தது. அந்த ஸ்திரீ அன்றிரவு கொஞ்சம் உடம்பு அசௌகரியமாக யிருந்தபடியால், தனக்கு ஆஹாரம் வேண்டா மென்று நிச்சயித்துப் புருஷனுக்கு மாத்திரமென்று சமைத்தாள்.

புருஷன் வந்தவுடன், "நான் இன்றிரவு விரத மிருக்கப் போகிறேன். எனக்கு ஆஹாரம் வேண்டாம்" என்றான்.

உடனே பாதி கொதிக்கிற சோற்றை அவள் அப்படியே சும்மா விட்டு விட்டு அடுப்பை நீரால் அவித்து விடவில்லை. தங்களிருவருக்கும் உபயோக மில்லாவிடினும் மறு நாள் காலையில் வேலைக்காரிக்கு உதவு மென்று நினைத்து. அது நன்றாகக் கொதிக்கும் வரை காத்திருந்து வடித்து வைத்து விட்டுப் பிறகு நித்திரைக்குச் சென்றாள்.

அதுபோலவே, கர்மயோகி தான் ஒரு தொழில் செய்யத் தொடங்கி, இடையிலே அது தனக்குப் பயனில்லை யென்று தோன்றினால், அதை அப்படியே நிறுத்திவிட மாட்டான். பிறருக்குப் பயன் தருமென்பதைக் கொண்டு, தான் எடுத்த வேலையை முடித்த பிறகே வேறு காரியம் தொடங்குவான்.

பிரார்த்தனை

கிழவனுடைய அறிவு முதிர்ச்சியும், நடு வயதிற்குள்ள மனத்திடனும், இளைஞருடைய உத்ஸாஹமும், குழந்தையின் ஹ்ருதயமும், தேவர்களே, எனக்கு எப்போதும் நிலைத்திருக்கும்படி அருள் செய்க.

— அமரகவி சுப்பிரமணிய பாரதியார்

* எங்கள் ஊர்ப் பஞ்சாயத்து

மூன்று அதிசயங்கள்!

திருநெல்வேலி ஜில்லா நாங்குனேரி தாலுகாவில் களக்காடு என்னும் கிராமம் இருக்கிறது. ஒன்பது மைல் சுற்றளவு உள்ளதும் இருபதினாயிரம் மக்களைக் கொண்டதும், வருஷம் ஒன்றுக்கு ஐம்பதினாயிரம் ரூபாய் வருமானம் உள்ளதுமான ஒரு மேஜர் பஞ்சாயத்துப் போர்டு உண்டு. இங்கு 1953-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் சர்வஜன வாக்குரிமைப்படி நேரடியாக, மக்களே தலைவர், அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுத்தார்கள். பதின்மூவாயிரம் வோட்டர்கள் இருந்தும் ஏழாயிரம் பேர்தான் வோட்டளித்தார்கள். காரணம் எங்களூர்ப் பஞ்சாயத்து தோன்றிய காலம் முதற்கொண்டு இன்று வரை மக்களுக்கு எத்தகைய பயனும் இல்லை என்று மனம் நொந்து, 'ராமர் ஆண்டால் என்ன ராவணன் ஆண்டால் என்ன' என்ற நிலைக்கு மக்கள் வந்து விட்டார்கள்.

இங்குள்ள மக்கள் பெரும்பாலும் விவசாயத் தொழிலை நம்பி வாழ்பவர்கள். யூனியன் தோன்றிய காலத்திலிருந்து மேஜர் பஞ்சாயத்தாகக் காட்சியளித்து மக்களே நேரடியாகத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் காலம் வரை உள்ள சரித்திரத்தில் இப்போது இருக்கும் தலைவர்தான், பட்டதாரியும், வயதில் குறைந்தவரும் சர்க்கார் உத்தியோகத்தை ராஜினாமா செய்தவருமாவார். இவைகளைத் தவிர எங்கள் பஞ்சாயத்துத் தலைவரைப் பற்றி விசேஷமாய்ச் சொல்வதற்கு ஒன்றுமில்லை.

அவருடைய நிர்வாகத்தைப் பற்றிக் குறிப்பிட வேண்டுமானால் நல்ல முறை என்பதை விட்டுவிட்டுப் புதிய முறை என்று கூறலாம். உதாரணமாக பஞ்சாயத்துக் கூட்டம் நடக்கும்போது பொது ஜனங்களைப் பார்வையாளராக அனுமதிப்பதில்லை. இது எந்தப் பஞ்சாயத்திலும் இல்லாத 'புதிய முறை' அல்லவா ! தலைவர் அவர்களின் நிர்வாகத் திறமைக்கு இது ஒரு எடுத்துக் காட்டு. ஏனைய பஞ்சாயத்துகளைப் போல் எங்கள் ஊரிலும் பொது வாசகசாலை இருக்கிறது. ஆனால் எங்களூர் வாசகசாலை மிக மிக விசேஷமானது என்பதற்கு வாசகசாலையின் விஸ்தீரணமே சான்று. பத்து அடி நீளமும் ஐந்தடி அகலமுமுள்ள இந்த அறை பஞ்சாயத்துச் சபைக் காரியாலயத்தின் ஒரு பக்கத்தில் உள்ளது. இங்கு வரும் பத்திரிகையோ ஒரு தமிழ்த் தினசரி, ஒரு ஆங்கில தினசரி, இரண்டு வாரப் பத்திரிகைகளைத் தவிர வேறு எதுவும் கிடையாது. பத்திரிகை படிக்க விரும்பிய மக்கள் வாசக சாலைக்குச் சென்று பத்திரிகையைக் கையிலெடுத்துப் பார்த்தால் சில பத்திகளே இருக்காது. சில சமயம் பக்கங்களே இருக்காது. வாரப் பத்திரிகைகளைப் பார்த்தால் அதை அங்கு கண்டு பிடிக்க முடியாது. அங்குள்ள சிப்பந்தி பிடத்தில் சிறிது கடுமையான குரலில் கேட்டால் சைக்கிளில் சவாரி செய்து தலைவருடைய வீட்டில் இருந்து ஒன்றும், நிர்வாக அதிகாரி வீட்டில் இருந்து ஒன்றும் ஆக இரண்டும் கொண்டு தருவார்.

இது தவிர வீதிகளிலும், முடுக்குகளிலும் உள்ள மண்ணெண்ணெய் விளக்குகள் இரவு எட்டு மணிக்கு வேலை நிறுத்தம் செய்ய ஆரம்பித்து விடும், வயிற்றுக்கு எண்ணெய் காணாது என்ற காரணத்தால். விஷயத்தை விளக்கிச் சபையாருக்குத் தெரிவித்தால் இரண்டு நாளைக்கு ஒன்பது மணிவரை வெளிச்சம் கொடுத்து, நான்காவது நாள் முந்திய நிலைமைக்கே வந்து விடும். எங்களூர் கிராமம் ஆனதால் ஆறுகளும் கிணறுகளும் உண்டு என்றாலும் அவைகள் ஊரிலிருந்து சற்று தூரம் தள்ளி இருக்கின்றன. இதற்காகக் கருணை கூர்ந்து பஞ்சாயத்துப் போர்டார் சில தண்ணீர்க் குழாய்களைத் தந்தருளி யிருக்கிறார்கள். அவைகளெல்லாம் வேடிக்கையானதும், விசித்திரமானதுமாகத்தா னிருக்கும். சில குழாய்களில் 'கைப்பிடி' இராது. அப்படியே இருந்தாலும் அதில் உள்ள ஆணி இருக்காது. தண்ணீர் எடுக்கச் செல்லும் அந்தப் பகுதி மக்கள் ஆளுக்கொரு ஆணியைக் கையில் எடுத்துச் செல்வார்கள். எங்களுக்கு இது புதிதல்ல, பழகிப் போன விஷயம். சில இடங்களில் தண்ணீர் எடுக்கப் போகும் ஜனங்கள் ஆளுக்கொரு குவளைத் தண்ணீர் கொண்டு செல்வது வழக்கம். காரணம் குவளைத் தண்ணீரைக் குழாயில் விட்டுச் சிறிது நேரம் அடித்தால்தான் குடம் நிறையத் தண்ணீர் கிடைக்கும். இவைகள் எல்லாம் பஞ்சாயத்துச் சபையாரின் மேலான பராமரிப்பில் உள்ளவை.

களக்காடு வருபவர்கள் முக்கியமாக மூன்று இடங்களைப் பார்க்க வேண்டும். காரணம் அதிசயம் மிகுந்த இடங்கள் அவை. 1. சுதந்திரப் பூங்கா. 2. காந்தி மகான் சிலை. 3. பூங்காவன



சாலை. சுதந்திரப் பூங்காவனத்தில்தான் இருபதாயிரம் மக்களுக்காக ஒரு ரேடியோ வைத்திருக்கிறார்கள். இந்தப் பூங்காவினுடைய விஸ்தீரணம் மேலே சொல்லிய வாசகசாலையை விடச் சிறிது அகலம். நல்ல பாட்டோ அல்லது செய்திகளோ ரேடியோவில் வந்து விட்டால் போதும் ; பூங்காவன சாலையில் நடந்து வருபவர்களின் முழங்கால் வரையுள்ள புழுதியைக் கழுவப் பூங்காவனத்திலுள்ள குழாயை இயக்க ஆரம்பித்து விடுவார்கள். அவ்வளவுதான், ரேடியோ சத்தமே கேட்காது. மகாத்மா காந்தியடிகளின் சிலையை எடுத்துக் கொண்டால் இதுதான் 'மகாத்மா காந்தி' என்று கொட்டை எழுத்தில் ஒரு போர்டு எழுதிச் சிலையின் பக்கம் வைத்தாலுங் கூட காந்தி சிலைதானா என்று சந்தேகப்படுமளவுக்குச் சிலையைச் சிருஷ்டி செய்திருக்கின்றார்கள் பஞ்சாயத்து சபையார். இதற்காக செலவு செய்த பணத்தைக் கொண்டு அமெரிக்காவிலிருந்து காந்தி சிலையைத் தருவித்திருக்கலாம்!

அயலூர் வாசிகள் எங்கள் ஊருக்கு வருவதானால் மல - ஜலங்களை அவரவர் ஊரிலேயே கழித்து விட்டுத்தான் இவ்விடம் வரவேண்டும்.

* இந்தக் கட்டுரைப் பரிசுப் போட்டிக்கு நாளது ஆகஸ்டு 15உ வரை கட்டுரைகள் அனுப்பி வைக்கலாம்.

இது சட்டமல்ல. ஆனால் மல - ஜலம் கழிக்க வசதி கிடையாது. சுமார் ஒரு மைல் சென்றால் தான் மல - ஜலம் கழிக்க வசதி உண்டு. உள்ளூர் வாசிகள் பாடோ, சிறுநீர் கழிக்க வேண்டுமானால் கூட ஊரை ஒரு தரம் வலம் வர வேண்டியதா யிருக்கும். வேறு வழி கிடையாது.

'பஞ்சாயத்து அங்கத்தினர்களின் கடமை' என்னும் புத்தகம் கிடைக்குமானால் அதில் சில புஸ்தகங்களும் அதைச் சொல்லிக் கொடுக்க ஓர் உபாத்தியாயரையும் அனுப்பி வைத்தால் ஒரு வேளை அங்கத்தினர்கள் அதைப் படித்துத் தெரிந்து கொண்ட பிறகு, தங்களின் கடமை என்ன என்று தெரிந்து கொள்வார்களோ என்னவோ நாமறியோம். டெண்டர்களைப் பரிசிலனை செய்யும் நாட்களைத் தவிர மற்ற நாட்களில் பஞ்சாயத்துச் சபைக் கூட்ட நடவடிக்கைகளில் எல்லா அங்கத்தினர்களையும் காண்போமே யானால் அது உலக அதிசயத்தில் ஒன்று, என்று நிச்சயமாகக் கூறி விடலாம்.

வரிகள் விஷயமாய்ப் புதுவரிகள் ஒன்றும் விதிக்கவில்லையானாலும் பழைய வரிகளில் உள்ள ஏற்றத் தாழ்வுகளைநீக்க இதுவரை எதுவுமே செய்யவில்லை. புதிய திட்டங்கள் எதுவும் எங்கள் பஞ்சாயத்துச் சபையில் உருவாகவில்லை. ஆனால் மக்களுக்காகச் செய்ய வேண்டிய நல்ல காரியங்கள் எத்தனையோ இருக்கின்றன. எங்களூரில் பிரசவ விடுதி கிடையாது. இருக்கும் லோக்கல் பண்ட் ஆஸ்பத்திரியில் சரியான மருந்தும் போதுமான வசதியும் கிடையாது. பெண்களுக்கான தனி ஆரம்பப் பாடசாலைகளோ, வசதியுள்ள பஸ் நிலையமோ, வாரச் சந்தைகளோ அல்லது தினசரிச் சந்தைகளோ, பொழுதுபோக்கு நிலையங்களோ கிடையா. மொத்தத்தில் சொல்லப் போனால் ஒன்றுக்கும் வசதி செய்து தர இயலாத பஞ்சாயத்துச் சபை எங்களூர்ப் பஞ்சாயத்துச் சபை. இந்நிலை என்று மாறுமோ! மக்கள் நலம் அடைவார்களோ!


களக்காடு
18—6—54 எம். எம். இஸ்மாயில்

கடமையை மறந்த அங்கத்தினர்கள்

அபிராமம் மேஜர் பஞ்சாயத்தில் உட்பட்டிருந்த நத்தம் மைனர் பஞ்சாயத்து 1-4-54 முதல் தனியாகப் பிரிந்து, நிர்வாகம் நடத்தி வருகிறது. புதிய பஞ்சாயத்தின் தலைவர் திரு பெரியசாமி நாடார் ஒரு வக்கீல். இந்த நிர்வாகத்துக்குப் புதியவரானாலும் பாராட்டத்தக்க வகையில் நிர்வாகம் நடத்தி வருகிறார்.

பஞ்சாயத்தின் மொத்த அங்கத்தினர்கள் ஏழு பேர். இதில் முஸ்லிம்கள் மூவர். அந்த மூன்று அங்கத்தினர்களும் இதுவரை நடைபெற்ற பஞ்சாயத்துக் கூட்டங்களுக்கு ஆஜராகாமல் பகிஷ்காரம் செய்திருக்கிறார்கள். காரணம் அவர்களின் கோரிக்கைகள் சில நிராகரிக்கப்பட்டன என்று சொல்லப் படுகிறது.

பஞ்சாயத்தின் ஜனத்தொகையில் பாதிக்கு மேற்பட்டவர்கள் ஹிந்துக்களா யிருந்தும் முஸ்லிம்களில் ஒருவரே தலைவராக வரவேண்டுமென அவர்கள் விரும்பினார்கள். முஸ்லிம்கள் பெரிய பெரிய மாடி வீடுகளில் வசிப்பவர்களாயும், ஹிந்துக்கள் சிறு சிறு குடிசைகளில் வசிப்பவர்களாயும் இருப்பதால் முஸ்லிம்களிட மிருந்து வரிமூலமாகப் பஞ்சாயத்தின் வருமானத்தில் பாதிக்கு மேல் கிடைப்பதால், தலைவர் பதவி தங்களுக்கு



இந்த நிலை மாற வேண்டும்!

வேண்டுமென்று சொல்லிப் பார்த்தார்கள். பயன் அளிக்கவில்லை. ஹிந்து ஒருவர் ஓராண்டு காலமும், முஸ்லிம் ஒருவர் ஓராண்டு காலமும் மாறி மாறித் தலைவர் பதவியை வகித்து வருவது என்றும் சொல்லிப் பார்த்தார்கள்; கேட்பாரில்லை.

கடைசியாகத் திரு பெரியசாமிக்குப் போட்டியாக, திரு முகம்மது அபூபக்கர் என்ற பிரபல தனவந்தரை நிறுத்தி வைத்தார்கள். முஸ்லிம்கள் முகம்மது அபூபக்கரையும், ஹிந்துக்கள் பெரியசாமியையும் ஆதரித்துப் பிரசாரம் செய்தனர். தேர்தல் தினம் வரை ஒரு வதந்தி உலவி வந்தது. கிராம வாக்காளர்களை ஒன்று கூட்டிக் கையைத் தூக்கச் செய்து வாக்களித்துத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் முறை எவ்வளவு கெடுதலானது என்பது அப்போது பொதுஜனங்களிடையே பேசிக் கொள்ளப்பட்டது.

திரு முகம்மது அபூபக்கர் ஏழை விவசாயிகளை அணுகி அவர்கள் தமக்கும் வாக்களிக்க வேண்டாம், திரு பெரியசாமிக்கும் வாக்களிக்க வேண்டாம் என்றும், தேர்தல் தினத்தன்று கைதூக்கும் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டாமென்றும் கேட்டுக் கொண்டதாகவும், அதற்கு அவர்கள் இணங்கி விட்டதாகவும் சொல்லிக் கொள்ளப்பட்டது. பகிரங்க வோட்டளிப்பு முறையால், பாவம் ஏழை விவசாயிகள் ஒரு பிரபல தனவந்தரைப் பகைத்துக் கொள்வதா! அல்லது பொருத்தமான ஒரு நபரைத் தேர்ந்தெடுப்பதா! என்ற முடிவுக்கு வர முடியாமல் வெகு சிரமப்பட்டார்கள்.

பின்னர் தேர்தல் தினமும் வந்தது. திரு பெரியசாமி அவர்களின் தீவிரப் பிரசாரத்தால், ஒவ்வொரு வாக்காளரும் கலந்துகொண்டு தைரியமாகக் கைதூக்கி வாக்களித்தனர். பெருவாரியான வாக்குகளால் திரு பெரியசாமி தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இரகசியமாக வோட்டளிக்கும் முறை இருந்திருந்தால் இவ்வித தயக்கங்களுக்கு இடமே இருந்திராது. ஆகவே கைதூக்கும் முறை ஒழிக்கப்பட வேண்டும்.

தலைவர் தேர்தலுக்குத் தாங்கள் நிறுத்திய அபேட்சகர் தோற்றுப் போனதற்காக முஸ்லிம் அங்கத்தினர்கள் மூவரும் தங்கள் கடமையை

மறந்து, கூட்டங்களில் கலந்து கொள்ளாம விருப்பது மிகவும் வருந்தத் தக்கது. பஞ்சாயத்து நல்ல முறையில் நடைபெற்று வரவேண்டுமானால், முஸ்லிம் அங்கத்தினர்கள் ஒத்துழைப்பு அவசியம் வேண்டும். ஏகோபித்த ஒத்துழைப்பால்தான் உருவான பல நல்ல காரியங்கள் செய்ய முடியும்.

அபிராமம் பஞ்சாயத்தைப் பின்பற்றி நத்தம் பஞ்சாயத்தாரும், தங்களுக்குள் ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ளலாம். ஒரு வருடத்துக்கு ஹிந்துக்களில் ஒருவர் தலைவராகவும், முஸ்லிம்களில் ஒருவர் உபதலைவராகவும், மறு வருடத்துக்கு, முஸ்லிம்களில் ஒருவர் தலைவராகவும், ஹிந்துக்களில் ஒருவர் உபதலைவராகவும், மாறி மாறி வந்தால் அவர்களின் தற்போதைய பிணக்கும் தீர்ந்து விடும். ஆண்டுக்கொரு முறை புதுப்புது தலைவர்களாக வந்து, புத்துணர்ச்சியுடன் பல நல்ல சேவைகள் செய்வார்கள் என்பது என் அபிப்பிராயமும் யோசனையுமாகும்.

தற்போது பஞ்சாயத்து நிர்வாகம் நடத்தப் பட்டு வரும் பஞ்சாயத்தின் அலுவலகம் நத்தத்துக்கும் வெகு தொலைவில் அபிராமம் எல்லை ஓரமாக இருக்கிறது. அதை மாற்றி நத்தத்திலோ அல்லது, மூத்தாதி புரத்திலோ அமைத்தால், பொது ஜனங்கள் அடிக்கடி வந்து போகவும், தங்கள் குறைகளை எடுத்துச் சொல்லவும் ஏதுவாக இருக்கும்.

இப்பொழுது பஞ்சாயத்து சபை வீட்டு வரி, கக்கூஸ் வரி, தொழில் வரி முதலியவைகளை வசூலித்து வருகிறது. பஞ்சாயத்து புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருப்பதால், விளக்குப் போடுவது, தெருக்கள் கூட்டுவது தவிர வேறு புதிதாக ஒன்றும் பொதுஜன நன்மைக்கு உகந்த காரியங்கள் செய்ய இயலவில்லை. போகப் போக, பல நல்ல காரியங்கள் செய்யலாம்.

பஞ்சாயத்துகளுக்கும் அவைகளின் தலைவர்களுக்கும் தற்போது அளித்திருக்கும் அதிகாரங்களும் பொறுப்புக்களுமே போதுமானவை.

தற்போது சில குறிப்பிட்ட வார்டுகளிலுள்ள வகுப்பினர் தலைவர் தேர்தலில் தங்களுக்கு வாக்களிக்காமல் நடுநிலைமை வகித்தார்கள் என்ற காரணத்துக்காக, அவர்களில் யாரையும் பஞ்சாயத்துச் சிப்பந்திகளாகச் சேர்த்துக் கொள்ளப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. குற்ற விசாரணை செய்து தீர்ப்பளிக்கும் பொறுப்பையும் கிராமப் பஞ்சாயத்தாரிடமே ஒப்புவித்தால் பட்சபாதம் மலிந்து பூசலும், குழப்பமும் காணப்படும்.

அச்சன்குளம்
20—6—54 பி. அழகுக் குடும்பன்

பஞ்சாயத்தும் அதிகாரிகளும்

சிறுகமுந்தை கிராமம் ஒரு மைனர் பஞ்சாயத்தின் மூலம் நிர்வகிக்கப்படுகிறது. பஞ்சாயத்துக்கு மிகக் குறைந்த வருமானமே உள்ள போதிலும், நிர்வாகிகள் அவ்வருமானத்தைக் கொண்டும், பொதுநலத்தில் அக்கறையுள்ள சிலர் நன்கொடைகளைக் கொண்டும் திறமை மிக்க காரியங்கள் செய்து வருகிறார்கள். உதாரணமாக இவ்வாண்டு எங்கள் கிராமத்தில் பருவ மழைகள் தவறியதின் நிமித்தம் சுமார் மூவாயிரத்து ஐந்நூறுக்கும் அதிகமான ஜனத் தொகையுள்ள எங்கள் கிராமத்துக்கு ஏற்பட்ட குடி தண்ணீர்க் கஷ்டத்தைப் போக்கத் தக்க நடவடிக்கைகள் எடுத்தது, எங்கள் பஞ்சாயத்தின் நல்ல நிர்வாகத்துக்கு ஒரு சான்று.

மற்றும் எங்கள் கிராமத்தில் பஞ்சாயத்து ஏற்பட்ட பிறகு சில முன்னேற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. பஞ்சாயத்தார் செய்யும் வீதிகள் துப்புரவின் நிமித்தம், தங்கள் வீடுகளையும் சுற்றுப் புறங்களையும் பொது மக்களும் சுத்தமாக வைத்துக்கொள்ள முற்பட்டிருக்கிறார்கள். பஞ்சாயத்தால் சுத்தமாகக் கண்காணிக்கப்படும் குடி தண்ணீர்க் கிணறுகளிலிருந்து தண்ணீர் இறைத்துக் கொள்வதின் நிமித்தம் தொத்து நோய்கள் வராமல் தடுத்துக் கொள்கிறார்கள். குப்பை கூளங்கள், அசுத்த ஜலம்தான் தொத்து நோய்களுக்கு முதற் காரணம் என்று பெரும்பான்மையோர் தெரிந்து கொண்டிருக்கிறார்கள்.

கிராமப் பாதைகள் என்றால் மேடும் பள்ளமும் உள்ள சிறு ஓடைகள் என்ற நிலைமையை மாற்றி, போக்குவரத்துக்கு மிகவும் வாயக்குள்ளதாக, சிறு பாலங்கள், கல் மூட்டுகள் கட்டி, பாதைகளை நல்ல நிலைமையில் பராமரித்து வருகிறார்கள். நல்ல காற்றோட்டமுள்ள இடத்தில், ஒரு திறந்த விளையாட்டு மைதானத்தை ஏற்படுத்தினதின் பயனாக, குழந்தைகளும், இளைஞர்களும் ஓடி ஆடித் தங்கள் தேகாரோக்கியத்தைப் பாதுகாத்துக் கொள்கிறார்கள். ஒரு வாராந்திர சந்தை ஏற்படுத்தியதில், எங்கள் கிராம மக்கள் தங்கள் தேவைக்குரிய பொருள்களை எங்கள் கிராமத்திலேயே பெற்றுக் கொள்ள முடிகிறது.

இவ்வாண்டு புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப் பட்டபின், காந்திஜி ஞாபகார்த்த சதுக்கத்தில்,ஒரு சிறு பூங்காவுக்காகவும், வாசகசாலைக்காகவும் பொது மக்களின் நன்கொடைகளைக் கொண்டும், பஞ்சாயத்தின் சிறு நிதியைக்



கொண்டும் ஒரு நல்ல சிறு கட்டிடம் கட்டியிருப்பது எங்கள் கிராமத்துக்கே ஒரு தனிச் சோபையை அளிக்கிறது. காந்திஜி வாசகசாலையிலும், புஸ்தக சாலையிலுமாக இவ்வாண்டு சுமார் 600க்கும் அதிகமான வாசகர்கள், உலக அரசியலையும் கலைகள், கவிதைகள், கட்டுரைகள், செய்தித் தாள்கள், வார சஞ்சிகைகள், புஸ்தகங்கள் மூலமாகப் படித்துத் தங்கள் அறிவை அபிவிருத்தி செய்து கொண்டிருக்கிறார்கள். பொது வானொலியும் மின்சார விளக்குகளும் இல்லாதது எங்கள் கிராமத்துக்கு ஒரு குறைதான்.

பஞ்சாயத்தின் தலைவரும் அங்கத்தினர்களும் நன்கு அவரவர்களுடைய கடமைகளைச் செய்து வருவதாகவே தெரிகிறது. ஆயினும் அங்கத்தினர்கள் இன்னும் சிறிது ஊக்கம் காட்டுவது நிர்வாகத்தை இன்னும் திறம்பட நடத்துவதற்கு ஊக்கமளிக்குமென நம்புகிறேன்.

பஞ்சாயத்தால் புதிதாக வண்டி வரியும், வீட்டு வரியும் விதித்து வசூலித்து வரப்படுகின்றன. வீட்டு வரிகளைப் பற்றிப் பொதுஜனங்களிடத்தில் அதிருப்தி காணப்படத்தான் செய்தது. பொருளாதாரத்தில் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கும் கிராம மக்கள், புது வரிகளைப் பற்றி அதிருப்திப் படுவது இயற்கையே.

அதிகாரிகளால் பஞ்சாயத்தார் செய்யத் திட்டமிடும் வேலைகளுக்கு உடனுக்குடன் அங்கீகாரங்கள் கிடைப்பதில் சில சிரமங்கள் இருக்கத்தான் செய்கின்றன. சட்டத்துக்குட்பட்டு நியாயமாகச் செய்யப்பட்ட செலவினங்களுக்கு அங்கீகாரம் அளிக்க எந்த அதிகாரியும் மறுக்காமல் இருக்க வேண்டும். உதாரணமாக, குடிதண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டிருக்கும் பொழுது பஞ்சாயத்து அங்கீகாரம் பெற்றுக்கொண்டு கிணறு வெட்டுவது முடியாத காரியம். அடுத்த பருவ மழை தவறிவிடும் என்று முன்கூட்டியே கிணறு வெட்டுவதற்கு அங்கீகாரம் வாங்கி வைத்துக் கொள்ள முடியாது. குடிதண்ணீர்த் தட்டு ஏற்பட்டவுடன் கிணறு வெட்ட வேண்டியதுதான். இதுமாதிரி அத்தியாவசியமான வேலைகளுக்குப் பஞ்சாயத்து அளித்த அங்கீகாரத்தை மேலதிகாரிகள் அங்கீகரிக்க வேண்டும். பஞ்சாயத்து மேலதிகாரிகளிடம் கோரும் அங்கீகாரங்களை, சீக்கிரம் அனுப்பி வைப்பதின் மூலம் பஞ்சாயத்து உடனுக்குடன் செய்ய வேண்டியவைகளைச் செய்து முடிக்க நல்ல வாய்ப்புகள் ஏற்படும்.

இப்போதுள்ள பஞ்சாயத்தார் எங்கள் முன்னோர்கள் ஏற்படுத்தியிருந்த குளத்தை மத்திய சர்க்காரின் சிறிய நீர்ப்பாசன திட்ட உதவிகளைப் பெற்றுப் பாதி சகாயத்துடன், பாதியைப் பஞ்சாயத்தும் கிராம மக்களும் ஏற்றுக் குளத்தின் கரைகளை வலுப்படுத்தியும் வடிகாலுக்குத் தண்ணீர் மட்டம் கட்டி, அதிகத் தண்ணீரைத் தேக்கும் திட்டம் முடியுந் தறுவாயில் இருக்கிறது. இத்திட்டத்தின் மூலம் எங்கள் குளத்தில் சாதாரணமாகத் தேங்கும் தண்ணீரைப் போல் மும்மடங்கு தேங்கும். வருடத்தில் ஓரிரு தடவைகள் குளம் நிரம்பினாலும், எங்கள் கிராமப் பாசனக் கிணறுகளுக்கும், முக்கியமாகக் குடி தண்ணீர்க் கிணறுகளுக்கும் தண்ணீர்த் தட்டு ஏற்படாது. ஒரு சிறு மைனர் பஞ்சாயத்து பெறக்கூடிய நன்மைகளை எங்கள் கிராமம் பூரணமாகப் பெறுகிறது. இன்னும் எங்கள் பஞ்சாயத்துக்குச் சர்க்காரால் கொடுக்கப்படும் சகாயத் தொகைகளைக் கொடுக்கும் பட்சத்தில் (வரிகளை மேற்கொண்டும் அதிகப் படுத்த முடியாத நிலையில் இருப்பதால்) அதிக ஜனத்தொகையும், பன்னிரண்டு மைல்களுக்குள் எந்த வித வைத்திய உதவியும் பெறமுடியாத நிலையில் இருக்கும் கர்ப்பிணிகளுக்கு ஒரு மருத்துவ விடுதி ஏற்படுத்தி நடத்தும் பட்சத்தில் எங்களுக்கும் எங்கள் கிராமத்தைச் சுற்றியுள்ள அனேக கிராமங்களுக்கும் பேருதவியாய் இருக்கும். 600க்கு மேல் படிக்கும் வயதுள்ள பிள்ளைகள் அயல் ஊர்களுக்குச் சென்று கல்வி கற்க முடியாத நிலையில் இருப்பதால் இங்கு ஒரு மத்தியதரப் பள்ளி ஆரம்பிக்க நடவடிக்கைகள் எடுக்கலாம். சர்க்காரின் உதவித் தொகைகளைப் பெற்றும் பஞ்சாயத்து தன் நிதி நிலைமையைக் கொண்டும் ஆக்க வேலைகளைத் தீவிரமாக நடத்தப் பஞ்சாயத்துடன் பொதுமக்களும் ஒத்துழைக்கலாம்.

சென்னை மாகாணப் பஞ்சாயத்துச் சட்டத்தின் மூலம் அளிக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களே, பஞ்சாயத்துக்களுக்குப் போதுமானவை. அவற்றின் நடைமுறைக்கும், பஞ்சாயத்தின் நிதிக்கும், வருமான இனங்களை ஒதுக்குவதின் மூலம் சர்க்கார் பஞ்சாயத்தின் அபிவிருத்திக்கு வழிகோலலாம்.

அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி காரியதரிசி அகர்வால் அவர்கள் குற்ற விசாரணை அதிகாரங்களைப் பஞ்சாயத்துச் சபைகளுக்குக் கொடுக்கலாமெனக் கூறியிருக்கும் யோசனை இப்போது கிராமங்கள் உள்ள நிலைக்குப் பொருந்தாது. அவ்விதம் பொறுப்புக்களைச் சரிவர நிறைவேற்ற, எல்லாக் கட்சியினரும் ஒன்றுபட்டு கிராமங்களைத் தகுதி வாய்ந்தவைகளாகச் செய்வதில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

திருகழந்தை பஞ்சாயத்து
29—6—54

ஆர். ஜி. முத்து



சதாபிஷேக சாந்தி முகூர்த்தம்

திருச்சிராப்பள்ளி ஜில்லா காட்டுப்புத்தூர் பி. டப்ளியு. டி. ரிடையர்ட் அஸிஸ்டெண்ட் இஞ்ஜினீயர் திருவாளர் கா. சி. சுப்பைய செட்டியார் அவர்களுக்கு 81வது ஆண்டு விழா தம் தர்மபத்தினி சௌ. பார்வதி அம்மையாருடன் சதாபிஷேக சாந்தி முகூர்த்தம் சென்னையில், உள்ளூர் உறவினர் சூழ வேத விதிப்படி ஒழுக்கம் நிறைந்த பண்டிதர்களால் ஜய வருஷம் ஆனி மாதம் 20ம் தேதி ஞாயிற்றுக்கிழமை (4-7-1954) எல்லாம் வல்ல இறைவன் அருளால் சிறப்பாய் நடைபெற்றது.

அந்தத் தினம் மாணிக்க வாசக சுவாமிகள் குரு பூஜை புண்ணிய தினமாகவும் யுனைடெட் ஸ்டேட்ஸ் ஆப் அமெரிக்காவின் 178வது வருஷத்திய சுதந்திர நன்னாளாகவும் இருந்தது குறிப்பிடத்தக்கது.



சௌந்தரியத்திற்கு
3 பெரிய
அழகுதரும்
சாதனங்கள்
வைஜயந்தி மாலா
கூறுகிறார்
"காமினியா அழகு சாதனங்கள் மிகவும் பிரமாதமாக இருக்கின்றன. காமிரா விளக்கெதிரில் நான் முழுதும் கடினமான வேலைக்குப் பிறகு, காமினியா சாதனங்களை உபயோகிப்பதால், நான் பரிசுத்தத்துடன் குளுமையான உணர்ச்சியை அடைகிறேன்.
DIL BAHAR
தில் பஹார்
டாய்லெட் சோப்
காமினியா
ஹேர் ஆயில்
மென்மையாகவும் பட்டுப் போன்ற கூந்தல் வளர ஆயிரக்கணக்கான பெண்மணிகள் இந்த நேர்த்தியான பரிமளமுள்ள எண்ணெயை உபயோகிக்கின்றனர்.
KAMINIA OIL
காமினியா ஸ்னோ
இதன் மூலம் உங்கள் வதனம் புதுமையான சோபையுடன் நாள் முழுதும் விளங்குகிறது.
ஆங்கிலோ இந்தியன் ட்ரக் & கெமிகல் கம்பெனி
பம்பாய் 2.
மெம்பர் :- இந்தியன் சோப் & டாய்லெட் தயாரிப்போர் அசோசியேஷன்.
சென்னை ராஜ்யத்துக்கு டிஸ்ட்ரிபியூட்டர்கள்: ஸ்ரீ சி. ரெங்கராஜு நாயுடு
9/1, ஒப்பணக்கார வீதி?

சக்கரவர்த்தித் திருமகன்

16. பரசுராமர்

அயோத்தியில் தன்னிடம் ஒப்புவித்த ராஜகுமாரர்களை மிதிலையில் தசரதனிடம் க்ஷேமமாக ஒப்புவித்து விட்ட விசுவாமித்திர மகா முனிவர் மங்கள காரியங்கள் முடிந்தவுடன் இரண்டு அரசர்களிடமும் விடைபெற்றுக் கொண்டு இமயமலைக்குச் சென்றார். இராமாவதார சரித்திரத்தில் விசுவாமித்திரருடைய பங்கு இத்துடன் முற்றிற்று.

இராம சரித்திரம் என்கிற மகா கோபுரத்துக்கு விசுவாமித்திரர் அஸ்திவாரக் கல் என்றே சொல்லலாம். இதற்குப் பிறகு விசுவாமித்திரரைப் பற்றி ராமாயணத்தில் ஒன்றுமில்லை. வால்மீகி ராமாயணத்தில் கவனிக்க வேண்டிய ஒரு விஷயம்: ஒரு காண்டத்தில் மிக முக்கியமான பங்கெடுத்துக் கொள்ளும் பாத்திரங்கள் அந்தக் காண்டத்தோடு மறைந்து போகிறார்கள். பிறகு அவர்களை நாம் காண்பதில்லை. பால காண்டத்து விசுவாமித்திரர் பிறகு காணப்படுவதே இல்லை. அயோத்தியா காண்டத்துக் கைகேயி பிறகு எங்கேயோ மறைந்து போகிறாள். குகனும் அப்படியே. பரதனும் இவ்வாறே. சித்திரகூடத்திலிருந்து திரும்பிப் போனவனை மறுபடி ராமன் அயோத்தி திரும்பும் வரையில் எந்தச் சந்தர்ப்பத்திலும் நாம் காண்பதில்லை. ராமனுடைய பல கஷ்டங்களிலும் கவலைகளிலும் பரதனைக் கவி நம் முன் கொண்டு வருவதில்லை. சாதாரண நாடகங்களில் வரும் பாத்திரங்களைப் போல் வால்மீகியின் இதிகாசத்திலுள்ள பாத்திரங்கள் கடைசி வரையில் நின்று அவ்வப்போது தகுந்த சமயங்களில் திரும்ப வந்து தங்களைக் காட்டிக் கொள்ளுகிறதில்லை. கதா பாத்திரங்களை விமரிசை செய்வதில் விசேஷ ரஸம் காணும் நாவலர்கள் இதைக் கவனத்தில் வைக்க வேண்டும்.



ராஜாஜி

விவாகம் முடிந்ததும் தசரத சக்கரவர்த்தி அயோத்தியைக்குத் திரும்பினான். அவனுடைய பெரும் பரிவாரமும் கூடச் சென்றது.

வழியில் ஓர் இடத்தில் திடீரென்று அபசகுனங்கள் தென்பட்டன. கவலைப்பட்ட தசரதன் இதென்னவென்று வசிஷ்டரைக் கேட்டான்.

"கெட்ட நிமித்தங்கள் உண்மையே. ஆயினும் இதனால் கெடுதலில்லை. பறவைகளின் குறிகள் அசுபமாக இருந்தாலும் தரையில் நடக்கும் பிராணிகளின் குறிகள் சுபமாகவே இருக்கின்றன. ஆகையினால் பயத்துக்குக் காரணமில்லை" என்றார்.

இவ்வாறு ரிஷியும் அரசனும் பேசிக்கொண்டிருக்கையிலேயே பயங்கரமான காற்று வீசிற்று. மரங்கள் விழுந்தன. ஒரு பெரிய அதிர்ச்சி உண்டாயிற்று. புழுதி உயரக் கிளம்பிச் சூரியனை மறைத்தது. எட்டுத் திக்குகளும் இருண்டு விட்டன. எல்லாருமே பயந்து போனார்கள். பிறகு காரணம் கண்டார்கள். க்ஷத்திரியக் கூட்டத்துக்கே யமனாக அவதரித்த பரசுராமர் வந்து நின்றார்.

தோளில் வில்லும் கோடாலியும் கையில் மின்னலைப் போல் ஜொலிக்கும் ஒரு அம்புமாகத் திரிபுரம் எரித்த ருத்திரனைப் போலவே, பார்த்தவர்கள் நடுங்க, தலையில் ஜடையுடன் பரசுராமர் விளங்கினார். அவர் முகத்தினின்று காலாக்கினி போலத் தாங்க முடியாத ஒளி வீசிற்று. தலைமுறை தலைமுறையாக க்ஷத்திரியர்களை ஹதம் செய்த ஜமதக்கினி குமாரர் பரசுராமர் எங்கே சென்றாலும் பூகம்பமும் பெருங் காற்றும் அவருக்கு முன் செல்லும். க்ஷத்திரிய குலம் நடுங்கும்.

தசரதனுடைய பரிவாரத்திலிருந்த பிராமணர்கள் தங்களுக்குள் பேசிக்கொண்டார்கள். "ஜமதக்கினி முனிவருடைய குமாரரான ராமர் தம்முடைய தந்தை ஒரு அரசனால் கொல்லப்பட்ட காரணத்தினால் க்ஷத்திரிய குலத்தையே அழித்து விடுவதாகப் பிரதிக்ஞை எடுத்து, பிரதிக்ஞைப்படி நூற்றுக் கணக்கான அரசர்களை ஹதம் செய்து சினம் தணிந்ததாக எண்ணினோமே, மறுபடியும் தம் கோர யுத்தத்தை ஆரம்பித்து விட்டாரா என்ன?" என்று பயந்து மெதுவாகப் பேசிக்கொண்டார்கள். இவ்வாறு சந்தேகித்துக்கொண்டே அவருக்கு அர்க்கியம் சமர்ப்பித்து உபசரித்தார்கள்.

அவர்கள் செய்த உபசாரத்தை அங்கீகரித்துப் பரசுராமர் ராமசந்திரனைப் பார்த்துப் பேசலானார்:

"தசரதன் மகனே! உன் வீரச் செயல்களைப் பற்றி நான் கேள்விப்பட்டேன். ஜனகர் சபையில் பரமசிவனுடைய தனுசை நீ வளைத்து விட்டதும் அது ஒடிந்ததும் எல்லாம் நான் கேட்டு இது எவ்வாறு நடந்தது என்று ஆச்சரியப் பட்டுத்தான் உன்னைப் பார்க்க வந்தேன். இதோ என்னிடம் இருக்கும் வில். நீ ஒடித்த வில்லுக்குச் சமானமான இது என் தந்தை ஜமதக்கினி அடைந்த விஷ்ணு தனுசு. இதை வளைத்து நாண் ஏற்றுவாய். பாணமும் தருகிறேன். இதைச் செய்வாயேல் நாமிருவரும் யுத்தம் செய்வோம்" என்றார்.

தசரதன் இதையெல்லாம் பார்த்துப் பெருந் திகிலடைந்தான். மகனை எப்படியாவது பரசுராமரிடமிருந்து மீட்டி அவன் உயிரைக் காப்பாற்ற வேண்டுமென்று பரிதாப முறையில் பேசினான்.

"நீர் பிராமணர். க்ஷத்திரிய ஜாதியின்பேரில் உமக்கிருந்த கோபம் இதற்கு முந்தியே தணிந்து விட்டதல்லவா? பிறகு தவம் செய்யப் புகுந்தீர் அல்லவா? என் குமாரன் சிறுவன். அவனுடனா நீர் யுத்தம் செய்வது? அபயம் தருவீராக. இனி ஆயுதம் எடுப்பதில்லையென்று தேவராஜனிடம் நீர் வாக்குறுதி செய்து விட்டீர். காச்யபருக்குப் பூமண்டல ஆதிபத்யத்தையும் தந்து விட்டு, மகேந்திர பர்வதத்தில் தவம் செய்யப் போனீரல்லவா? பிரதிக்ஞையைத் தவறலாமா? ராமனிடத்தில் நாங்கள் எல்லோரும் உயிரை வைத்துக் கொண்டிருக்கிறோம். அவனை நீர் ஹதம் செய்து விட்டால்



என் நன்றி



என் சகோதரன் செல்வன் க. மாரிமுத்துக்கும் கருங்காலக்குடி கர்ணம் & ஹெட்மேன் திரு கப. நமசிவாயம் பிள்ளை அவர்கள் சகோதரர் திரு சுந்தரராஜ பிள்ளை புதல்வி, செல்வி சுலோசனாவுக்கும் சென்ற ஜூன் மாதம் 25ம் தேதி கருங்காலக்குடியில் மணமகள் இல்லத்தில் திருமணம் வெகு விமரிசையாக நடந்தேறியது.

இந்தத் திருமண வைபவத்தில் கலந்து கொண்ட நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும், வாழ்த்துக்களும் பரிசுகளும் வழங்கிய அன்பர்களுக்கும் எனது நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்லூரணி
21 – 7 – '54

தங்கள் அன்பன்
க. நடராஜா

நாங்களும் கூடவே செத்துப் போவோம்'' — இவ்வாறு தசரதன் திகிலடைந்து கெஞ்சியதைப் பரசுராமர் கவனிக்கவேயில்லை. அவர் தசரதனைப் பார்க்காமல் ராமசந்திரனோடேயே பேசிக் கொண்டு போனார்.

''விசுவ கர்மாவால் பூர்வம் இரண்டு சிறந்த வில்லுகள் செய்யப் பட்டன. இரண்டும் சம சிறப்பு வாய்ந்தவை. ஒன்று திரிபுரத்தை எரித்த திரியம்பகனுக்குத் தரப்பட்டது. இரண்டாவது வில் திருமாலுக்குத் தரப்பட்டது. அந்த விஷ்ணு தனுசு இது. நீ வளைத்து ஒடித்ததாகச் சொல்லப்படுவது சிவன் வில். இந்த வில்லை நீ வளைக்க முடியுமா, பார்! வளைத்தாயானால் உன் வீரியம் எனக்கு நிச்சயமாகும். அப்போது நாமிருவரும் யுத்தம் செய்வோம்'' என்று கூறினார்.

இவ்வாறு தனக்குச் சமானம் யாருமில்லை என்று எண்ணி வந்த பரசுராமர் மிக உரத்த குரலில் பேசியதைக் கேட்ட சக்கரவர்த்தித் திருமகன் மெதுவாகவே அடக்கமும் கம்பீரமும் கொண்ட குரலில் பதில் சொன்னான்.

''ஜமதக்னி புத்திரரே! தந்தை கொல்லப்பட்ட கோபத்தால் நீர் பழி வாங்கினீர். அதில் நான் குற்றம் காணவில்லை. ஆனால் மற்றவர்களைப் போல் என்னை நீர் அடக்க முடியாது. தயவு செய்து வில்லைக் கொடும்'' என்று சொல்லி தசரதராமன் ஜமதக்னி ராமரிடமிருந்து வில்லையும் அம்பையும் வாங்கினான். வில்லை வளைத்து அம்பையும் வைத்து நாணையும் இழுத்தான்!

''பிராமணரே! இப்போது என்ன செய்யச் சொல்கிறீர்? இந்த அம்பு வீணாகாதே?'' என்றான் சக்கரவர்த்தித் திருமகன் புன்னகையுடன்.

இரண்டு ராமர்களும் கூடியதைப் பார்க்க, தேவ கந்தர்வ யக்ஷகணங்கள் ஆகாயத்தில் வந்து நின்றார்கள்.

தசரதராமன் வில்லை வளைத்ததும் பரசுராமருடைய தேஜஸானது வாடிவிட்டது. அவருடைய அவதார சக்தி அந்தக் கணத்தில் மறைந்தது.

''உன் பிரபாவத்தைக் கண்டேன். நீ என்னைக் கர்வபங்கம் செய்ததில் எனக்கு வருத்தமில்லை. நீ யார் என்பதை அறிந்தேன். என் தவம் முழுதும் உனதாகக் கடவது. ஆனால் காசியபரிடம் நான் செய்த பிரதிக்ஞைப்படி அவருக்குக் கொடுத்து விட்ட பூமியில் நான் இரவில் தங்கக் கூடாது. ஆனபடியால் நான் என் தவ வலிமையால் சூரியாஸ்தமனத்துக்கு முன் மகேந்திர மலைக்குப் போய்ச் சேர வேண்டும். அதற்கு மட்டும் அநுமதிப்பாயாக. மற்றப்படி உன் கையிலிருக்கும் அம்புக்கு என் தபோபலம் முழுதும் இரையாகக் கடவது'' என்று சொல்லி விட்டுச் சக்கரவர்த்தித் திருமகனைப் பிரதக்ஷணம் செய்து வணங்கித் தாம் வந்த வழியே திரும்பினார்.

* * *

சக்கரவர்த்தியும் ராஜகுமாரர்களும் திரும்பி வருவதை அறிந்து அயோத்தி நகரத்தினரின் மகிழ்ச்சி கரைபுரண்டு ஓடிற்று. தசரதனையும் பரிவாரத்தையும் ராஜகுமாரர்களையும் வரவேற்பதற்காக அலங்கரிக்கப்பட்ட அயோத்தி நகரம் தேவலோகத்தைப் போல் ஜொலித்தது.


* * *

ராமனும் சீதையும் மிகவும் சந்தோஷமாக அயோத்தியில் ஒரு குறையுமின்றிப் பன்னிரண்டு ஆண்டுகள் கழித்தார்கள்.

ராமன் தன் இதயத்தை அப்படியே சீதைக்கு அர்ப்பணம் செய்து விட்டான். இருவர்களுக்குமிடையில் வளர்ந்த பிரியமானது இருவர்களுடைய குணங்களைப் பற்றியதா? அல்லது இருவர்களுடைய சம அழகைப் பற்றியதா என்பதைச் சொல்ல முடியாமலிருந்தது. இரண்டும் சேர்ந்தே அவர்களுடைய பரஸ்பர அன்பு இரு மடங்காக வளர்ந்து கொண்டு போயிற்று. ராமனுடைய உள்ளமும் சீதையினுடைய உள்ளமும் சம்பாஷணையின்றியே ஒன்றோடொன்று பேசும் என்கிறார் கவி. இவ்வாறு ராமனுடைய பிரியத்தை அனுபவித்த சீதையின் காந்தியானது தேவலோகத்தில் சாக்ஷாத் ஸ்ரீ தேவியின் காந்தியைப் போல் பிரகாசித்தது.

வெகு நாட்களுக்குப் பிறகு, வனவாசம் ஆரம்பித்த சமயம், மகா தபஸ்வி அனசூயை ராமன் மேல் சீதை வைத்து வந்த அன்பைப் பற்றிப் பாராட்டிப் பேசிய போது சீதை சொன்னாள்: "ராமர் எல்லா நற்குணங்களையும் அடைந்தவர். அவருடைய அன்பின் விசேஷம் என்ன வென்றால் அது என் அன்புக்குச் சமமான அன்பு. எந்த நிலையிலும் மாறாத அன்பு. மாசற்ற சிந்தனையும் புலன்களை அடக்கியாளும் சக்தியையும் பெற்றவர். தாயைப் போலும் தகப்பனைப் போலும் என்னைக் காத்து வருகிற இவரை நான் எப்படிக் காதலிக்காமலிருக்க முடியும்?" என்றாள்.

காதலைப்பற்றி ஆராய்ச்சி செய்கிறவர்களும், விவாகம் செய்து கொண்டு நன்றாக வாழ வேண்டும் என்று ஆசைப்படும் யுவர்களும் யுவதிகளும், சீதை அனசூயைக்குச் சொன்ன இந்த வார்த்தைகளைக் கவனிக்க வேண்டும். அவற்றில் பொருள் நிறைந்து கிடக்கிறது. இருவர்களுடையஅன்பும் சமமாக இருக்க வேண்டும். ஒன்று அதிகமாகவும் ஒன்று குறைவாகக் கடன்பட்டதாகவும் இருக்கலாகாது. எந்தக் காரணத்தைக் கொண்டும் அன்பு மாறலாகாது. வாழ்க்கையில் பல நிகழ்ச்சிகள் நிகழும். அன்பு ஒன்றே போலிருக்க வேண்டும். என்ன நேர்ந்தாலும் அதனால் அன்பானது ஏற்றத்தாழ்வு அடையக் கூடாது. கொண்ட மனைவிக்கு புருஷன் தாயைப் போலும் தந்தையைப் போலும் இருக்க வேண்டும். இப்படியெல்லாம் இருந்தால் வாழ்க்கையில் மகிழ்ச்சி நிறைந்து தேவியின் அருளைப் பெறுவோம்.





கடல் முத்து

சிகா

5. வள்ளியின் வியப்பு!

வள்ளியிடம் பேசிக் கொண்டிருந்தவர்கள் வர்த்தகர்கள். இந் நாட்டிலுள்ள அற்புதப் பொருள்களை மேல் நாட்டில் விளம்பரம் செய்து விற்பவர்கள்.

அவர்கள் முதல் நாள் கந்தன் கடலிலிருந்து முத்து எடுத்ததைக் கண்டவுடன் அதை வாங்கிச் செல்ல வேண்டும் என்று தீர்மானித்தார்கள். ஆனால் அந்தச் சமயம் அவர்களிடம் கையில் காலணாக் காசுகூட இருக்கவில்லை. அதனால் அவர்களால் அதை வாங்க முடியவில்லை.

ஆனாலும் கந்தனிடமிருந்து யாராகிலும் அந்த முத்தை வாங்கிக் கொண்டு போய் விடுவார்களோ என்று பயந்தார்கள். அதனால் கந்தனிடமிருந்து யாரும் வாங்கிக் கொள்ளாமலிருக்க வழி என்ன என்று யோசித்தார்கள். யாரும் சுலபமாக விலை கொடுத்து வாங்க முடியாதபடி விலை ஏற்றி வைத்தால் யாரும் வாங்க மாட்டார்கள் அல்லவா? இப்படி யோசித்தே, "ஆ! இந்த முத்துக்கு ஆயிரம், இரண்டாயிரம்கூடக் கொடுப்பார்களே!" என்று கந்தன் காதில் படும்படியாகவும் படாதபடியாகவும் சொல்லி விட்டுப் போனார்கள். அவர்களுக்குத்தெரியும், யாரும் அவ்வளவு விலை கொடுத்து அந்த ஊரில் வாங்க மாட்டார்கள் என்பது. ஆனால் இந்த மொழிகள் கந்தனின் பேராசையை அதிகரிக்கச்செய்து, மன நிம்மதியையும் இழக்கச் செய்து எப்படியெல்லாம் அவனைப் பாடாய்ப் படுத்தின என்பவை நமக்குத் தெரியும். ஆனால் அந்த வியாபாரிகளுக்கு இவை யொன்றும் தெரியாது. கந்தனிடம் அந்த முத்து இன்னும் இருக்கும் என்று நினைத்தே அந்த வர்த்தகர்கள் பணத்தைத் திரட்டிக் கொண்டு அங்கே வந்தார்கள்.

அவர்கள் மனத்தில் தீர்மானம் செய்திருந்தார்கள். 'கந்தன் அந்த முத்தைத் தங்க, வெள்ளிக் கடைகளில் விற்கக் கொண்டு போயிருப்பான். உள்ளூரில் இந்த முத்துக்கு இருபது ரூபாய்க்கு மேல் யாரும் கொடுக்க முன் வந்திருக்க மாட்டார்கள். அப்படி அதிகபட்சம் யாராகிலும் கொடுத்தாலும் ஐம்பது ரூபாய்க்கு மேல் கொடுக்க முன் வந்திருக்க மாட்டார்கள். நாம் இரண்டு மடங்கு கொடுப்பதாகச் சொன்னால் கந்தன் மிக்க மகிழ்ச்சியுடன் கொடுத்து விடுவான்' என்று நினைத்தார்கள். ஆனால் அவர்களுக்கு என்ன தெரியும், மாபெரும் அதிர்ச்சி, ஏமாற்றம் காத்திருக்கிறது என்பது!

எப்படியோ கந்தனின் குடிசையைத் தேடிக் கொண்டு அவர்கள் வந்து சேர்ந்தார்கள். குடிசையின் வாயிலில் வந்து நின்று கொண்டு, "கந்தா, கந்தா!" என்று குரல் கொடுத்தார்கள்.

வள்ளிதான் வந்து நின்றாள். அவளிடம், "கந்தன் இல்லையா?" என்று கேட்டார்கள்.

வள்ளி, "இல்லை" என்றாள்.

"எங்கே போயிருக்கிறான்?"

"தெரியாது!" என்றாள் வள்ளி.

"ஆமாம், கடலிலிருந்து பெரிய முத்து எடுத்தானே, அதை விற்று விட்டானா?" என்று கேட்டார்கள்.

"இல்லையே! அவர்கள்தான் முத்தை ரொம்பவும் குறைந்த விலைக்குக் கேட்டார்களாமே!" என்றாள் வள்ளி.

"எவ்வளவு?" என்று கேட்டார்கள். வள்ளி முழு விவரத்தையும் கூறி முத்தைக் கடைசியில் தான் கடலில் எறிந்து விட்ட செய்தியையும் கூறினாள்.

முதலில் அவர்கள் நம்பவில்லை. அதிகப் பணம் எதிர்பார்த்து, இவ்வாறு வள்ளி கூறுகிறுள் என்றே நினைத்தார்கள். அதன் படியே அவர்கள் ஐம்பது ரூபாய் தருவதாகவும், எழுபது ரூபாய் தருவதாகவும், நூறு ரூபாய் தருவதாகவும் சொல்லிப் பார்த்தார்கள். ஆனல் அவளிடம் முத்து இருந்தால்தானே! "இல்லை, இல்லை!" என்று நூறு தடவை சொல்லி விட்டாள். அவர்கள் நம்ப வில்லை. "ஐந்நூறு ரூபாய் தருகிறேம், அம்மா! அந்த முத்தைக் கொடு" என்ருர்கள்.

அப்போதுதான் அவளுக்குத் தாங்க முடியாத துக்கம் வந்து விட்டது.

'ஆகா! நான் மட்டும் அவசரப்பட்டு அந்த முத்தைக் கடலில் எறியாமலிருந்திருந்தால் இன்று எவ்வளவு பணம் கிடைத்திருக்கும்! கந்தனுக்குத் தெரியாமல் செய்து விட்டு, எவ்வளவு பெரிய நஷ்டத்துக்கு உள்ளாகி விட்டோம்' என்று எண்ணி வருந்தினுள்.

அந்தச் சமயம் கந்தன் அங்கு வந்து சேர்ந்தான். வள்ளியின் முக பாவம் கலவரம் நிறைந்ததாக இருந்தது. அதைக் கண்டுதான் அவன் ஓடோடி வந்தான்.

கந்தனைக் கண்டதும் அவள் 'ஓ' என்று அழுது விட்டாள். நெஞ்சில் அடைத்திருந்த துக்கம் பீறிட்டு வெளிப்பட்டது.

"ஏன் வள்ளி, அழுகிருய்?" என்று கந்தன் கேட்டான்.

"நான் எவ்வளவு பெரிய முட்டாள்தனமான காரியம் செய்து விட்டேன். ஆத்திரப்பட்டு, நேற்று முத்தைக் கடலில் எறிந்து விட்டேனே!" என்று அழுதாள்.

"ஏன், ரொம்ப நல்ல காரியந்தானே செய்தாய்! அதைப் போன்ற நல்ல காரியமே வேறு இருக்க முடியாதே! அதற்காக வருந்துவானேன்? நீ எறிந்த அந்த முத்து மீண்டும் கரையில் ஒதுங்கியது. அதைச் சிறுவர்கள் எடுத்து வைத்து விளையாடிக் கொண்டிருந்தார்கள். நான் அதை அவர்களிடமிருந்து வாங்கிச் சற்று முன்தான் மறுபடியும் கடலில் எறிந்து விட்டு வருகிறேன். அதனல் நீ செய்த காரியம் நல்ல காரியந்தான். வருத்தப் படாதே!" என்று தேறுதல் கூறினுன்.

"இதோ இவர்கள் அந்த முத்தைக் கொடுத்தால் ஐந்நூறு ரூபாய் கொடுப்பதாக வந்திருக்கிருர்கள். என்னுடைய அவசர புத்தியினுல்தானே இந்த ஐந்நூறு ரூபாயை இழந்து விட்டோம்! நான் நேற்று இராத்திரியே முத்தைக் கடலில் எறியாமலிருந்தால் நமக்கு இந்த ஐந்நூறு ரூபாய் கிடைத்திருக்குமல்லவா?" என்று வருத்தம் தோய்ந்த குரலில் சொன்னுள்.

"ஐந்நூறில்லை; ஆயிரம் வந்தால் கூட வேண்டியதில்லை. இந்த முத்து நம்முடைய பரம விரோதியினிடம் கூட இருக்கலாகாது. அதனல் சண்டையும், பூசலும், மனக் குழப்பமும்தான் விளைகிறது. அதைக் கடலில் சேர்த்ததே நல்லதாகப் போயிற்று" என்ருன்.

இதைக் கேட்ட பிறகுதான் அந்த வர்த்தகர்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டது.

"அப்படியானல் உங்களிடம் அந்த முத்து இல்லையா? நாங்கள் வருகிறேம்!" என்று சொல்லி விட்டு அவர்கள் தோல்வியுடன் திரும்பிப் போனுர்கள்.

'கந்தனை ஏமாற்றி அந்த முத்தை வாங்கிக் கொண்டு போகலாம் என்று நினைத்தோம். ஆனல் கடவுள் நம்மை வேறு விதத்தில் ஏமாற்றி விட்டார்' என்று எண்ணிக்கொண்டே நடந்து சென்ருர்கள்.

கந்தனும் தன் தோளின்மீது வலையைப் போட்டுக் கொண்டு கடற்கரையிலிருந்த கட்டு மரத்தை நோக்கிச் சென்ருன்.

வள்ளி, கந்தனுடைய மனம் எப்படி ஓர் இரவில் இவ்வளவு தூரம் ஆச்சரியப்படும் வகையில் மாறிவிட்டது என்று எண்ணி வியந்தாள். (முற்றும்)

உ

ஸ்ரீ சந்திரமௌளீச்வராய நம:

SRI KANCHI KAMAKOTI PITHADHIPATI

Jagadguru Sri SANKARACHARYA SWAMIGAL MUTT,

Camp:—KANCHEEPURAM.

Enc. *Dated* 29-6-1954.

தங்கள் "ஜாதக பரிவர்த்தனா" சம்பந்தமான
ஏற்பாடுகள் செய்திருக்கும் விவரத்தை ஸ்ரீ மஹா
ஸந்நிதானத்தில் விக்ஞாபனம் செய்து கொண்டு
மேல் கண்டவற்றை பார்த்து சாஸ்திர ஸம்மதத்தை
யுடன் லோகாசாரத்தையும் அனுஸரித்து பெண்க
ளுக்கு விவாஹம் செய்யும் பெற்றோர்களுக்கு
எல்லாவிதத்திலும் அனுகூலமாயிருக்கு
மென்று ஸ்ரீ மஹா ஸந்நிதானத்தில்
அபிப்ராயப்படுகிறார்கள் என்ற விவரம்
தெரிவிக்கலான காரியம்

கே. பஞ்சாபகேசன்
29.6.54
பாருபத்யம்.



தந்தையின் கடிதம்



வி. சபாபதி

கடிதத்தைக் கையில் எடுக்கும் பொழுது சந்தோஷம்; அதோடு சந்தேகமும் தான். சந்தேகம் எதற்கு! கடிதம் யாருடையதாக இருக்க முடியும் என்றுதான். சாதாரணமாக டாக்டர் குணசேகருக்கோ அல்லது அவர் மனைவிக்கோ தமிழில் எழுதிய கடிதங்கள் வருவதே அபூர்வம். அதிலும் தம் தந்தையின் கையெழுத்தைப் போல் தோன்றவே கடிதத்தைத் திருப்பித் திருப்பிப் பல தடவைகள் பார்த்தார். அடியில் சாந்தமூர்த்தி என்று கையொப்பமிட்டிருப்பதைக் கண்டாரோ இல்லையோ குணசேகரின் சந்தோஷம் உச்ச நிலையை அடைந்து விட்டது. அதற்குப் பின்னணி கொட்டியது அவர் பரந்த விழிகளும் இமை கொட்டாத பார்வையும்தான். அசட்டுப் பிடிவாதத்தால் அவஸ்தைப்பட்ட தம் தந்தையைப் பற்றிய நினைவுகளையெல்லாம் அலையலையாக எழுப்பி அவருடைய மன அமைதியையே குலைத்து விட்டது அந்தக் கடிதம்.

** ** **

குணசேகரின் தந்தை பழைமையில் ஊறியவர். புதிதாக எதையும் செய்யத் துணிய மாட்டார். இராகு காலம், ஜாதகம் இவைகளில் நம்பிக்கை அதிகம். தந்தையின் குணம் தெரிந்திருந்தும் குணசேகர் தாம் காதலித்த சாரதாவைக் கல்யாணம் செய்து கொள்ள எல்லா ஏற்பாடுகளும் செய்து விட்டார். கலியாண விஷயம் தந்தையின் காதுக்கும் எட்டி விட்டது. அவ்வளவுதான். மாசற்ற தம் குடும்பத்துக்கே பெரியதொரு அவமானம் நேர்ந்து விட்டதாக எண்ணி விட்டார். கடைசியில் அவர் இந்த முடிவுக்குத்தான் வந்தார்: ஒன்று குணசேகர் உடனடியாகத் தம் காதல் திருமணத்தை நிறுத்த ஏற்பாடு செய்ய வேண்டும்; இல்லையென்றால் தமக்குச் சந்தான பாக்கியமே கிடையாது என்ற தீர்மானத்துடன் அவர் முகத்திலேயே விழிக்காமல் வீட்டை விட்டுத் தாம் வெளியேறிவிட வேண்டுமென்பதுதான்.

குணசேகரோ வயது வந்த வாலிபர். வாழ்க்கையின் மணத்தை நுகர விரும்புபவர். அம்மணத்தை வீசும் மலர் சாரதாவேயொழிய அவர் தந்தையல்ல. எனவே தம் தந்தை பிரேரேபித்த நிபந்தனைக்குட்படாமல் தம் காதல் திருமணத்துக்கு யாதொரு களங்கமும் நேராதவாறு வெகு துரிதமாக வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொண்டே இருந்தார். தம் தந்தை வீட்டை விட்டு வெளியேறுவதற்குக் காரணம் அவருடைய முரட்டுப் பிடிவாதமே தவிர வேறில்லை என்பது குணசேகரின் துணிகர முடிவு.

குறிப்பிட்ட நாளில் திருமணம் வெகு விமரிசையாக நடந்தேறியது. காதலர் இருவரும் கருத்தொருமித்துத் தங்கள் இதயத்தில் ஊறும் அன்பு வெள்ளத்தை அழகான பொன் மோதிரங்களாக வார்த்துப் பரிமாறிக் கொண்டனர். அதை ஆமோதித்து வாழ்த்திற்று அங்கு குழுமியிருந்த நண்பர்கள் பலரின் ஆனந்த கரகோஷம். மகிழ்ச்சி மிகுந்த அந்த வைபவத்தைக் கண்டு மகிழக் கொடுத்து வைக்காதவர் குணசேகரின் தந்தை ஒருவர்தான். அவர் அந்த நகரை விட்டே வெளியேறி விட்டார். அவரைப் பற்றிக் கவலைப்பட யாருமே கிடையாது. மணமக்களின் ஆதரவில் குறைவின்றித் தம் வாழ்நாளை நன்றாகக் கழித்திருக்கலாம் இந்தக் கிழவர். ஆனால் புதுமுறைத் திருமணத்தின் மீது குற்றத்தைப் போட்டுவிட்டு, பிடிவாதத்தை ஊன்று கோலாகக் கொண்டு வயதான காலத்தில் வாழத் தெரியாமல் திண்டாட ஆரம்பித்துவிட்ட அவரை யார்தான் திருத்த முடியும்!

குணசேகரன் ஒரு பிரபல டாக்டரானர். அவர் புது மனைவி சாரதாவும் எம்.பி.பி.எஸ். படித்த

வன்தான். படித்த தம்பதிகளிடையே பரஸ்பர அன்பு தாண்டவமாடிற்று. வள்ளுவன் வகுத்த இல்லறப் பண்பு வழிந்து ஓடிற்று அவர்கள் குடும்ப வாழ்வில். மணமக்களிருவரிடையும் நிலவிய ஒற்றுமைத் தடாகத்தில் ஆசை மலர் பூத்து அன்பு மணம் வீசிக் கொண்டிருந்தது. அதிலும் சாரதா மகா கெட்டிக்காரி. மேல்நாட்டுப் படிப்பால் தன் பத்தினி தருமத்தை மறந்துவிடாதவள்.

குணசேகருக்கு அடிக்கடி தம் தந்தையைப் பற்றிய ஞாபகம் வரும். பெற்று வளர்த்த தகப்பனல்லவா, எப்படி மறக்க முடியும்! தாய்க்குத் தாயும் தந்தைக்குத் தந்தையுமான தம் தகப்பனை அவருடைய வயோதிக காலத்தில் வைத்துப் போஷிக்க முடியவில்லையே என்பதுதான் ஏக்கம். அதற்கு அவர் என்ன செய்ய முடியும்! ஊழ்வினையின் விளையாட்டாலே ஏற்பட்ட பிரிவு.

** ** **

ஊர் ஊராய்ச் சுற்றிவந்த அவர் தந்தையின் உடல் மெலிந்தது. எங்கெங்கோ திரிந்தார்; இறுதிக் காலத்தை எதிர் பார்க்கும் அவர் மனத்தில் தம் மகனை ஒரு முறை பார்த்துவிட்டு இறக்க வேண்டு மென்ற ஆசை பிறந்தது. எப்படிப் பார்க்க முடியும்! குணசேகர் எந்த ஊரில் என்ன வேலையிலிருக்கிறாரென்று யார் சொல்லப் போகிறார்கள் அந்தக் கிழவருக்கு.

ஒரு நாள், நல்ல வெய்யில். காலையில் ஏதோ கிடைத்ததைத் தின்றுவிட்டு திருப்பாப்புலியூர் போகும் மார்க்கத்தை நோக்கி நடந்துகொண்டிருந்தார். வண்டிப் போக்குவரத்துக்குத் தகுந்த ரஸ்தாதான். மழமழ வென்று தார் ஊற்றி மெழுகப் பெற்றிருந்தாலும் நடந்து செல்பவர்களுக்குத் தகுந்ததல்ல. காலில் செருப்பில்லாமல் இரண்டடி கூட எடுத்து வைக்க முடியாது. ஈயம் போல் ஒட்டிற்று. அதிலும் கோடை வெய்யில். கொடுமை சகிக்க முடியாது தள்ளாடித் தள்ளாடிச் சாலையின் ஓரமாக நடந்து சென்றார். மரம் கண்ட இடத்தில் நிற்பதும் மற்ற இடங்களில் கால் பூமியில் பாவாது ஓடுவதுமாக இருந்தார்.

ஓங்கி உயர்ந்து அடர்ந்த ஓர் ஆலமரம். அதனடியில் ஓடிக்கொண்டிருந்தது ஜிலு ஜிலு வென்று ஆழமான ஓர் வாய்க்கால். வாய்க்காலின் மீது கெட்டியான கருங்கல் பாலம். ஆலமரத்து நிழலில் மதகுக் கைப்பிடிச் சுவரின்மீது போய் ஆயாசமாக உட்கார்ந்தார். ஓடிவந்த களைப்பில் தம் நிலையே தமக்குத் தெரியவில்லை. உடம்பெல்லாம் முத்து முத்தாக வியர்த்து ஆறுப் பெருக்கெடுத்து ஓடிற்று. ஒரே மயக்கம்; தலை சுற்றிற்று. உட்கார்ந்தபடியே கண்களை மூடினாரோ இல்லையோ பித்தம் தலைக்கேறி விட்டது. அடுத்த கணமே பாலத்துக்கும் ஜலத்துக்கும் மத்தியில் பிரயாணம் செய்யத் தொடங்கி விட்டது அவர் உடல்.

சுமார் பத்தடி உயரத்திலிருந்து விழுந்தால் எப்படி இருக்கும்! தொப்பென்ற சப்தம் சற்று தூரத்தில் மீன் பிடித்துக் கொண்டிருந்த செம்படவர்கள் காதுக்கு எட்டிவிட்டது. இல்லையென்றால் அவரைக் கவனிக்க அங்கு ஆளே இருந்திருக்காது. ஆள் ஜலத்தில் விழுந்து விட்டான் என்பது தெரிந்தவுடனே இரண்டு மூன்று செம்படவர்கள் மின்னலாய்ப் பாய்ந்துவந்தனர் பாலத்தின் பக்கம். கிழவர் கரைக்கு இழுத்துக் கொண்டு வரப்பட்டார். கும்பல் கூடி விட்டது. கிழவருக்குப் பிரக்ஞை இல்லை. வாயாலும் மூக்காலும் தண்ணீர் வடிந்தது. டப் டப்பென்ற சப்தம் இருதயத்தில் மெல்ல ஒலித்தது. வெகு இலேசாக சுவாசமும் நடமாடியது. அங்கு கூடினவர் பலரும் பல குட்டி வைத்தியம் செய்யத் தொடங்கினர். அதற்குள் கூட்டம் பலக்கவே ஆளை அருகிலிருந்த அரசாங்க தர்ம வைத்திய சாலைக்குத் தூக்கிக் கொண்டு சென்றனர். அது ஜில்லா தலைமை ஆஸ்பத்திரி. எல்லா வசதிகளும் நிறையப் பெற்றது. டாக்டர்கள் ஏராளமாக உள்ள இடம். பல டாக்டர்கள் ஒன்று சேர்ந்து குணசேகரின் தந்தைக்கு உடனடியாக வேண்டிய சிகிச்சைகளும் பரிகாரங்களும் செய்து கொண்டிருந்தனர்.

அசைவற்றுக் கிடந்த கிழவர் இலேசாகக் கண்களைத் திறந்து பார்த்தார். ஒரு சில நிமிடங்கள் நாலா திசைகளிலும் அவர் விழிகள் சுழன்றன. தம் சுவாதீனம் அவருக்கு வரத் தொடங்கியது. ஒன்றுமே விளங்காமல் திருதிருவென்று விழித்தார். பழைய பாலமும், ரஸ்தாவும், ஆலமர நிழலும் நினைவிலிருந்ததே யொழிய ஆஸ்பத்திரிக்குள் எப்படி வந்தோ மென்ற விவரமே விளங்காமல் எல்லாருடைய முகத்தையும் உற்று உற்றுப் பார்த்தார். கரத்தைத் தூக்கி மெல்ல மெல்ல உடம்பெல்லாம் தடவவே ஆங்காங்கு கட்டப் பெற்றிருந்த கட்டுகள் தட்டுப்பட்டன. சிறிது சிறிதாக வலியும் அப்பொழுதுதான் ஆரம்பித்தது. தம் நிதானம் தமக்குவரவே குணசேகரைப் பற்றிய எண்ணங்களும் ஒன்றன் பின் ஒன்றாய்த் தோன்றி அவரை ஆழ்ந்த யோசனைக்குட்படுத்தியது.

அப்பொழுது அவர் படுக்கையின் பக்கம் ஓர் ஆள் வந்தான். உஷ்ணமானி ஒன்றை அவர் வாயில் வைத்துச் சற்று நேரம் பொறுத்து எடுத்துத் தன் கையிலிருந்த அட்டையில் எதையோ குறித்துக் கொண்டான். அதற்குமேல் அவர் விலாசத்தையும் விசாரித்தான். அவர் எந்த விலாசத்தைக் கொடுக்க முடியும்! நிற்குமிடம், ஓடுமிடம், உறங்குமிடம் எல்லாம் விலாசமாயிற்றே. குடியும், குடும்பமும் போய் வருடக் கணக்கில் ஆகும்போது அவருக்கேது நிலையான விலாசம்! இருந்தாலும் தம் நாடோடி வாழ்க்கையை அவனிடம் விளம்பரம் செய்ய விரும்பாதவராய்க் காலத்தைக் குறைத்துக்கொள்ளாமல், "பா. சாந்தமூர்த்தி முதலியார், சிற்றரச நல்லூர், சிதம்பரம் தாலூக்கா" என்றார். அதையும் தன் கையிலிருந்த அட்டையில் குறித்துக் கொண்டு அவன் அங்கிருந்து போய் விட்டான்.

** ** **

குணசேகர்தாம் அந்த வைத்திய சாலைக்கே நிர்வாக டாக்டர். அவர் மேற் பார்வையில்தான் அந்த வைத்திய சாலையின் பேரும் புகழும் பரவிக் கொண்டிருந்தது. காரணம் குணசேகரின் பெயருக்குப் பொருத்தமாக அமைந்த குணம்தான். ஏழைகளே அவர் கண்கள். காசு பணம் என்ற ஆசையே இல்லாதவர்.

அன்று மாலை மணி ஆறு இருக்கும். வழக்கம் போல் குணசேகரின் மேஜையின் மீது 'பைல்கள்' எல்லா வார்டுகளிலிருந்தும் கட்டுக்கட்டாக வந்து குவிந்தன. ஒவ்வொன்றாகப் புரட்டிப் பார்த்துக் கொண்டே வந்தார். 'பினாரன்ஸ் வார்டி'ல் அன்று எத்தனை புது கேஸ்கள் சேர்க்கப்பட்டன என்ற ஜாபிதாவைப் பார்த்துக் கொண்டே போகும் பொழுது "சாந்தமூர்த்தி முதலியார்" என்ற பெயர் அவர் கண்களில் பட்டுவிட்டது. அவ்வளவுதான்; தூக்கி வாரிப்போட்டது டாக்டருக்கு. என்ன இருந்தாலும் தம் சொந்தத் தந்தையின் பெயரல்லவா, எப்படி இருக்கும் குணசேகருக்கு! சட்டென்று அடுத்த பக்கம் புரட்டினார். ஆம், சந்தேகமே தீர்ந்து விட்டது. அதில் எழுதி



EVEREST HTA 54-1-TA

யிருந்த முகவரி தம் தந்தையினுடையதேதான். மேஜை, நாற்காலி, பைல்கள் எல்லாவற்றையும் அப்படி அப்படியே விட்டு விட்டு 'பிளாரன்ஸ் வார்டு'க்குள் நுழைந்தார். ஏழாவது கட்டில், அதில்தான் படுத்திருந்தார் டாக்டரின் தந்தை முதலியார் அவர்கள். தாடி மீசை யெல்லாம் நரைத்துப் போய் எலும்பும் தோலுமாய்க் கிடந்த தம் தந்தையை உடனே அடையாளம் கண்டு பிடித்து விட்டார் குணசேகர். 'அப்பா' என்று கட்டிலோடு கட்டிலாய்த் தம் தந்தையின்மீது விழுந்து கட்டிக் கொண்டார்.

கண்களைத் திறந்து பார்த்தார் முதலியார். தம் அரு மருந்தன்ன புதல்வன். கும்பிடப்போன தெய்வம் குறுக்கிட்டு விட்டது. தம் கடைசிக் கால எண்ணம் நிறைவேறி விட்டதாகப் பரம ஆனந்தம். 'குணசேகர், குணசேகர்' என்று மகனின் உடம்பெல்லாம் தடவினார். என்றைக்கிருந்தாலும் குணசேகர் அவருக்குக் குழந்தைதானே! அக் குழந்தையின் மீது தம் கரம் பட்ட இடமெல்லாம் தித்தித்தது, நீண்ட நாட்களாகப் பார்க்காத முதலியாரின் கண்களுக்கு. அதிலும் தம் மகன் அந்த வைத்திய சாலைக்கே அதிகாரி என்பதை யறிந்ததும் அவருக்கு அளவு கடந்த சந்தோஷம் உண்டாகி விட்டது.

ஜில்லா அதிகாரியின் தந்தை என்ற செய்தி எல்லோருக்கும் தெரிந்தவுடன் சொல்லவா வேண்டும்! முதலியாருக்கு முதல்தரமான கவனிப்பு. தம் மகனின் சொந்தப் பார்வையில் சிகிச்சை பெற்று வந்த முதலியாரின் உடம்பு வெகு துரிதமாகக் குணமாகிக் கொண்டு வந்தது. குணமடைந்த தந்தையைத் தம் வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போய்ப் போஷித்து வந்தார். இந்த சமயம் டாக்டரின் மனைவி சாரதா அவர்கள் வீட்டில் இல்லை. கண் வைத்தியத்தில் தனித் திறன் பெறவேண்டி மேற்படிப்புக்காகப் பம்பாய்க்குப் போயிருந்தாள். தம்முடன் இரவு பகல் இருந்து வந்த குணசேகரை, சாரதா எப்படி இருக்கிறாள் என்றாவது, அல்லது அவள் இருக்கிறாளா இல்லையா, சந்தான பாக்கியம் ஏதாவது உண்டா என்றாவது முதலியார் கேட்கவே இல்லை. இது குணசேகருக்குப் பெருத்த ஆச்சரியத்தை விளைவித்தது. சாரதாவின் மீது ஏன் தம் தந்தைக்கு அவ்வளவு பகைமை ஏற்பட வேண்டும் என்ற கேள்வியே டாக்டருக்குப் பெரிய பிரச்னையாக விருந்தது. எப்பொழுதோ நடந்தேறியது திருமணம். இடையில் எத்தனையோ வருடங்கள் ஓடி மறைந்தன. இன்னும் அவள்மீது அதிருப்தியுடன் இருக்கக் காரணமென்ன என்பதே விளங்கவில்லை. இப்படியே ஒரு சில மாதங்கள் கழிந்தன.

அந்திய காலத்தில் தம் தந்தையின் சுகத்துக்காகப் பாடுபடுவதே சிறந்த தொண்டெனக் கருதி அவர் தம் நலத்துக்குப் பாடுபட்டு வந்த குணசேகருக்கு ஒரு தந்தி வந்தது. சாரதா படிப்பு முடிவடைந்து விட்டதாயும் 'ஹனுமான்' என்ற இந்திய விமானத்தில் ஏறி அடுத்த நாள் இரவு பத்தரை மணிக்குப் பம்பாயிலிருந்து புறப்பட்டு வரப்போவதாயும் அறிந்தார். தம் தந்தையிடம் இதைப் பற்றித் தெரிவிக்காமலே நண்பர்கள் சிலரை அழைத்துக் கொண்டு நேரே சென்னைக்குத் தம் காரில் கிளம்பினார். அவருடன் டாக்டர் மாதவனும் கிளம்பினார். மாலை சரியாய் ஆறு மணிக்கு மீனம்பாக்கம் விமான நிலையம் சேர்ந்தனர். விமானமும் குறிப்பிட்ட நேரத்தில் வந்து சேர்ந்தது. அனைவரும் அமோகமான வரவேற்பு அளித்தனர் டாக்டர் சாரதாவுக்கு. கதர், ஜரிகை, ரோஜா யென ஒன்றின்மீது ஒன்றாக மாலைகள் கழுத்தில் குவிந்தன. அங்கிருந்த பலருடன் கை குலுக்கித் தன் சந்தோஷத்தைத் தெரிவித்துக் கொண்டாள் சாரதாவும். குணசேகரின் முகத்தில் என்றுமில்லாத ஓர் மகிழ்ச்சி. காரணம் தம் மனைவியின் பெருமையிலும் புகழிலும் தமக்கும் பங்கு உண்டு என்பதால்தான். சாரதா தன் பக்கத்தில் நின்ற குணசேகரைப் பார்த்ததும் ஒரு புன்னகை பூத்தாள். அதைத் தொடர்ந்தாற்போல் அவர் முகத்திலும் ஓர் புன்முறுவல். ஒருவரை யொருவர் கண்டது கண்கள்தாம். ஆனால் கருத்தை வெளிப்படுத்தியது அவர் முகங்களில் தோன்றிய அழகிய புன்முறுவல்கள்தாம்.

எல்லோரும் காரில் ஏறிக் கொண்டனர். காரும் ஊருக்குப் புறப்பட்டது. வழி நெடுகச் சாரதா தன் கணவனின் க்ஷேமத்தை விசாரித்துக் கொண்டே சென்றாள். குணசேகரும் தம் தந்தை ஆபத்துக்குள்ளாகி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுக் குணமாகித் தம்முடன் இருந்து வரும் விஷயத்தை ஒன்று விடாது விவரமாகக் கூறினார். அதைக் கேட்கச் சாரதாவுக்கே பெருத்த ஆச்சரியம்தான். தன்னளவில் அவருக்கு ஒருவித குற்றமும் செய்ததில்லை. எனவே தன்னிடத்தில் பிரியமாகவே இருப்பார் என்று சாரதா ஏதேதோ மனக்கோட்டைகள் கட்டிக் கொண்டே போனாள்.

காரும் கடலூர் வந்து சேர்ந்தது. டாக்டர் வீட்டுக் கதவு மூடப்பட்டிருந்தது. கனவு உலகத்தில் கற்பனை செய்து கொண்டு சென்ற சாரதா தன் மாமனாரைப் பார்த்து வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ள வேண்டுமென்ற எண்ணத்துடன் காரை விட்டிறங்கி அவசர அவசரமாகக் கதவைத் தட்டினாள். கதவு திறக்கப்பட்டதுதான். ஆனால் திறந்து கொண்டு வெளியில் வந்தவர் சாரதாவின் மாமனாரல்ல; அந்த வீட்டு வேலைக்காரன்தான். இவர்கள் வரவை எதிர்பார்த்துக் கொண்டே இருந்த வேலைக்காரன் ஓடிவந்து, "ஐயா! நேற்று! இரவு அந்தப் பெரிய மனுஷர் எங்கேயோ போனாரு. திரும்பி வரவே இல்லீங்க...... இந்தச் சாவியை மாத்திரம் என்னிடம் கொடுத்துட்டுப் போனாருங்க" என்று சொல்லியவாறே கதவைத் திறந்து விட்டான்.

மறுபடியும் ஆள் தேடும் படலம் ஆரம்பித்து விட்டது. தந்தையைக் காணாத வருத்தத்தில் ஆட்களை விட்டு எங்கெங்கோ தேடிப் பார்த்தார் குணசேகர். அவர் முயற்சி யெல்லாம் வியர்த்தமாகி விட்டன. வயது முதிர்ந்த கிழவரை வற்புறுத்தியா நிறுத்திவைக்க முடியும்! மறு நாள் காலையிலும் போனவர் திரும்பி வரவே இல்லை. ஆனால் வந்தது என்ன! ஒரு கடிதம்தான்.

** ** **

வழக்கம்போல் காலையில் எழுந்ததும் தினப் பத்திரிகையைக் கையில் பிடித்துக் கொண்டு சாய்வு நாற்காலியில் அமர்ந்த டாக்டரின் மனம் சுறு சுறுப்பிழந்து அமைதியை நாடியது. அப்படியே பத்திரிகையைப் பக்கத்திலிருந்த மேஜையின் மீது வைத்து விட்டுச் சற்றுப் பின்புறமாகச் சாய்ந்து கண்களை மூடியவாறே அசைவற்றிருந்தார். அவரையு மறியாமலே ஒரு சிறு தூக்கம். அயர்ந்த தூக்கமல்ல; மன ஆயாசத்தால் ஏற்பட்ட அசதி. அங்கு வந்த ஆபீஸ் சேவகன் கண்ணன் சில தபால்களைக் கொண்டு வந்து மேஜையின் மீது வைத்தான். அரைத் தூக்கத்திலிருந்த டாக்டர் நாற்காலியில் சாய்ந்தவாறே கண்ணன் உறைகளைக் கிழித்து உள்ளிருந்த கடிதங்களைக் கொடுக்க ஒன்றன் பின் ஒன்றாக வாசித்துக் கொண்டே வந்தார். (அடுத்த இதழில் முடியும்)

மரகதபுத்தர்

துஷ்யந்தன்



விமானம் கல்கத்தா விமான நிலையத்திலிருந்து கிளம்பிக் கொஞ்சம் கொஞ்சமாக மேலேறிக் கிழக்குத் திசை நோக்கிப் பறந்துகொண்டிருந்தது. பக்கத்திலிருந்த ராஜா சாகேப்பைப் பார்த்தேன். அவர் கண்கள் எங்களுக்கு எதிர்ப்புறத்தில் உட்கார்ந்திருந்த ஒரு யுவதியின் அழகை எடை போட்டுக் கொண்டிருந்தன. சமஸ்தானாதிபதியாக இருந்து ஒரு ராஜப் பிரமுகராக்கப் பட்டவர் அவர். பழைய ஆடம்பரமெல்லாம் இப்பொழுது போய் விட்டாலும், அந்தரங்கக் காரிய தரிசியான நாலும், ஊர் சுற்றும் அவர் ஆசையும் அவரை விட்டுப் போகவில்லை.

அவர் கண்களைக் கவர்ந்திருந்த அந்தப் பெண்ணைப் பார்த்தேன். கல்கத்தாவின் வீதிகளிலே ஆண்கள் துணையின்றி அலட்சியமாகச் சுற்றி வரும் எத்தனையோ நாகரிகப் பெண்களில் ஒருத்தி போலத்தான் இருந்தாள் அவளும்.

ஆனால், ராஜா சாகேப்பின் கண்கள் அலாதி வரம் பெற்றவை. ஆயிரம் அழகிகளில் ஒருத்தியை மட்டும் தனியாக எடுத்து அவருக்குக் காட்டிக் கொடுக்கும் அவை. அந்த முடிவை மாற்ற யாராலும் முடியாது. ஆகாசத்திலே சஞ்சரிக்கும் போது கூட அவை தம் தொழிலைச் சரிவரத்தான் செய்கின்றன என்பதைத் தெரிந்து கொண்டேன். தாய்லாந்து தேசத்தின் தலைநகரான பாங்காக் நகரை நோக்கி விமானம் போய்க் கொண்டிருந்தது. பூமி தேவியின் அரவணைப்பிலிருந்து பிரிந்து மேலே வந்தவர்களுக்கு ஏக்கத்தின் வலி தெரியாமலிருக்க மனசுக்கு மருந்து கொடுத்து, நாவுக்கு மிட்டாய் கொடுத்து, புன்னகை காட்டி, உபசரிக்கும் கந்தர்வப் பெண்ணாக விமானத்திலே சுற்றி வருகிற 'ஹோஸ்டஸ்' அப்பொழுது எங்களிடம் வந்து ஏதாகிலும் பத்திரிகைகள், புத்தகங்கள் வேண்டுமா எனக் கேட்டாள். தினசரிப் பத்திரிகை ஒன்றை வாங்கிக் கொண்ட நான் அதைப் படிக்க ஆரம்பித்தேன். படங்கள் நிறைந்த ஒரு புத்தகத்தை வாங்கிக் கொண்ட ராஜாசாகேப் அந்தப் படங்களையும் எதிரிலிருந்த அந்தக் கல்கத்தா அழகியையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தார்.

பகலின் ஆட்சி மங்கிப் போய் இரவின் ஆட்சி ஆரம்பித்து விட்டது. எங்கள் விமானம் பாங்காக் நகரத்தின் விமான நிலையத்தில் மெல்ல மெல்லக் கீழேயிறங்கும் காகிதக் காற்றாடி போல இறங்கியது. உலகைக் கவ்வும் இருள் போல என் மனதிலும் உருத் தெரியாத பயம் கவ்விப் பிடித்தது.



உற்றார் உறவினர் நம்மை எதிர்கொண்டு அழைக்காவிட்டாலும் பிரயாண ஏஜெண்டுகள் விமான நிலையத்தில் வந்து நின்று நம்மை வரவேற்கத் தவறுவதே யில்லை. ராஜா சாகேப்பையும் என்னையும் அப்படித்தான் ஒருவர் வரவேற்றார். மிகப் பெரிய ஓட்டல் ஒன்றில் நாங்கள் தங்குவதற்காக ஏற்பாடு செய்திருந்தார். மூன்றாவது மாடியில் எனக்கும் அவருக்கும் பக்கத்தில் பக்கத்தில் அறைகள் விடப் பட்டிருந்தன. ராஜாசாகேப்பை அவர் அறையில் விட்டு விட்டு என் அறைக்கு வந்து நான் படுத்த பொழுது இரவு பத்தேகால் மணி இருக்கும். நிம்மதியாகத் தூங்கலாமென்று படுத்த என்னை எப்படியோ அடையாளம் கண்டுகொண்டு கும்பகோணத்துக் கொசுக்கள் வந்து உறவாடத் தொடங்கி விட்டன. சென்னை நகரத்தின் ஓட்டல்களில் தங்கி யிருந்தபோது மூட்டைப் பூச்சிகள் என்னை வதைத்திருக்கின்றன. ஆனால் இந்த பாங்காக் கொசுக்களிடம் அவை தோற்றுப் போய் ஓடத்தான் வேண்டும். அவைகளோடு போராடி நானும் தோற்றுப் போனேன். விரக்தியோடு படுக்கையை விட்டு எழுந்து கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தேன்.

இரவு வெகு நேரமாகிவிட்டது போல எனக்குத் தோன்றினாலும் மற்றவர்களுக்கு அப்படித் தோன்றவில்லை போலிருக்கிறது. அந்த நேரத்திலும் வெளியே போகிறவர்களும் உள்ளே வருகிறவர்களுமாக எத்தனையோ பேர் அங்கே இருந்தார்கள். வேடிக்கை பார்த்தபடியே நின்றிருந்த என் கவனத்தைக் கவர்ந்தது அந்த மாடிக் கோடியில் தென்பட்ட ஒரு பெண் உருவம். ஆமாம், அதே கல்கத்தா பெண்தான். அவள் இங்கேயும் வந்து விட்டாளா!

அவள் நேராக என்னை நோக்கித்தான் வந்து கொண்டிருந்தாள். அருகே வந்ததும் "நமஸ்தே" என்றாள். "நமஸ்தே, நீங்கள் கல்கத்தாவிலிருந்து வந்திருக்கிறீர்கள் இல்லையா!" என்றேன்.

"ஆமாம், உங்களோடு தானே விமானத்தில் வந்தேன்! நீங்கள் ரொம்ப நாள் இங்கே தங்குவீர்களா! ராஜா சாகேப் வேறு எங்காவது போகப்போகிறாரா!" இதைக் கேட்டு விட்டு அவள் என் முகத்தை உற்றுப்பார்த்தாள்.

"மூன்று நாள் இருப்போம், பிறகு ஹாங்காங், டோக்கியோ போகலாமென்றிருக்கிறோம். நீங்கள்...!" என்று என் கேள்வியைப் பாதியிலேயே கைவிட்டேன். அவள்



இந்தக் கேள்விக்குத்தான் காத்திருந்தது போல மள மளவென்று பேச ஆரம்பித்து விட்டாள்.

"நான் கல்கத்தாவி லிருக்கும் பெண்கள் பத்திரிகை யொன்றில் விசேஷப் பிரதிநிதியாக இருக்கிறேன். மனத் தத்துவ ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறேன். அது சம்பந்தமாகத்தான் இங்கே வந்தேன். நானும் ஹாங்காங், டோக்கியோ நகரங்களுக்குப் போகத்தான் வேண்டும்."

"ஆமாம், உங்கள் பெயரைச் சொல்லவில்லையே!"

"மறந்து விட்டேன். சௌதாமினி—ஞாபக மிருக்கும் இல்லையா! ராஜா சாகேப்பிடம் சொல்லி வையுங்கள். அவர் உதவி எனக்குத் தேவையா யிருக்கும். நானைக்கு மறுபடி சந்திக்கலாம்." அவள் அப்பால் சென்று விட்டாலும் அவள் குரல் என்னருகி லேயே கேட்பது போலத்தான் இருந்தது. அவள் கண்கள்—அவை என்னவோ போல இருந்தன. அவள் நிஜமாகவே மனோதத்துவ ஆராய்ச்சியில் ஈடுபட்டவள்தானா! உள்ளத்திலிருக்கும் எண்ணங்களைச் சுண்டி யிழுக்கும் தூண்டில்களாகத்தான் தென்பட்டன அவள் கண்கள். ஆனால் அதற்கும் அப்பால், இன்னும் ஏதாவது மறைமுகமாக இருக்குமா!

இந்த யோசனைகளுடனே உள்ளே வந்து படுத்தவன் நன்றாகத் தூங்கி விட்டேன்.

மறுநாள்.

ராஜாசாகேப்பிடம் நான் பேசிக்கொண்டிருந்த போது பையன் ஒருவன் உள்ளே வந்து யாரோ ஒரு பெண் அவரைப் பார்க்க விரும்புவதாகச் சொன்னான். உடனே எனக்குக் கல்கத்தா அழகி சௌதாமினியின் நினைவுதான் எழுந்தது.

மறு நிமிஷம் அறைக் கதவைத் திறந்து கொண்டு அவளே உள்ளே வந்து விட்டாள். ஆனால் அவள் முகத்தில் இப்பொழுது என்னமோ பீதி படர்ந்திருந்தது. எவ்வளவோ மறைக்க முயன்றும் அவளால் அதை மறைக்க முடியவில்லை. "உட்காருங்கள்" என்று அவளுக்குச் சொல்லி விட்டுக் கதவைத் தாளிடுவதற்காகப் போனேன். அப்பொழுது தான் அந்த அறையைத் தாண்டி ஒரு இளைஞன் போய்க் கொண் டிருந்தான். நிச்சயம் அவன் வங்காளிதான். அவனைக் கண்டு பயந்துதான் இவள் வந்திருக்கிறாளா! ஏன்!

கதவை நன்றாகத் தாளிட்டு விட்டு உள்ளே வந்து உட்கார்ந்தேன்.

முன்னுரை எதுவுமில்லாமலேயே அவள் பேச ஆரம்பித்து விட்டாள்:

"நேற்று நான் சொன்னேன் இல்லையா, உங்கள் உதவி தேவையாயிருக்கு மென்று. அது இப்பொழுது அத்தியாவசியமாகி விட்டது. என்னுடைய ஆராய்ச்சி சம்பந்தமாக நான் சில முக்கியமான காகிதங்களை வைத்திருக்கிறேன். பலதரப்பட்ட மனிதர்களுடைய நடவடிக்கைகளும் அவர்கள் மனக் குறைகளும் நிரம்பிக் கிடக்கும் கடிதங்கள்; ரகசியமென்று கருதப்பட்டவைகளான நீண்ட வாக்குமூலங்கள் இவைகளெல்லாம் இருக்கின்றன. இவைகளைக் கைப்பற்றி, சம்பந்தப்பட்டவர்களுக்குக் காட்டிப் பணம் பறிக்கலாமென்ற நோக்கத்தோடு சிலர் என்னைச் சுற்றி வருகின்றனர். உங்களுக்குத் தெரியும் அவை எத்தனை ரகசியமானவை, எவ்வளவு முக்கியமானவை என்று. நான் அவைகளைக் கொண்டு வந்து உங்களிடம் முத்திரையிட்ட உறையோடு கொடுத்துவிடுகிறேன். இந்தச் சனியன்கள் தொல்லை தீர்ந்த பிறகு உங்களிடம் வந்து வாங்கிக்கொள்கிறேன். ராஜா சாகேப்பிட மிருந்தால் அது பத்திரமா யிருக்கும் என்று நம்புகிறேன்......"



அவள் முடிப்பதற்குள் ராஜா சாகேப் அவர் நாற்காலியிலிருந்து எழுந்து என்னிடம் வந்து நின்றபடி சொன்னார்:

"அவசியம் செய்கிறேன். கொண்டு வாருங்கள். எவனாவது வந்து வாலாட்டினால் என்னிடம் சொல்லுங்கள். நான் பார்த்துக் கொள்கிறேன்—அயோக்கியன்கள்!"

"ரொம்ப வந்தனம். பிறகு வருகிறேன்" என்று கூறி விட்டு, அவள் போய் விட்டாள்.

அவள் போவதைப் பார்த்தபடியே நின்று கொண்டிருந்தார் ராஜாசாகேப்.

சற்று நேரத்திற்கெல்லாம் அவள் திரும்பி வந்தாள், கையில் அந்த முத்திரையிடப்பட்ட உறை இருந்தது. ராஜா சாகேப் அதை வாங்கித் தம்மிடம் வைத்துக் கொண்டார். அதன் பிறகு அவள் என்னவெல்லாமோ பேசிக் கொண்டிருந்தாள். அவள் கண்கள் அந்த அறையைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்தன. எப்படியோ ஒரு வழியாகப் பேச்சை முடித்து அன்று மாலை ஒரு நடனத்துக்குத் தன்னுடன் வரும்படி ராஜா சாகேப்பைச் சம்மதிக்க வைத்துவிட்டாள்.



சரவணன்-

இருவரையும் அனுப்பி விட்டு நான் மட்டும் அன்று மாலை ராஜாசாகேப்பின் அறையிலேயே தங்கி விட்டேன். அப்பொழுது அங்கே வந்த ஹோட்டல் சிப்பந்தி ஒருவனை மெதுவாக விசாரிக்க ஆரம்பித்தேன். அவன் சொன்னவை என் மனசை இன்னும் கலக்கி விட்டன. சௌதாமினி வெளியே அடிக்கடி போய் வருகிறாள்; வேறு சில ஹோட்டல்களில் தங்கியிருப்பவர்களைச் சந்திக்கிறாள்; ஆனால் அவள் தன் அறைக்கு மட்டும் யாரும் வர அனுமதிப்பதில்லை. அவளுடைய அறைக்குள் ரகசியமாக அவள் இல்லாத சமயத்தில் வேறொரு சிப்பந்தியின் உதவியைக்கொண்டு நுழைந்து எதையோ வெகு நேரம் தேடியிருக்கிறான் அந்த வங்காளி இளைஞன்......!

சௌதாமினி சொல்வது ஒருகால் உண்மையாகவே இருக்கலாமோ!

கொஞ்சம் தாராளமாகவே அந்தச் சிப்பந்திக்குப் பணம் கொடுத்தேன். அவனுக்குத் தெரியும் விஷயம் எதையும் அவ்வப்பொழுதே வந்து சொல்லும்படி கேட்டுக் கொண்டேன்.

சிந்தனையில் மூழ்கிப் போயிருந்த என்னை ராஜா சாகேப்பின் குரல் உலுக்கி விட்டது.

"இவ்வளவு சீக்கிரத்தில் வந்து விட்டீர்களே" என்று கேட்டேன்.

"ஆமாம், நடனம் முழுவதும் நடக்கவில்லை. நடுவிலே ஏதோ குழப்பம் ஏற்பட்டதால் நான் சௌதாமினியை அழைத்துக் கொண்டு வந்து விட்டேன்" என்றார் அவர். பிறகு என்னவெல்லாமோ பேசியதில் நேரம் போனதே தெரியவில்லை. அப்போது "உள்ளே வரலாமா!" என்று கேட்டுக்கொண்டே வந்தாள் சௌதாமினி. அவள் கையில் அழகான ஒரு புத்தர் சிலை இருந்தது.

"ராஜாசாகேப், இது இந்த நாட்டின் பிரசித்தமான மரகத புத்தரின் சின்ன வடிவம். ரொம்ப ரொம்ப மதிப்புள்ளது. புத்தரின் கண்களிலே தான் எத்தனை கருணை! காலடியில் விழுந்து காலமெல்லாம் கடத்தி விடலாம் போல இருக்கிறது, இல்லையா! விசித்திரப் பொருள்களாகச் சேகரிப்பவர்களுக்கு இது விலை மதிப்பில்லாதது. என்னிடம் வைத்திருக்கப் பயமாயிருக்கிறது. எனக்காக நீங்களே வைத்திருந்து பிறகு கொடுங்கள்."

ராஜா சாகேப் ஆவலுடன் அதை வாங்கி வைத்துக் கொண்டார்.

அந்தச் சிலை அப்படி ஒன்றும் பிரமாதமான மதிப்புள்ளதாக எனக்குத் தோன்றவில்லை. ஆனால் இம்மாதிரியான விஷயங்களில் எனக்குப் பரிச்சயம் அதிகமில்லையே!

நான் இன்னும் அந்த மரகத புத்தர் கோவிலுக்குப் போகவில்லை. மறுநாளைக்குப் போகலாம் என்று இருந்து விட்டேன்.

மறுநாள் காலையிலே தூங்கி எழுந்ததும் ராஜா சாகேப் என்னிடம் வந்தார்.

"என்ன ராமநாதன், நமக்கு அவசரமில்லை தான். ஆனால் சௌதாமினி என்னமோ உடனே ஹாங்காங் போக வேண்டுமென்று சொல்கிறாள். நாமும் கிளம்பி விடலாமே!" என்றார்.

"மரகத புத்தர் கோவிலுக்குக் கூட இன்னும் போகவில்லையே!" என்றேன்.

"அதுதான்சௌதாமினி கொடுத்த சிலையிலிருந்து எப்படியிருக்குமென்று தெரிகிறதே!" என்றார்.

நான் பதில் சொல்லிக் கொண்டு நிற்கவில்லை.

சௌதாமினியின் கைப் பொம்மையாக அவர் ஆகிவிட்டார். ஆகவே அன்று பகல் நாங்கள் ஹாங்காங் நோக்கி விமானத்தில் போய்க் கொண்டிருந்ததில் வியப்பில்லை.

விமானத்தில் 'ஹோஸ்டஸ்' கொடுத்த பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்தேன். ஒரு செய்தி என் கண்களுக்குப் பளிச்செனப் பட்டது. அதைப் படித்து விட்டு, "என்ன ராஜா சாகேப், அன்று நடனம் முடியாமலே வந்து விட்டீர்களே! குழப்பம் என்ன தெரியுமா! யாரோ ஒரு பிரபல வியாபாரியின் மனைவியினுடைய கழுத்திலிருந்த வைரத்தின மாலை களவு போய் விட்டதாம், அந்தக் கூட்டத்தில்!"

"ஓகோ, அப்படியா!" என்றார் அவர், அவ்வளவாகச் சுவாரசியமில்லாமல். சௌதாமினியின் முகத்தை நான் பார்க்க முடியவில்லை. அவள் வெளிப்புறம் பார்த்துக் கொண்டிருந்தாள். ஒருகால் அவளுக்குத் திருடன் யார் என்று சந்

தேகம் ஏதாவது இருக்குமோ! அதை ஆராய்வதற்காகத்தான் இத்தனை அவசரமாக ஹாங்காங் புறப்பட்டு விட்டானோ!



ஹாங்காங் வந்து மூன்று நாட்களாகி விட்டன. பாங்காக் அனுபவங்கள் கூட மறந்து விடும் போல இருந்த அந்த நிலையில்தான் நான் எதிர்பாராத விதமாகச் சௌதாமினியின் அறைப் பக்கம் இரவு வெகு நேரத்துக்குப் பிறகு போக வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. ஜன்னல் வழியாக உள்ளே விளக்கு எரிவது தெரிந்தது. மேஜையருகில் உட்கார்ந்திருந்த அவள் முதுகுப் புறம் தான் எனக்குத் தெரிந்தது. அந்த மின்வெட்டுப் பார்வைக்குள்ளேயே என் கண்கள் அவள் மேஜையிலிருந்த ஒரு கத்தியைக் கண்டு கொண்டன. பள பளவென்று மின்னும் அந்தக் கத்தி அவளுக்கு எதற்கு! மனோதத்துவ ஆராய்ச்சி செய்யும் அவளுக்கு இது தேவையில்லையே! ஒரு சமயம் உடலைக் குத்திக் கிழித்து உள்ளேயிருக்கும் மனசை ஆராய்வதற்காக இருக்குமோ!

என் முன்னால் நிழல் விழவே திரும்பிப் பார்த்தேன். அதே வங்காளி இளைஞன்— சந்தேகத்தோடு என்னைப் பார்த்துக் கொண்டே அவன் அப்பால் சென்றான். என் நெஞ்சு காரணம் தெரியாமல் தடுமாறியது. கொஞ்சம் அமைதி பெற வெளியே போய் வரலாமென்று ஹோட்டலின் பின்புறமிருந்த ஒரு பிரம்மாண்டமான தோட்டத்தில் நுழைந்தேன்.

என்னவோ யோசனையில் மெதுவாக நடந்து கொண்டிருந்த என் கால்கள் யாரோ உரக்கப் பேசும் சத்தம் கேட்டதும் தாமாகவே நின்று விட்டன. அடர்ந்த செடிகளின் மறைவில் ஓர் மரத்தடியில் இருவர் நின்று பேசிக் கொண்டிருந்தார்கள்.

“நிஜமாகவே உனக்கும் ஒன்றும் தெரியாதா! பொய் சொல்லாதே! எல்லாவற்றையும் சொல்லா விட்டால் அப்படியே கொன்று போட்டு விடுவேன்” என்று ஒருவன் உறுமிக் கொண்டிருந்தான். ஆனால் மற்றவன் பேசவேயில்லை. சிறிது நேரம் நின்று பார்த்தேன். ஒன்றும் சத்தம் வரவில்லை. மறுபடி நடக்க ஆரம்பித்தேன். எங்கிருந்தோ ஒரு துப்பாக்கி வெடிச் சத்தம் கேட்டதும் என் நெஞ்சை அழுத்திப் பிடித்துக் கொண்டேன். என்னை யாரும் சுட்டு விடவில்லை. ஆனால்...அதோ போவது அந்த வங்காளி இளைஞன்தானே! அவன்தான்! ஆனால் கையில் ஒன்றும் துப்பாக்கியைக் காணோமே! மறு நிமிஷம் என்னவோ தோன்றவே வேகமாக ராஜாசாகேப் பின் அறையை நோக்கி ஓடி வந்தேன். அப்பொழுதுதான் அங்கிருந்து சௌதாமினி வெளியே வந்து கொண்டிருந்தாள். அவளைக் கவனிக்காதவன் போல நான் அறையில் நுழைந்தேன். நல்லவேளை. ராஜாசாகேப் ஒரு கேடுமில்லாமல் குஷியாகத்தான் உட்கார்ந்திருந்தார்.

“இப்பொழுதுதான் சௌதாமினி வந்து இந்தப் புத்தர் சிலையைக் கொடுத்து விட்டுப் போனாள். பாருங்கள், எத்தனை சாந்தம்! கண்களில் தான் எவ்வளவு கருணை! அடடா, எல்லாவற்றையும் துறந்து அவர் காலடியில் உட்கார்ந்து ‘புத்தம் சரணம் கச்சாமி’ என்று பாடலாம் போலிருக்கிறது” என்று உற்சாகமாகக் கூறினார் ராஜா சாகேப்.

நான் இந்த இரண்டாவது புத்தர் சிலையைப் பார்த்தேன். உண்மையில் வெள்ளைப் பளிங்குக் கல்லால் உருவாக்கப்பட்ட ஒரு போகன உருவம் தான் அது. வெள்ளைத் தாமரைப் பூவின் மேல் வீற்றிருக்கும் அந்த பகவானைப் பார்த்தேன். எல்லையற்ற இந்த லோக மாயைகளைக் கண்டு அவர் புன்னகை பூத்துக் கொண்டிருந்தார்.

“இந்தச் சிலையைக் கூடவா திருடிக் கொண்டு போவார்கள்!” என்றேன் சந்தேகத்தோடு.

“என்னவோ அவள் பயப்படுகிறாள். கல்கத்தாவில் வந்து வாங்கிக் கொள்கிறேன் என்கிறாள்” என்றார் ராஜா சாகேப். நான் ஒரு பெருமூச்சு விட்டேன். இவளுக்கு ஏன் இந்தப் புத்தர் சிலைகளின் மேல் இத்தனை மோகம்! இந்த மகான் கூட அவள் மனசுக்கு மட்டும் அப்படி ஒன்றும் சாந்தி கொடுத்து விட்டதாகத் தெரியவில்லையே!

திடீரென்று எனக்கு அந்தத் துப்பாக்கி வெடிச் சத்தம் நினைவுக்கு வந்தது.

“ராஜா சாகேப், உங்களுக்கு ஏதாவது வெடிச் சத்தம் கேட்டதா இப்பொழுது!” என்று கேட்டேன். அதே சமயத்தில் சௌதாமினி அறைக்குள்ளே நுழைந்து என் பக்கத்தில் வந்து நின்றாள்.



“விஷயம் தெரியுமா! கீழே யாரோ ஒருவன் துப்பாக்கியால் சுடப்பட்டு இறந்து கிடக்கிறானாம்!” என்று சொல்லிவிட்டு என்னையே உற்றுப்பார்த்தாள். உனக்கு ஏதாவது தெரியுமா என்பதுபோல இருந்தது அந்தப் பார்வை.

தோட்டத்தில் நடந்ததை நான் ராஜா சாகேப்பிடம் சொன்னபோது அவன் முகம் எப்படியெல்லாமோ மாறுவதை நான் கவனிக்காமலில்லை.

“அப்படியானால் அது அந்த முக்கர்ஜி செய்த வேலைதான், ஸார்” என்றாள் முடிவாக.

“யார் அந்த முக்கர்ஜி!”

“அதுதான் அந்த வங்காளி இளைஞன்.”

“அவன் ஏன் அந்த மனிதனைக் கொல்ல வேண்டும்!”

சௌதாமினி மீண்டும் என்னை ஊடுருவுவது போல் உற்றுப் பார்த்தாள்.

"என்னமோ எனக்கு அப்படித்தான் தோன்றுகிறது. அவனைக் கண்டாலே எனக்குப் பிடிக்க வில்லை, ஸார். நாளைக்கே நாம் டோக்கியோவுக்குப் புறப்பட்டு விடுவோம்" என்று ராஜா சாகேப்பைப் பார்த்துச் சொன்னாள்.

"நிச்சயமாக அந்த மூக்கர்ஜி தான் கொலை செய்தான் என்று நீங்கள் நம்பினால் ஏன் போலீசுக்குச் சொல்லக் கூடாது!" என்று கேள்வி போட்டேன் நான்.



சௌதாமினியின் முகத்தை நான் பார்க்க முடியாதபடி அவள் ஜன்னல் பக்கம் நின்று வெளியே பார்த்துக் கொண்டிருந்தாள். என் வார்த்தைகள் அவள் செவியில் விழுந்ததும் ஒருமுறை சீறினாள்.

"பாருங்கள், ராஜா சாகேப்! நாமெல்லாம் சாட்சிக் கூண்டிலேறி நிற்க வேண்டுமென்று இவருக்கு ஆசையாயிருக்கிறது போல இருக்கிறது" என்று ஒரு பாணம் போட்டாள்.

"ஆமாம், நாம் அதிலெல்லாம் தலையிடக் கூடாதுதான், மிஸ்டர் ராமநாதன்!" என்று தீர்ப்புக் கூறினார் ராஜா சாகேப்.

சௌதாமினியின் ஏற்பாட்டின்படி நாங்கள் ஜப்பான் புறப்பட்டு வந்து விட்டோம். எங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஹோட்டலின் அறைகளைப் பார்வையிடுவதற்காக நான் போனபோது மயக்கம் போட்டு விழாமல் தப்பியதே ஒரு அதிசயம்தான். முதலில் ராஜா சாகேப்பின் அறை. அடுத்தது சௌதாமினியின் அறை. பிறகு என்னுடையது. அதற்கடுத்தது, எம். பி. மூக்கர்ஜி என்பவர் பெயரில் இருந்தது!

சௌதாமினியிடம் நான் இதைச் சொல்லவில்லை. ஹோட்டலுக்கு வந்து தங்கி விட்டோம்.

அன்று இரவு.

என் அறையில் உட்கார்ந்தபடி ஜன்னல் வழியாக வெளியே பார்த்துக் கொண்டிருந்தேன். கிழக்கத்திய சீமை நிலவு வெளிச்சத்தில் சுவர்க்கம் போலக் காட்சியளித்துக் கொண்டிருந்தது. என் மனம் முழுவதும் களி துள்ளியது. அப்போது அறைக் கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்டது.

சௌதாமினியாகத்தா னிருக்கும் என்று நினைத்துக் கொண்டே போய்க் கதவைத் திறந்தேன்.

அறை வாசலில் நின்றது மூக்கர்ஜி — அந்த வங்காளி இளைஞர்.

"கொஞ்சம் உள்ளே வரலாமா!" என்று பணிவுடன் கேட்டார் அவர்.

"வாருங்கள், என்னைத் தேடி வந்தீர்களா.........இல்லை, வேறு யாராவது!" என்றேன்.

"உங்களையேதான் ராமநாதன். ராஜா சாகேப்பைப் பற்றி நான் கவலைப்படவில்லை. சௌதாமினி அவரை ஒன்றும் செய்துவிட மாட்டாள். நீங்கள் தான் உங்களைக் கொஞ்சம் பத்திரமாய்ப் பார்த்துக் கொள்ள வேண்டும்!"

"என்ன, என்னைப் பத்திரமாகப் பார்த்துக் கொள்ள வேண்டுமா!"

"ஆமாம், சார்! நீங்கள் அவளைச் சந்தேகிப்பது போலக் காண்பித்துக் கொண்டு விட்டீர்கள். அது ஆபத்தானது."

"அப்படியானால் நீங்கள்...!"

"சொல்கிறேன். முதலில் அறைக் கதவைத் தாளிட்டு விட்டு வந்து உட்காருங்கள்."

மௌனமாக அந்தக் காரியத்தைச் செய்து விட்டு வந்து உட்கார்ந்தேன்.

"சௌதாமினி கொடுத்திருக்கும் காகிதங்களையும், புத்த விக்கிரகங்களையும் ராஜா சாகேப் பத்திரமாய்த்தானே வைத்திருக்கிறார்!" என்று மூக்கர்ஜி மிக நிதானமாகத்தான் இந்தக் கேள்வியைக் கேட்டார்.

"அதைப் பற்றிக் கவலைப்பட நீங்கள் யார் என்பதை நான் தெரிந்து கொள்ளலாமா!" என்று ராஜா சாகேப்பின் காரியதரிசி என்ற தோரணையில் கேட்டேன் நான்.

அவர் சிரித்தார்.

"போகட்டும், அவைகள் எல்லாம் எத்தனை முக்கியமானவை என்றாவது தெரியுமா!"

"தெரியும் ஸார், நன்றாகத்தான் கேட்டுத் தெரிந்து கொண்டிருக்கிறோம். நீங்கள் அதை அவளிடமிருந்து ஏனப்பி விட முடியாமலிருக்கத் தான் நாங்கள் வாங்கி வைத்திருக்கிறோம். என்னைப் பயமுறுத்தியோ அல்லது எனக்கு ஏதாவது சன்மானம் கொடுத்தோ அவைகளை நீங்கள் பெற்று



விட முடியாது. அந்த நோக்கத்துடன் என்னிடம் வந்திருந்தால் பேசாமல் எழுந்து வெளியே போய் விடலாம்'' என்று மிகவும் கடுமையாக உறுமினேன் நான்.

அந்த மனிதர் கடகடவென்று சிரித்தார்.

''ஒரு உபகாரம் செய்வீர்களா! என்னோடுகூட உங்கள் ராஜா சாகேப்பின் அறைக்கு வருவீர்களா! முக்கியமானவைகளை அங்கேயே பேசிக் கொள்ளலாம்.''

எனக்கு அவர் போக்கே கொஞ்சங் கூடப் பிடிபடவில்லை. பேசாமல் எழுந்து அவருடன் ராஜா சாகேப்பின் அறைக்குப் போனேன்.

அவர் மட்டும் தானிருந்தார் உள்ளே.

''ராஜா சாகேப், இவர் உங்களைக் கொஞ்சம் பார்க்க வேண்டுமாம். சௌதாமினியைப் பற்றி...'' என்று சொல்ல ஆரம்பித்தேன்.

வாசலுக்குப் பக்கத்திலிருந்த ஜன்னல் மேல் ஒரு நிழல் விழுந்தது. ஒரு வினாடிதான்!

முக்கர்ஜி ஒரு நிமிஷம்கூடத் தாமதிக்கவில்லை. ''பிறகு பேசலாம், முதலில் சௌதாமினியின் அறையில் அவள் இருக்கிறாளா என்று பார்த்து விட்டு வாருங்கள்'' என்றார். நான் அங்கே விரைந்தேன்.

அவள் அறைக் கதவு திறந்தபடியேதான் இருந்தது. படுக்கையில் அவள் விழுந்து கிடந்த நிலை ரொம்ப மோசமாக இருந்தது. விலாப்புறத்தில் நான் அன்று ஒருநாள் பார்த்த அதே கத்தி!

அவசரமாக வந்து ராஜா சாகேப்பினிடம் விஷயத்தைச் சொன்னேன். அவர் முகம் வெளுத்து விட்டது. அப்படியே விலவிலத்துப் போய் நாற்காலியில் உட்கார்ந்து விட்டார். முக்கர்ஜி மட்டும், ''நினைத்தபடிதான் நடந்திருக்கிறது. உண்மையில் நான் விரும்பியதும் அது தான்'' என்று மெதுவாகச் சொன்னார்.

ஒன்றும் புரியாமல் விழிக்கும் ராஜாசாகேப் பக்கம் திரும்பி அவர், ''சௌதாமினியைப் பற்றி உங்கள் அபிப்பிராயமென்ன!'' என்று கேட்டார்.

''அவளா......! ரொம்ப அழகானவள்'' என்று டக்கெனப் பதில் வந்தது.

''அந்த அழகுதான் அவளை டோக்கியோ வரையில் கொண்டு வந்து விட்டது; அந்த அழகுதான் உங்கள் கண்களை யெல்லாம் மறைத்துவிட்டது; அவளை எதுவுமே கேட்கவொட்டாமல் வாயடைக்கச் செய்து விட்டது. ராஜாசாகேப், கொஞ்சம் அவள் கொடுத்த பொருள்களைக் கூர்ந்து கவனித்திருப்பீர்களானால்......! நான் சொல்கிறேன். இப்பொழுது பாருங்கள். முதலில் உங்களிடம் கொடுத்தாளே கடிதங்கள், அவை அவளுடைய ரகசியக் கூட்டத்தினர் எழுதிய கடிதங்கள்தாம். எங்கே, எப்பொழுது கொள்ளையிடுவது போன்ற விவரங்கள் அதிலே அடங்கி யிருக்கும். அதைக் கொண்டு நான் அவளைப் பிடித்து விடாமலிருக்கத்தான் அந்தக் கடிதங்களை உங்களிடம் கொடுத்து விட்டாள்.''

''என்ன! அவள் கொள்ளைக்காரியா!''

''ஆமாம் ஐயா, ஆமாம். அவள் யாரையும் தானிருக்கும் இடத்துக்கு வரவழைப்பதில்லை. வெளியே போய்த்தான் சந்திப்பாள். அதனாலே தான் எனக்கு உளவு சரியாகக் கிடைக்காமலே போய் விட்டது. அந்த மரகத புத்தர் சிலையை எடுத்துக் கொஞ்சம் கவனித்துப் பாருங்கள். மரகத புத்தரின் பாதங்களுக்கடியில் மூன்று அரசர்கள் மண்டியிட்டு என்னவோ காணிக்கை கொட்டுவது போல இருக்கிறதே பார்த்தீர்களா! அந்தக் காணிக்கையிலே கலந்து நிற்கும் நவரத்தினங்களும் அன்று பாங்காக் நகரில் நீங்கள் நடனத்துக்குப் போனபோது காணமற் போன ஆபரணத்திலிருந்து எடுத்தவை. உயர்ந்த நீலங்கள் இரண்டும் புத்தரின் கண்களாக அமைந்து விட்டன. பீடத்திலே பதித்திருக்கும் அத்தனையும் நல்ல முத்துக்கள். கூட்டத்தின் மத்தியில் அவள் ஆட்களில் ஒருவன் அதைக் கொண்டு வந்து அவளிடம் கொடுத்து விட்டான். ராஜா சாகேப், நீங்கள்தான் அவளை மிகச் சுலபமாக அழைத்து வந்தீர்கள், எவ்வித சோதனையுமின்றி. இப்பொழுது நினைத்துப் பாருங்கள், நீங்கள் எவ்வளவு அபாயமான காரியத்தைச் செய்து விட்டீர்கள் என்று. களவுக்கு உடந்தையாக இருந்தீர்கள், அழகைக் கண்டு மயங்கி.

''அதுமட்டுமில்லை. அதோ இருக்கிறதே அந்த மகான் புத்தரின் திருவுருவம். வெள்ளை வெளேரென்ற மாசில்லாத பளிங்குக் கல்லால் ஆனது அது. ஐயா, விஷத்தின் மத்தியிலேதான் மாணிக்கம் இருக்கிறது. சௌதாமினி யிடத்தில்தான் இந்தப் புத்தரும் இருந்தார். ஆனால் புகை நடுவில் தீ இருப்பது போல, அழகின் மத்தியில் ஆணவம் இருப்பது போல, புனிதமான அந்தக் கருணை மூர்த்தியின் உடலில் இப்போது ஒரு துப்பாக்கி பதுங்கிக் கிடக்கிறது. ஆச்சரியமா யிருக்கிறதா!

''ஹாங்காங் நகரத்தில் தோட்டத்தில் சுடப்பட்டு மடிந்தவன் சௌதாமினியின் கையாள் தான். வழக்கத்தை மீறி அவளைச் சந்திக்க அவனே வந்து விட்டான். நான் அவனோடு பேசிக்

14-வது அகில இந்திய காதி, கைத்தறி, சுதேசி
கைத்தொழில் பொருட்காட்சி, சேலம் 1954

(சேலம் நகரசபையால் நடத்தப்படுவது)

இசை, நடன, நாடக நிகழ்ச்சிகள்

கலை அரங்கில் தினசரி மாலை 6-30 மணிக்கு

நிகழ்ச்சி விபரம்

1—8—54 ஞாயிறு	கும்பகோணம் ஸ்ரீமதி வி.பி. ராஜேஸ்வரி & பார்ட்டி ...	பாட்டு
2—8—54 திங்கள்	திருச்சி ஸ்ரீ என். வி. சுந்தரம் பிள்ளை & பார்ட்டி ...	பாட்டு
3—8—54 செவ்வாய்	குமாரி அபயம் சகோதரிகள்	நடனம்
4—8—54 புதன்	ஸ்ரீ எம். கே. தியாகராஜ பாகவதர், ஸ்ரீமதி எஸ். டி. சுப்புலக்ஷ்மி & பார்ட்டி (ஹார்மோனியம் ஸ்ரீ ஜி. ராமநாதன்)	"வள்ளித் திருமணம்" (நாடகம்)
5—8—54 வியாழன்	ஸ்ரீ நடராஜ், சகுந்தலா & பார்ட்டி	நடனம்
6—8—54 வெள்ளி	முத்தமிழ்க் கலா வித்வரத்ன டி. கே. எஸ். சகோதரர்கள் ...	"ஔவையார்" (நாடகம்)
7—8—54 சனி	௸ ௸ ...	"எது வாழ்வு"
8—8—54 ஞாயிறு	௸ ௸ ...	"எது வாழ்வு"
9—8—54 திங்கள்	குமாரி கஸ்தூரி சகோதரிகள்	நடனம்
10—8—54 செவ்வாய்	ஸ்ரீ டி. பி. பொன்னுசாமி பிள்ளை, ராதாகிருஷ்ணன், சி. எஸ். பாண்டியன் & பார்ட்டி	"ஆண்டவன் செயல்" (புளியங்கோட்டை) (நாடகம்)
11—8—54 புதன்	முனிசிபல் ஆபீஸர்ஸ் டிரமாடிக் அசோஸியேஷன், சேலம் ...	"நண்பன்" (நாடகம்)
12—8—54 வியாழன்	குமாரி ஸ்ரீ கலா	நடனம்
13—8—54 வெள்ளி	ஸ்ரீ எம். எம். மாரியப்பா & பார்ட்டி	"தூக்கு தூக்கி" (நாடகம்)
14—8—54 சனி	ஸ்ரீ கே.ஏ.தங்கவேலு, சி.ஆர். ராஜகுமாரி & பார்ட்டி ...	'லக்ஷ்மிகாந்தன்' (நாடகம்)
15—8—54 ஞாயிறு	ஸ்ரீமதி கே. பி. சுந்தராம்பாள் & பார்ட்டி ...	பாட்டு
16—8—54 திங்கள்	குமாரி சுசீலா ... ... (நடன ஆசிரியர் பி. எஸ். கோபாலகிருஷ்ணன்)	நடனம்
17—8—54 செவ்வாய்	ஸ்ரீ கே. ஆர். ராமசாமி & பார்ட்டி	"காதல் ஜோதி" (நாடகம்)
18—8—54 புதன்	ஸ்ரீ வி. கே. ராமசாமி & பார்ட்டி	"தீர்ப்பு" (நாடகம்)
19—8—54 வியாழன்	குமாரி குசலகுமாரி ... ... (நடன ஆசிரியர் வழுவூர் ராமய்யா பிள்ளை)	நடனம்
20—8—54 வெள்ளி	சாவாஸ் ஸ்டேஜ் சர்வீஸ் ... ... (எஸ். வி. சகஸ்ரநாமம், சிவாஜி கணேசன், மைனாவதி, ரத்னமாலா நடிப்பது)	"நாடோடி" (நாடகம்)
21—8—54 சனி	௸ ௸	?—(நாடகம்)
22—8—54 ஞாயிறு	௸ ௸	"இருளும் ஒளியும்"

பொருட்காட்சி கமிட்டியார்

கொண்டிருப்பதை அவன் மாடி அறையின் ஜன்னலிலிருந்து பார்த்து விட்டான். அவன் ஏதாவது உளறிவிடப் போகிறானோ என்ற பயத்தில் கட்டுத் தீர்த்துவிட்டு, அந்தத் துப்பாக்கியை உங்களிடமே அடைக்கலப் பொருளாகக் கொடுத்து விட்டான், சாந்திக் கடவுள் ரூபத்தில். இத்தனைக்கும் நீங்கள் உதவியா யிருந்தீர்கள். உங்களுக்கு அவனைத் தெரியவில்லை. அவன் காரியங்கள் புரியவில்லை. ஆனால் அவள் அழகு மட்டும் பளிச்சென்ப் புலப்பட்டது. இல்லையா!

"ஆனாலும் நீங்கள் அதிர்ஷ்டம் செய்தவர்தான். டோக்கியோவிலேயே காரியம் முடிந்து விட்டது. இந்தியா திரும்பும் வரையில் நீங்கள் சௌதாமினிக்குத் துணை புரிந்திருந்தீர்களானால் நீதியின் கைகள் உங்களையும் அரவணைத்திருக்கும். ஈசன் நாமத்தை எப்படி உச்சரித்தாலும் — தோத்தரித்தோ தூஷித்தோ — அதற்குப் பலன் உண்டு, மோட்சம் கிட்டும் என்று சொல்வார்கள். அதைப்போலத் தெரிந்தோ தெரியாமலோ நீங்கள் பகவான் புத்தரின் பாதங்களைத் தொட்டிருக்கிறீர்கள். அதுதான் பிழைத்தீர்கள். ராஜா சாகேப், அழகைத் தேடும் உங்கள் கண்களைக் கொஞ்சம் கட்டுப்படுத்தி வையுங்கள்."

மூக்கர்ஜி நீண்ட பிரசங்கமே செய்துவிட்டான். ராஜா சாகேப்பைப் பார்த்தேன். அவர் சௌதாமினியின் அடைக்கலப் பொருள்களையெல்லாம் எடுத்து வந்து மூக்கர்ஜியிடம் கொடுத்து விட்டு நிம்மதியாக நாற்காலியில் சாய்ந்தார்.

"மரகத புத்தரின் ஆலயத்துக்குப் போயிருந்தாலாவது மரகத புத்தரின் பாதங்களுக் கடியில் மூன்று அரசர்கள் காணிக்கை செலுத்தும் விசித்திரமான காட்சி இல்லாம லிருப்பதைக் கண்டு பிடித்திருக்கலாம்! ம்...சௌதாமினிதான் அழைத்து வந்து விட்டாளே!

"இந்தியாவில் வழக்கு நடக்கும்போது சாட்சி சொல்ல மட்டும் வந்தால் போதும்" என்று சொல்லி விட்டு மூக்கர்ஜி போய் விட்டார்.

★

பிறகு எப்படி டோக்கியோவிலிருந்து இந்தியா வந்து சேர்ந்தோமென்பது தெரியாது. அப்படியே பறந்து வந்து விழுந்து விட்டோம்.

இரண்டு மூன்று மாதங்களும் சென்று விட்டன.

"வழக்கு என்ன ஆயிற்று!" என்றார் ராஜா சாகேப் ஒருநாள் என்னிடம்.

"வழக்கா! கொலை நடந்தது ஹாங்காங்கில். கொள்ளை நடந்தது பாங்காக்கில். தற்கொலை டோக்கியோவில். வழக்கு எப்படி இந்தியாவில் நடக்கும்!" என்றேன்.

"அப்படியானால்...!"

"பத்திரிகையில் வந்திருக்கும் இந்தச் செய்தியைப் படித்துப் பாருங்கள்!" என்று கூறிக் கையிலிருந்த பத்திரிகையைப் பிரித்துக் குறிப்பிட்ட செய்தியைக் காட்டினேன்.

அவர் ஆர்வத்தோடு படித்தார்.

"பல கொள்ளை, கொலை வழக்குகளில் ஈடுபட்டு, போலீஸ் இலாக்காவுக்கு டிமிக்கி கொடுத்து வந்த மூக்கர்ஜி என்றவங்க இளைஞர் பம்பாய்ப் பட்டணத்தில் நேற்று கைதியானார். புலன் விசாரணை நடைபெற்று வருகிறது."

ராஜா சாகேப்பும் நானும் வியப்புடன் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டோம்.

மாமூல் விவசாயி

காவேரி ஆற்றோரம் நிலமுள்ளவர்கள் பரம் பரையாய்க் காவேரியில் ஏற்றம் துலைகட்டி மாமூலாய் இறைத்து வந்ததற்கு அவர்கள் பாட்டன் முப்பாட்டன் காலத்திலிருந்தே மேற்படி நிலத்தை ஆதார குத்தகை போக்யம் என எழுதியுள்ள பழைய பத்திரங்களில் காவேரி ஏற்றம்துலை (2) எனக் கண்டிருப்பதி லிருந்தும் நிலத்தின் பல பக்கங்களில் முரட்டுப் பிரவாகத்துக்குத் தாங்காமல் இடிந்து கிடக்கும் கட்டடங்களிலிருந்தும் தெரியலாம். அனேகமாய் ஆற்றோர நிலக்காரர்கள் ஆற்று ஏற்றம் கட்டி இறைக்காதவர்களே இல்லை எனலாம்.

திருச்செங்கோடு தாலுகா கொக்கரியன் பேட்டையிலிருந்து நாமக்கல் தாலுகா கொத்தமங்கலம் வரை மேலே புது வாய்க்கால் வெட்டப்படுகிறது. கீழே ராஜன் வாய்க்கால் பாசனமாகிறது. நடுவே இந்தப் பதினைந்து மைலிலுள்ளவர்கள் என்ன பாபம் செய்தார்களோ! இவர்களுக்கு வாய்க்கால் வெட்டிக் கொடுக்கா விட்டாலும் இந்த வருடம் குழி வெட்டி விட்டார்கள், நடைப் பிணமாகி விட்ட இவர்களைப் புதைக்க!

காவில் மடை தள்ளும் காளிங்கராயன் வாய்க்கால் பாசனத்தில் கரும்பும் வாழையுமாயிருந்தும் இவர்கள் மூன்று போகமும் நெல் மாகாணியே வைத்து நூற்றுக் கணக்கான உழவர்களும் ஆயிரக் கணக்கான கூலியாட்களும் பிழைக்க வழி செய்த பரோபகாரிகளுக்கு நன்றி. ஸ்டாண்டிங் ஆர்டரில் எத்தனை மடங்கு தண்டத் தீர்வை போட அதிகாரம் உண்டோ அவ்வளவும் போட்டுத் தீர்த்துக் கட்டி விட்டார்கள்.

1950-ம் வருடங்களில் சட்டசபை கேள்விகளுக்குப் பஞ்ச நிவாரணத்தின் பொருட்டுச் சர்க்காரின் அதிக உணவு உற்பத்தித் திட்டத்தில் பங்கெடுத்துக் கொண்டு காவேரி நதியில் ஆயில் என்ஜின் வைத்து இறைத்துக் கொள்ளச் சலுகை கொடுத்திருப்பதாகக் கனம் மந்திரிகள் பதில் கொடுத்ததைப் பத்திரிகைகளில் படித்திருக்கலாம். அதே மந்திரிகள் அனேகர் தடவை பிரசங்கங்களிலும் மேற்கண்டபடி பேசியிருக்கிறார்கள். அதையே ஆதாரமாகக் கொண்டு சேலம் கலெக்டர் சிவசங்கரம் பிள்ளை அவர்களும் பிரசார மூலமாக ஆற்றோர விவசாயிகளை உற்சாகப் படுத்தினார்கள். அவர்களும் இன்ஜினீர்களுக்கும் கலெக்டர் அவர்களுக்கும் விண்ணப்பம் செய்து கொண்டதோடு சக்திக்கு மீறிக் கடன் பட்டாவது காரியத்தில் இறங்கிப் பஞ்சத்தை விரட்டப் பாடுபட்டார்கள்.

தானே பாயும் நன்செய்க்கு 16 ரூபாயிலிருந்து 21 ரூ வரை தீர்வையிருக்க, எண்ணெய்ச் செலவு, இன்ஜின் ரிப்பேர், நிலம் சமப்படுத்தல் முதலிய தொல்லைகளைச் சமாளித்து வரும் ஏழைக் கடன்கார விவசாயிகளை இருபது மடங்கு அபராதத் தீர்வை ஒவ்வொரு போகம் ஒரு ஏக்கராவுக்கு $(20 \times 4\frac{1}{4})$ 85 ரூபாயாக மூன்று போக நெல் மாகாணுக்கு ஒரு ஏக்கராவுக்கு 255 ரூபாய் ஆனால் அவர்களுக்குக் குழி வெட்டாமல் வேறு என்ன செய்கிறார்கள்!

திருச்செங்கோடு
4-7-54

அர்த்தநாரீசுவரன்

உங்கள் சேமிப்பு பிரச்னைகளுக்கு ஓர் பதில்!

‘ப்ரீபாப்ரிகேடட்’ (தயாராக உள்ள — பாகங்களை இணைத்த) அலுமினிய பத்தாயம்

5 முக்கிய விஷயங்கள்


கலபமாக ஒன்று சேர்த்து அமைக்கலாம். பிரித்து விடலாம்.

பூச்சி பொட்டுகளை அண்டவிடாது.

குளுமையானது மற்றும் கிருமி-விஷ முண்டாகாது - தானியங்களை ஒரு போதும் பாதிக்காது.

மழை மற்றும் உஷ்ணத்துக்குப் பாதுகாப்பு.

லேசானது — உறுதியானது. — நீடித்துழைக்க வல்லது.



தயாராக உள்ள தனித் தனி பாகங்களாலான இண்டால் அலுமினிய பத்தாயங்கள் நம் நாட்டு தொழிலாளிகளால் சுதேசப் பொருள்களைக் கொண்டு இந்தியாவில் தயாரிக்கப்பட்டவை.

இது வளைவான காருகேடட் அலுமினிய உலோகக் கலவைத் தகடுகளாலானவை. இதன் கும்பம் போன்ற கூரை, தட்டையான தனித் தனி பாகங்கள். இதை நிறப்ப கூரையின் சரிவில் வழியும், தானியத்தை நேரடியாக மூட்டைகளாகக் கட்ட இதனடியில் வாயும் அமைந்துள்ளது. இவைகளைப் பூட்டலாம். மூட்டை கட்டவும், தண்ணீர் உட்புகாமல் இருக்கவும் இது 2 அடி பேஸ்து மட்டத்தின் மீது அமைக்கப்பட வேண்டும். நிலங்களில் வேலை செய்யும் ஆட்களே இதைப் பொருத்தி சுலபமாகப் பிரித்து மீண்டும் அமைக்கலாம். எளிதில் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு மாற்றலாம். அலுமினியம், பூச்சி பொட்டுகளை அண்டவிடாது. துக்குப் பிடிக்காது. ஈரத்தால், தானியங்கள் மடிப்பதும் குறைபடுகிறது. இதற்குப் பராமரிப்புச் செலவுகள் ஏதுமில்லை. சாதாரண கவனிப்பிலேயே கால வரையறை யின்றி உழைக்கும். விஞ்ஞான ரீதியற்ற முறையில் ஏராளமாகச் சேமித்து வைக்கப்படும் விலைமிக்க தானியங்கள் பாழாகி விடுகிறது. இந்த நவீன முறைப்படி நமது உணவுப் பற்றாக் குறையை எதிர்த்துப் போராடுங்கள்!

பரிமாண விவரங்கள்

750 மணங்குகள் (சுமார் 500 மூட்டைகள்) பிடிக்கக் கூடியவை.	400 மணங்குகள் பிடிக்கக் கூடியவை

இதர விவரங்களுக்கு எழுதவும்:

இந்தியன் அலுமினியம் கம்பெனி லிட்.

தபால் பெட்டி 550
44 க்வின்ஸ்வே
புது டெல்லி.

தலைமை ஆபீஸ்:
தபால் பெட்டி 361
31, சௌரங்கி ரோட்
கல்கத்தா.

தபால் பெட்டி 1654
லோட்டஸ் ஹவுஸ்
மெரைன் லைன்ஸ்
பம்பாய்.

தபால் பெட்டி 1662, மதுரை 1. | தபால் பெட்டி 2, ஆல்வாய்.

எஸ். ஆர். ரம்ரத்னம், ஸ்தல பிரதிநிதி, இந்தியன் அலுமினியம் கோ. லிட்.
‘விஜயா’, கஸ்தூரிரங்க அய்யங்கார் ரோட், ஆழ்வார்பேட்டை, மதராஸ் 18.



நாள் முழுவதும் கடுமையாக உழைத்த பின்னர்
உங்களுக்கு
புத்துணர்ச்சி
தருவதில்
ஹமாம் இணையற்றது
HAMAM
TOILET SOAP
ஹமாமைப்போல் இத்தனை லாபகரமான சோப்பும்
வேறில்லை-ஒவ்வொரு கட்டியும் நெடுநாள் வருகிறது!
அது சிறந்ததென்பதை நீங்கள் நிச்சயமாக
அறிவீர்கள்—ஏனெனில் அது டாடா தயாரிப்பு
TATA
PRODUCT
இந்திய மூலதனத்தைக்கொண்டு, இந்திய நிர்வாகத்தில், இந்தியா
விலேயே தயாரிக்கப்படுவது.
டாடா ஸ்போர்ட்ஸ் ரிவ்யூவை செவ்வாய், வியாழன், சனிக்கிழமை
களில் இரவு 9 மணிக்கு ரேடியோ சிலோனில் கேளுங்கள்
TS-9775 (R)



"மாலை நாலரை மணிக்குச் சம்பளம் பட்டுவாடாச் செய்யப் படும். கடன் தொகை முழுவதும் தீர்த்து விடுகிறேன். வரும்போது ரெவினியூ ஸ்டாம்புடன் ரசீது கொடுக்கத் தயாராக வரவும்"—சின்னசாமி.

—இப்படி ஒரு குறிப்பைக் கண்டதும் ராமமூர்த்தி பலமாகச் சிரித்தான்.

"ஏதேது! பையன் ரொம்பவும் யோக்கியனாக நடந்து கொள்வான் போலிருக்கிறதே! நமக்கே சம்பளம் போடுகிறவன்போல் அல்லவா குறிப்பு அனுப்பியிருக்கிறான்!" என்று மனத்துள் குதூகலித்தான்; ஆனால் அடுத்தபடியாக ரெவினியூ ஸ்டாம்புடன் வரவும் என்ற குறிப்பு ஆத்திர மூட்டியது. "ரசீது கொடுப்பதாவது! வாங்கிய தொகையைத் திருப்பிக் கொடுக்க வழியில்லை. இரண்டு வருஷக் கடனை இப்போதுதான் தீர்க்கப் போகிறான். இதிலே வட்டியுமில்லை—அசலுக்கு மோசமில்லாமல் கொடுத்தால் போதுமென்ற நிலைமை. ரசீது கொடுப்பதாமே, ரசீது!" என்று அவன் உள்ளுக்குள் சீறினான். என்றாலும் ராமமூர்த்தி கையில் ரெவினியூ ஸ்டாம்புடனேயே சென்றான். ஐந்து மணிக்குத்தான் சின்னசாமி பள்ளிக்கூடத்திலிருந்து வீடு வந்து சேருவான். அது தெரிந்திருந்த போதிலும் நாலரை மணிக்கே ராமமூர்த்தி அங்கே ஆஜரானான்.

மூங்கில் தட்டியில் வாசல் கதவும் உட்புறம் சேவாகிராம ஆசிரமத்தை நினைவூட்டும் எளிய தோற்றமும் உள்ள அந்த வீட்டில் சென்ற இரண்டு வருட காலமாகச் சின்னசாமி வாழ்ந்து வருகிறான். ரூபாய், அணா, பைசா அளவில் மிகக் குறைந்த ஊதியம் பெறும் அவனிடம் சரஸ்வதி தேவி எல்லையில்லாக் கருணை கொண்டிருந்தாள். அதற்குச் சான்றாகவே நிறையப் படிப்பும் நல்ல தோற்றமும் சாந்த சுபாவமும் உள்ள நீலா அவன் வாழ்க்கைத் துணைவியாக வீடென்று சொல்ல முடியாத அந்தப் பர்ணசாலையில் அவனுடன் வாழ்ந்து வந்தாள்.

மூங்கில் தட்டிக் கதவு எப்போதுமே திறந்து தானிருக்கும். என்றாலும் அந்த இடத்துக்கு வந்ததுமே யாருக்கும் 'அனுமதி கோராமல் உள்ளே போகக் கூடாது' என்கிற எண்ணம் தானாகவே உதிக்கும்.

"சின்னசாமி வந்து விட்டானா?" என்று ராமமூர்த்தி குரல் கொடுத்தான். உள்ளிருந்து வெளியே வந்த நீலா, தன் கணவனின் நண்பர் ராமமூர்த்தி வந்திருப்பதைக் கண்டு, "இல்லை! இதோ வந்து விடுவார்; சற்று நேரம் இப்படி உட்கார்ந்திருங்கள்!" என்று கூறி மெல்லிய மூங்கிற் சிம்புகளையும் கோரைப் பாயையும் கொண்டு தயாரித்த மேஜைக் கெதிரில் அதே முறையில் தயாரான நாற்காலியை எடுத்துப் போட்டாள்.

தன்னைத் தேடிக் கொண்டு யார் வந்தாலும் வந்தவர்களை வரவேற்று விசாரிக்க வேண்டுமென்பது சின்னசாமியின் கண்டிப்பான உத்தரவு. அந்த நாற்காலியில் அமர்ந்த ராமமூர்த்தி மூங்கிற் சிம்புகளின் மீது பொருத்தப் பட்ட தட்டிச் சுவரில் தொங்கும் படங்களைக் கவனித்தான். ஒரு படத்தில் புத்த பகவான் பிக்ஷா பாத்திரமேந்தி நின்றார். இன்னொரு படத்தில் விசுவாமித்திர மகரிஷி ராமனையும்

லட்சுமணனையும் அழைத்துச் சென்றுகொண்டிருந்தார். இன்னொரு படத்தில் சகுந்தலை மான் குட்டியை அணைத்துக் கொண்டிருந்தாள். மற்றொரு படத்தில் காந்திஜி சிறு குழந்தை ஒன்றின் பொக்கை வாய்ச் சிரிப்புடன் போட்டியிட்டுக் கொண்டிருந்தார். இப்படிப் பல்வேறு காட்சிகளைச் சித்திரிக்கும் படங்களைப் பார்த்து வந்த அவன் கண்கள் திடீரென்று ஒரு படத்துக்கு வந்ததும் இமைப்பதையே மறந்து நிறுத்தி விட்டன! அந்தப் படத்தில் வேறு யாரும் இல்லை. சின்ன சாமியின் காலஞ் சென்ற தாயும் தந்தையும் பெரிய உருவில் படமாக்கப்பட்டு வைக்கப் பட்டிருந்தன.

அந்தப் படத்தை இதற்குமுன் எத்தனையோ தடவை ராமமூர்த்தி பார்த்திருக்கிறான். ஏன், அவர்களையே அவனுக்கு நன்றாகத் தெரியும்! அவர்கள் உயிரோடு வாழ்ந்த காலத்தில் அவனும் சின்னசாமியைப் போலவே சகல உரிமைகளுடனும் அவர்களிடம் பழகி வாழ்ந்தவன்தான். என்றாலும் படத்தைப் பார்த்ததும் இன்று நேரிலேயே சந்திப்பதைப் போன்ற உணர்வும் 'என்ன, ராமு! சௌக்கியமா?' என்று அவர்கள் கேட்பது போலவும் அவனுக்குத் தோன்றியது.

"அவர் வர நேரமாகும் போலிருக்கிறது! இதை மட்டும் குடித்து வையுங்கள்" என்ற குரலைக் கேட்டு ராமமூர்த்தி மேஜை மீதிருக்கும் திரவ பதார்த்தத்தைக் கூர்ந்து கவனித்தான். அது வெளுப்பாக இருந்தது; அது என்னவோ? ஆனால் பாலும் இல்லை, காப்பியும் இல்லை என்பது மட்டும் நிச்சயம்!

ராமமூர்த்தி "வீட்டில் காப்பி சாப்பிட்டு விட்டுத்தான் வருகிறேன்!" என்றான்.

"அதனாலென்ன? இதையும் குடித்து வைக்கலாம். இல்லையானால் அவர் வந்ததும் என்னைத்தான் மிகவும் கோபித்துக் கொள்ளுவார்" என்றாள் நீலா.



"பெண்ணை அக்னி சாட்சியாகக் கல்யாணம் செய்வதற்கு உம்மிடம் என்ன ஐயா வைத்திருக்கிறீர்கள்?"
"ஒரு நெருப்புப் பெட்டி வைத்திருக்கிறேன்!"

"ஆமாம்! சின்னசாமி காப்பி சாப்பிடுவதில்லையா?......" என்றபடியே ராமமூர்த்தி அதை எடுத்துக் குடிக்க ஆரம்பித்தான். அதன் சுவை நன்றாக இருந்தது. ஆனால் இன்னதென்று தெரியவில்லை.

"இது என்ன வென்றே தெரியவில்லையே!" என்று கேட்டான் அவன்.

"இதற்கு இன்னும் பெயர் வைக்கவில்லை. மர வள்ளிக்கிழங்கு, சோளம் இவற்றின் மாவைக் கொண்டு இந்தப் பானம் தயாரிக்கிறோம்" என்றாள்.

"ஏன்? காப்பிப் பொடி கிடைக்கவில்லையா, என்ன?" என்று கேட்டான் ராமமூர்த்தி.

"கிடைக்காமலென்ன? சிக்கனமாக வாழ வேண்டுமென்றுதான் இந்தத் திட்டம்!"

"நல்ல சிக்கனம்! காப்பி கூடச் சாப்பிடாமலா?" — என்ற ராமமூர்த்தி திடீரென்று ஏதோ சொல்லக் கூடாததைச் சொல்லி விட்டாற்போல் வாயை மூடிக் கொண்டான்.

"வருஷம் இரண்டாயிற்று! தினமும் இந்த வெய்யிலில் ஒன்றரை மைல் தூரம் நடக்கிறார். காலின் கீழ் செருப்பில்லை; தலையின்மேல் குடையில்லை. ஏதோ தெரியாத்தனமாகக் கடன் வாங்கி விட்டாராம். அந்த இருநூற்றைம்பது ரூபாய்க் கடன் தீருமட்டும் செருப்பும் வாங்க மாட்டேன், குடையும் வாங்கமாட்டேன் என்று பிடிவாதமாக இருக்கிறார். நானும் எவ்வளவோ செலவைக் குறைத்துத்தான் பார்க்கிறேன். அவர் சம்பளத்தில் பத்து ரூபாய்க்கு மேல் என்னால் மிச்சம் பிடித்துக் கொடுக்க முடியவில்லை" என்றாள் நீலா.

ராமமூர்த்தி கற்சிலை போல் அசைவற்று வீற்றிருந்தான். எதிரில் நண்பனின் இளம் மனைவி நிற்பதாக அவன் கண்ணுக்குத் தோன்றவில்லை. அவன் அன்னையே நின்று குரல் கொடுப்பதுபோல் தோன்றியது.

சின்னசாமி தன்னிடம் இரண்டு வருஷங்களுக்கு முன்பு எந்த நிலையில் எதற்காகக் கடன் வாங்கினான் என்பது நினைவு வரவே, அந்தச் சம்பவம் முழுவதும் அப்படியே அவன் கண்முன் வந்து நின்றது.

• • •

சின்னசாமியும் ராமமூர்த்தியும் அப்போது போதனா முறைப் பாடசாலையில் பயிற்சி பெற்று வந்தார்கள். சின்ன சாமியின் தாய் தந்தையர் உயிரோடிருந்த காலம் அது. ராமமூர்த்தி வெளியூர் பிரபல மில் முதலாளியின் அருந்தவப் புதல்வன். அவன் பள்ளிக்கூடத்தில் ஆசிரியராகப் பயிற்சி பெற்று வாழ்க்கை நடத்த வேண்டிய அவசியமொன்றுமில்லை. என்றாலும் தங்கள் கிராமத்தில் தொடங்க விருக்கும் உயர்நிலைப் பள்ளியில் தமாஷாக வேலை பார்த்து வரலாமே, வீட்டில் சும்மா இருப்பதை விட இப்படி ஏதாவது வேலையில் பொழுது போக்கலாமே என்ற எண்ணத்துடன்தான்



பயிற்சியைத் தொடங்கினான். வாழ்க்கை நிலையில் சின்னசாமிக்கும் ராமமூர்த்திக்கும் ஏணி வைத்தாற்கூட எட்டாது. என்றாலும் வெள்ளை மனம் படைத்த சின்னசாமி கலகல வெனப் பேசிப் பழகும் விதத்தில் ராம மூர்த்தியின் நண்பனானான். சின்னசாமியின் தாய் தந்தையர் ராமமூர்த்தியிடம் அவன் தங்கள் சின்னசாமியின் அண்ணனைப்போல் அன்பு பாராட்டுவதால் புத்திர வாஞ்சை யுடன் பழகி வந்தார்கள்.

இப்படி ஒருவருக்கொருவர் நண்பர்களாக வும் சகோதரர்களாகவும் பழகி வந்த இருவ ரிடையே கடன் கொடுத்தவன் கடன் வாங்கி யவன் என்கிற முறையில் கடன்காரத் தொடர்பை ஏற்படுத்தி விதி சதி செய்தது.

ஒரு நாள் நடுப் பகல். இடைவேளை மணி யடித்து அவரவர்கள் சிற்றுண்டிக்காக வெளியே சென்று கொண்டிருந்தார்கள். சிறிது அசட்டையாக இருந்த சின்னசாமியை ராமமூர்த்தி வெளியே புறப்பட்டு வரும்படி கையைப் பிடித்து உரிமையுடன் இழுத்துக் கொண்டிருந்தான். இந்த நிலையில் எதிர்ப் புறம் குடியிருக்கும் பிரபல பாங்கர் வீட்டுக் குழந்தை மாலா வழக்கப்படி 'மாமா,மாமா!' என்று கூவியபடி சின்னசாமியை நோக்கி, ஓடி வந்தாள். அந்த வீட்டு வேலைக்காரன் பொழுது போக்குக்காக அடிக்கடி அந்தக் குழந்தையைக் கொண்டு வந்து வேடிக்கை காட்டுவான். குழந்தைகளிடம் சகஜமாகவே பாசமும் பற்றுமுள்ள சின்னசாமி அப்படி வரும்போதெல்லாம் குழந்தையைத் தூக்கிக் கொஞ்சாமலிருக்க மாட்டான். ஹோட்ட லுக்குப் புறப்பட்ட இடை வேளையில் குழந்தை மாலா வந்ததால் அதற்கும் ஏதா வது தித்திப்பு வாங்கிக் கொடுக்கலாமென்று கையில் குழந்தையை எடுத்துக் கொண்டு அவன் மேலே நடந்தான், வீட்டின் நினைவில் உழன்றபடியே. அங்கே ஹோட்டலில் சிற் றுண்டி யருந்தும் இடை வேளை நண்பர்க ளெல்லாம் மாலாவை வெகுவாகக் கொஞ்சி னார்கள். அந்தக் குழந்தையும் 'மாமா, மாமா' என்று சின்னசாமியிடமே அதிகம் உறவாடி மற்றவர்களிடம் அவன் சொல்லிக் கொடுத்த படி "டூ" என்றும் "அசடு" என்றும் மாறி மாறி உளறிக் கொட்டிக் கொண்டிருந்தது. இதனிடையே சின்னசாமி மெதுவாக அந் தக் குழந்தை மூலம் பாங்கரைக் காக்காய் பிடிக்க முயல்வதாக வேறு நண்பர்களி டையே கேலியும் கிண்டலும் தொடங்கின.

கடைசியில் ஹோட்டலிலிருந்து திரும்பு முன்னமேயே குழந்தையைத்தேடிக்கொண்டு வேலைக்காரன் வந்து விட்டான். குழந்தை யைக் காணவில்லை என்று தன்னை எஜமானர் வீட்டில் திட்டுவதாகவும் சின்னசாமியை நேரிலேயே வந்து சமாதானம் சொல்லும் படியும் அவன் கெஞ்சினான். வேறு வழியின்

லாமல் சின்னசாமி குழந்தையுடன் அவர்கள் வீட்டுக்குச் சென்று நடந்ததை நடந்தபடி விவரித்து வேலைக்காரன் மீது தவறில்லை யென்றும் தன்னால் ஏற்பட்ட குழப்பத்துக்கு மனம் வருந்துவதாகவும் தெரிவித்தான்.

"அது சரி! குழந்தையின் கழுத்துச் சங்கிலி எங்கே?" என்ற கேள்வி எழுந்த போதுதான் சின்னசாமியும் ராமமூர்த்தியும் இப்படி ஒரு ஆபத்து வந்து சேர்ந்ததை உணர்ந்தார்கள். குழந்தை தன் கைக்கு வரும் போது சங்கிலி கழுத்திலில்லை என்பதை எவ்வளவோ அவன் எடுத்துச் சொல்லியும் அது அவர்கள் காதில் ஏறவில்லை. கடைசியில் அவர்கள் போலீஸ் புகார் வரைக்கும் கடவடிக்கைக்குத் துணிந்ததன் விளைவாகச் சின்னசாமியின் வேண்டுகோளுக் கிணங்கி ராமமூர்த்தி ஊரிலிருந்து இருநூற்றைம்பது ரூபாய் வரவழைத்துத் தர இணங்கினான். பின்பு நகை காணவில்லை என்பதை அவர்கள் போலீஸில் பதிவு செய்ததாகத் தெரிய வில்லை. ஊரார் குழந்தையைத் தொட்டதற்கு இருநூற்றைம்பது ரூபாய் அபராதம் என்று சின்னசாமி எண்ணிக் கொண்டான்!

* * *

ராமமூர்த்தியின் சிந்தனையைக் கலைத்த படியே "அடடே! ராமு! ரொம்ப நேரமாகக் காத்துக் கொண்டிருக்கிறாயா?" என்ற படியே சின்னசாமி வீட்டினுள்ளே வந்தான். கலகலவென்ற சிரிப்பும் கள்ளங் கபடமற்ற மனமும் படைத்த சின்னசாமியைப் பார்க்கும் போது பழைய தொடர்பெல்லாம் அப் படியே ராமமூர்த்தியின் கண்ணெதிரே வந்து நின்றது. தலை நிமிர்ந்து பார்த்தால் சின்ன சாமியின் தாயும் தந்தையும் "இது நியாயமா, ராமு! உன் தம்பியையா கடன்காரனுக்கு கிறாய்?" என்பதுபோல் மௌனமாகப் பார்க் கிறார்கள். எதிரிலோ அவன் கலகலவென நகைத்தபடி கைப்பையிலிருந்து இரண்டு நூறு ரூபாய் நோட்டுக்களையும் ஐந்து பத்து ரூபாய் நோட்டுக்களையும் மேஜையின்மீது வைத்தான். நீலா தன் நீண்ட கண்கள் அகல விரியும்படி ஆச்சரியத்துடன் அதைப் பார்த்த படியே நின்றாள்.

"இதுவரை நாம் பேசிக் கொண்டிருந்த இந்த நண்பரா கடன் கொடுத்தவர்?" என்று அவள் உள்ளம் கேட்டுக் கொண்டிருந்தது.

ராமமூர்த்தி வெறித்த பார்வையுடன் ரூபாய் நோட்டுக்களையும் சின்னசாமியையும் மாறி மாறிப் பார்த்தான்.

"என்ன பார்க்கிறாய், மூர்த்தி! நட்புக்கும் இதற்கும் சம்பந்தமில்லை! ...... ரசீது மட்டும் இன்ன காரியத்துக்காக இன்னார் வாங்கிய கடன் திரும்பப் பெற்ற வகை என்பதை விவரமாக எழுதிக் கொடு — ஏனென்றால் உண்மையிலேயே அந்தச் சங்கிலி திருட்டுப் போயிருந்தால்!..." என்றான் சின்னசாமி.

"பழைய குப்பையை இப்பொழுது கிளறு வானேன்? இந்தப் பணம் என் தம்பியை வாழ்விக்க வந்த கிருகலட்சுமி செட்டும் கட்டுமாய்க் குடும்பம் நடத்தித் தேவைகளைக் குறைத்து மிச்சப்படுத்திய பணம். இதை நான் ஒரு நாளும் தொட மாட்டேன்! நம் பிரும்மச்சரிய வாழ்வில் நடந்த சம்பவங்களுக் காகப் புது வாழ்வு கொண்டு வந்த நாட்டுப் பெண்ணைப் பொறுப்பாக்குவது பாவம்!" — இப்படிச் சொன்ன ராமமூர்த்தி நீலாவும் சின்னசாமியும் எவ்வளவோ சொல்லியும் கேளாமல் அந்தப் பணத்தை அப்படியே விட்டு விட்டு எழுந்து சென்று விட்டான்!



11. வாழ்க்கை கசந்தது!

தமது முதல் மனைவிகளிடத்தில் லால்ஜி மிகக் கடுமையாகவும் கன கண்டிப்பாகவும் நடந்து கொண்டு வந்தார் என்பது உண்மை தான். இருந்தாலும் பெண்களைப் பற்றித் தனிப்பட்ட முறையில் கேட்கப் போனால் அவருடைய நோக்கங்கள் அவ்வளவு கடுமை யானவையல்ல; கண்டிப்பானவையும் அல்ல. மென்மையும் இனிமையும் கொண்டவை தான். மெல்லியலார்கள் என்று பெயர் பெற்றிருக்கும் பெண்மணிகளிடம் நாம் கடுமையாக நடந்து கொள்ளலாமா என்றுகூட அவர் வாதாடுவார். அதோடு மட்டும் அல்ல; தம்மை மறந்து மற்றவர்களைத் தனித்து நீக்கி வைத்துப் பெண்களிடம் எப்படித் தன்னல நோக்கமின்றி நடந்து கொள்ள வேண்டும் என்றும் உபதேசிக்கத் தொடங்கி விடுவார். அவர் தமது மனைவிகளுக்குக் கட்டுப்பாடுகளுக்கு மேல் கட்டுப்பாடுகளாக விதித்திருந்தபொழுதிலும் பிறர் மனைவிமார்களின் விஷயத்தில் அவ்வளவு கட்டுப்பாடுகள் அநாவசியம் என்னும் சீரிய எண்ணத்தைக் கருத்தில் கொண்டவர். தமது மனைவியைக் கண்டிப்புடன் கண்காணித்தவாறே பிறர் மனைவிமார்கள் விஷயத்தில் மதிப்பும் மரியாதையும் கொடுத்து எவ்வளவு நன்றாக வைத்துக் கொள்ள முடியுமோ, அவ்வளவு நன்றாக வைத்துக் கொள்ள வேண்டும் என்ற கடமையைத் தம்மால் இயன்றவரை நடைமுறையிலும் காட்டி வந்தார். சொல் ஒன்று, செயல் ஒன்றாக இருக்கக் கூடாதல்லவா?

தம்மிடம் வேலை பார்க்கும் வேலையாட்களின் மனைவிமார்களைப் பற்றிக் கருத்துடன் விசாரிப்பார்; கர்ம சிரத்தையுடன் கவனிப்பார். சலவைத் தொழிலாளிக்குப் பதிலாகச் சலவைத் தொழிலாளியின் மனைவி அழுக்கு எடுக்க வந்தால், அவர்களுடைய தொழில் நடப்பைப் பற்றி வெகு சிரத்தையுடன் விசாரித்துத் தொழில் நுணுக்கங்களையெல்லாம் பற்றிக் கூடத் தெரிந்துகொள்ள முயலுவார். பக்கத்து வீட்டுப் புருஷர்கள் வீட்டில் இருக்கிறார்களா, இல்லையா என்பதை விசாரித்துத் தெரிந்து கொண்டு, அவர்கள் வீட்டுப் பெண் பிள்ளைகளைப் பற்றிக் கண்ணுங் கருத்துமாகக் கேட்டுத் தெரிந்து கொள்வார். இதனால் எல்லாம் அவர் எத்தகைய சுக புருஷராக, ரசிக உள்ளம் படைத்தவராகச் சிறந்து விளங்கினார் என்பதை ஒருவாறு தெரிந்து கொள்ளலாம்.

இப்படியெல்லாம் இருந்த பொழுதிலும் அவருக்குத் தமது மனைவி விஜயலக்ஷ்மியிடம் ஆழ்ந்த அன்பு உணர்ச்சி இருந்தது என்பதை யாருமே ஒப்புக் கொண்டுதான் ஆக வேண்டும். அவளுக்கு வேண்டிய துணிமணிகளும் நகை நட்டுகளும் வாங்கிக் குவித்திருந்தார்.

அவள் இஷ்டப்படி வீட்டை வைத்துக் கொள்வதற்கு வேண்டிய சுதந்திரம் அளித்திருந்தார். நாளொரு விதமாக அவள் வீட்டை அலங்கரிக்கலாம். வீட்டில் தனக்குத் தோன்றிய மாறுதல்களையெல்லாம் அவள் புகுத்தலாம். 'ஏன் இப்படிச் செய்தாய், அப்படிச் செய்தாய்?' என்று அவளை அதட்டிக் கேட்பார் யாரும் இடையாது. அந்த வீட்டில் அவள் வைத்ததுதான் சட்டம். சுருங்கச் சொல்லப் போனால் விஜயலக்ஷ்மியின் எண்ணங்களுக்கும் இஷ்டங்களுக்கும் ஈடு கொடுத்து லால்ஜி தமது பழைய கொள்கைகளையே கூட மாற்றி அமைத்துக் கொண்டிருந்தார் என்றுதான் கூற வேண்டும்.

விஜயலக்ஷ்மி ஒரு காரியத்தைச் செய்து விட்டால், அவருடைய கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட காரியமாயிருந்தாலும், அதற்கு உடனே விதிவிலக்குக் கிடைத்து விடும். அந்த வீட்டில் அவளுக்கு அத்தனை சலுகை கிட்டியிருந்தது.

எனவே, விஜயலக்ஷ்மியின் நிலைமை பிறர் பார்த்துப் பொறாமைப்படக்கூடிய அளவுக்கு ஏகமாக உயர்ந்து விட்டது. அவள் தனக்குக் கிடைத்த சுக சாதனங்கள் அனைத்தையும் தன் சித்தப்படி உபயோகித்துக் கொள்ளத் தவறியதில்லை. கிடைத்தவற்றைப் பயன்படுத்திக் கொள்வதில் அவள் கைதேர்ந்தவளாயிருந்தாள். யாருடனும் கலகலவென்று சிரித்துப் பேசிப் பழகி ஆனந்தமாகப் பொழுதைப் போக்கும் இனிய சுபாவத்தை அவள் பெற்றிருந்தாள். அதனால் அவள் அடிக்கடி தன் உற்றார் உறவினர்களையும், வேண்டியவர்களையும், அக்கம் பக்கத்து வீட்டுப் பெண்மணிகளையும் தன் வீட்டுக்கு அழைத்து அன்பும் மரியாதையும் ததும்பப் பேசி மகிழ்வாள். தேநீரோ விருந்தோ அளித்து இன்புறுவாள்.

அவள் அந்த வீட்டில் காலடி எடுத்து வைத்த பிறகு அந்த வீடே கலகலவென்று களை ததும்பி நிறைந்திருந்தது. அவள் குடித்தனம் நடத்தும் பாங்கே மிகப் பிரமாதமாக அமைந்து விட்டது. லால்ஜி ஸேட் அவளுடைய கெட்டிக்காரத் தனத்தில் மயங்கி மிகவும் மனம் பூரித்துப் போனார்.

முன்பெல்லாம் அந்த வீட்டுச் சுவரில் காலண்டர் படங்களும் துணி மணிகளுக்கு வியாபாரக் குறியாகப் போடப் பட்ட படங்களும் தான் மாட்டப் பட்டிருந்தன. அவள் வந்த பிறகு அந்தப் படங்களெல்லாம் நீக்கப் பட்டு அவற்றின் ஸ்தானத்தை ரவி வர்மாவின் எழில் மிகு சித்திரங்கள் அலங்கரித்தன. புஸ்தகம் என்று பெயருக்குக் கூட இல்லாமல் இருந்த அந்த வீட்டில் மூன்று அலமாரிகள் நிறையப் புஸ்தகங்கள் குவிந்து விட்டன. முன்பெல்லாம் வாகன வசதிக்கு வண்டி மட்டுமே தான் இருந்தது. இப்பொழுதோ அதற்குப் பதிலாக மோட்டார் வந்து சேர்ந்தது. லால்ஜிதான் பெரும் பணக்காரராயிற்றே! அவருக்கு இதெல்லாம் ஒரு பிரமாதமா? விஜயலக்ஷ்மி வீட்டுக்கு வந்த பின் பணத்தோடு புகழும் சம்பாதிக்க வேண்டும் என்ற ஆசை அவருள்ளத்தில் இடம் பெற்றது. இத்தனை மாறுதல்களுக்கும் காரணம் யார் என்றால் விஜயலக்ஷ்மிதான். பெயரே விஜய லக்ஷ்மியாக இருக்கும் பொழுது அவளுடைய வெற்றியைப் பற்றிக் கேட்க வேண்டுமா?

திருப்திப் படுவதற்கான சகலவித சாதனங்களும் குறை வின்றி நிறைந்திருந்த பொழுதிலும் விஜயலக்ஷ்மியின் மனத்தில் ஏனோ அதிருப்தியே நிலவி யிருந்தது. வீட்டில் தனக்குக் கிடைத்திருந்த அதிகாரங்களையும் உரிமைகளையும் அனுபவித்து அனுபவித்து அவளுக்கு அலுப்புத் தட்டி விட்டது. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் விஷம் என்ற பழமொழி அவள் விஷயத்தில் நூற்றுக்கு நூறு உண்மையாகி விட்டது.

அவள் கணவர் அவள் சொல்லுக்குத் தகுந்தவாறு ஆடிக் கொண்டு அவளுக்கு அடிமையாகவே இருந்தார். அவள் கீறிய கோட்டைத் தாண்டுவதில்லை. அவள் கைக்குள் அவர் அப்படி அடங்கிக் கிடந்தார். கணவன் மனைவியின் கைப் பொம்மையாக அடங்கியிருந்தால் மட்டும் ஆயிற்றா? அது அவளுக்கு ஒன்றும் பெரிய விஷயமாகத் தோன்ற வில்லை. பெரும்பாலானவர்கள் மனத்தினால் நினைத்துக்கூடப் பார்க்க முடியாத சுக சாதனங்கள் அவளுக்குக் கிடைத்திருந்தன. ஆயினும் அவள் மனம் வெறிச்சோடியிருந்தது; இருதயம் சூன்யக் காடாகத் தோன்றியது. யோசிக்க யோசிக்க அவளுக்கு அதன் காரணம்தான் விளங்க வில்லை.

'நமக்கும் நம் கணவருக்கும் இடையே அகழியாக இருக்கும் வயது வித்தியாசம் தான் ஒரு வேளை நமது இந்த மனச்



"அடாடா! நான் இந்தச் சுவரை மோதி இடிக்க வில்லை. இதை என் மோட்டார் நிறுத்தும் இடமாக உபயோகித்து வருகிறேன். இப்பொழுது காரை ஷெட்டிலிருந்து வெளியே எடுக்கிறேன்!"

சுமைக்குக் காரணமாய் இருக்குமோ?' என்ற கேள்வி அவள் உள்ளத்தில் பிறந்தது. எனவே 'அவர் வயது என்ன? நம் வயது என்ன? இருவருக்கும் இடையே படிக்குப் பாதியாக இருக்கும் வயது வித்தியாசம்தான் இவ்வளவுக்கும் காரணமாயிருக்கவேண்டும்!' என்று முதலில் முடிவு கட்டினாள். ஆனால் நாளடைவில் வயது வித்தியாசத்தினால் ஏற்படும் வருத்தம் கூட நெருங்கிப் பழகப் பழகக் குறைந்து விடுகிறது என்ற உண்மையும், கடைசியில் அது பொறுத்துக் கொள்ளக் கூடிய துயரமாகவேகூட ஆகிவிடுகிறது என்ற நம்பிக்கையும் அநுபவ வாயிலாகவே அவளுக்கு ஏற்பட்டு விட்டன.

'நம் கணவர் மண்ணுலக வாசனையில் அதிக ஈடுபாடு கொண்டவராக இருக்கிறாரே! ஒரு வேளை நம் மனச் சுமைக்கு அது ஒரு காரணமாயிருக்குமோ?' என்று அடுத்த படியாக அவள் எண்ணினாள். உலகாநுபவம் இன்னும் கொஞ்சம் முதிர்ந்து விடவே, 'பார்க்கப் பள பளவென்று பிரகாசிக்கும் நாகரிகத் திரை மிக மிக மெல்லியது. தொட்டுத் திருப்பினால் கிழிந்து விடக் கூடியது. அதற்குள்ளே இந்த மண்ணுலக வாசனை தன் இஷ்டப்படி இடைவிடாமல் தாண்டவம் புரிந்து கொண்டுதான் இருக்கிறது. நாகரிகம் வாய்ந்தவனும் அநாகரிகமே உருவானவனும் இந்த மண்ணுலக வாசனை சம்பந்தப்பட்ட வரையில் ஒருவருக்கு ஒருவர் சளைத்தவர் இல்லை. மண்ணுலக வாசனையைப் பொறுத்த வரை மிருகமும் மனிதனும்கூட ஒரே மாதிரியான உணர்ச்சி வசப்பட்டவர்கள்தான்!' என்ற தீர்மானத்துக்கு வந்தாள். அப்படியிருக்கும் பொழுது ஒரு மனிதனுக்கும் இன்னொரு மனிதனுக்கும் இடையே வேறு பாட்டைக் காண்பதோ கண்டு பிடிப்பதோ கடினத்திலும் கடினமான காரியம் அல்லவா? அதைப் புரிந்து கொள்ள அவளுக்கு வெகு நேரம் பிடிக்கவில்லை.

அதற்குப் பிறகு அநுபவம் இன்னும் கொஞ்சம் அதிகமாகிவிடவே, மனிதனிட முள்ள இந்த மிருக சுபாவம் மன்னிக்கத் தகுந்தது. இருந்தால் இருந்து விட்டுப் போகட்டும் என்று இலட்சியம் செய்யாமல் இருந்து விடத் தகுந்தது என்ற நம்பிக்கை அவளுக்கு உண்டாகி விட்டது. அதன் பலனாக லால்ஜி ஸேட்டின் மிருக சுபாவத்துக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் அவள் தன் மனத்தைப் பண்படுத்திப் பக்குவப் படுத்திக் கொண்டாள். அவரோடு நல்ல முறையில் வாழவும் முடிவு கட்டினாள். இருந்தாலும் அவளுக்கு ஏதோ ஒரு மனக் குறை இருக்கத்தான் செய்தது; அவள் இருந்த நிலை அவளை முள்ளாக உறுத்தத்தான் செய்தது. அது ஏன்? யோசிக்க யோசிக்க அதுதான் அவளுக்குப் புரியாத புதிராக இருந்தது.

*

கோகிலாவும் ஜகதீஷும் அவள் கட்டிடத்தில் வாடகைக்குக் குடியேறிய பிறகு அவ்வளவு நாட்களும் அடங்கியிருந்த அவளுடைய அதிருப்தி மறுபடியும் தலை தூக்கித் துளிர்க்க ஆரம்பித்து விட்டது.



கோகிலாவிடம் அசாதாரணமான அழகு குடி கொண்டிருந்தது என்றோ, விஜயலக்ஷ்மியின் அழகு குறைவானது என்றோ முடிவு கட்டி விடுவதற்கில்லை. இருவருமே ஒருவருக்கு ஒருவர் குறைவில்லாத அழகிகள்தான். ஆனால் கோகிலாவின் உடலில் ஏதோ ஒருவிதக் குறு குறுப்பும் சுறு சுறுப்பும் தாண்டவ மாடிக் கொண்டிருந்தன. அதன் காரணமாக அவளுடைய அங்க அவயவங்களில் இனந் தெரியாத கவர்ச்சிதரும் காந்த சக்தி பொங்கிப் பொதுளிக் கொண்டிருந்தது.

சந்திரோதயம் அழகானது. மேகங்கள் சூழ்ந்த வானத்தில் பவனி வருவதற்காக உதயமாகும் சந்திரன் மழைக் காலத்தின்

அழகை எடுத்துக் காட்டும் ஒரு சாதாரணக் கருவியாகத் திகழ்கிறான். அதிலும் ஒரு அழகு இருக்கத்தான் செய்கிறது. ஆயினும் சிற் சில சமயங்களில் அருமையான சம்பவங்களும் நிகழ்கின்றன. வான வீதியில் வெண் முகில்களுக்கிடையே சந்திரன் தன் மதிமுகத்தைக் காட்டிக் காட்டி மேகத்தி



னூடே மறைந்து மறைந்து கவர்ச்சி ததும்ப பவனி வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாக அமைந்து விடுகிறது. சந்திரன் வெள்ளி ஓடத்தில் பவனி வரும் அந்தக் காட்சியைக் காணக் கோடிக் கண்கள் தான் வேண்டும். சிருஷ்டி முழுவதும் அந்த அழகுச் சேர்க்கையிலே கலந்து லயித்துத் தன்னை மறந்து கண் கொட்டாமல் அதைப் பார்க்கத் தொடங்கி விடுகிறது. அழகுக் கலவையில் மனத்தைப் பறி கொடுக்காதவர்கள் இந்த உலகத்தில் எத்தனை பேர் இருக்க முடியும்?

தனியாகச் சந்திரனோ, தனியாக வெண் முகில்களோ அவ்வளவு மனோகரமாகக் காட்சி அளிப்பதில்லை. இரண்டும் சேர்ந்தால் தான் கவர்ச்சி காணப்படுகிறது. கோகிலாவைப் பார்க்கும் பொழுதெல்லாம் சந்திரனும் வெண் முகிலும் கலந்து கவர்ச்சிகரமாகக் காட்சி அளிக்கும் மனோகர நினைவு அவன் மனத்தில் முளைத்தது. கோகிலாவின் வெண் முகில் போன்ற உடலில் அத்தகைய கவர்ச்சி தோன்றியதற்குக் காரணம், அவள் உடலுக்குள் ஒளிந்து விளையாடிக் கொண்டிருந்த ஆத்ம சந்திரன்தான். சந்திரனுக்காவது களங்கமுண்டு என்ற கெட்ட பெயர் உண்டு.

ஆனால் அவளுடைய ஆத்ம சந்திரனோ களங்கமற்றவன்; துல்லியமானவன். அதனால் அவன் உள்ளுக்குள்ளிருந்து வாரி வீசிக் கொண்டிருந்த அழகு வெளியிலும் கவர்ச்சியை அள்ளி வீசிக் கொண்டிருந்தது. எனவே, கோகிலாவின் உள்ளும் அழகாயிருந்தது; புறமும் அழகாயிருந்தது. உள்ளமும் உடலும் ஒன்றி அழகுத் தெய்வமாகக் காட்சி அளிக்கும் கோகிலாவைக் கண்டதும் விஜயலக்ஷ்மியின் மனம் தன்னையறியாமலே அவளிடத்தில் ஈடுபாடு கொண்டது. எனவே, அவளுடன் அறிமுகம் செய்து கொண்டு நெருங்கிப் பழகினாள். எழிற் கலவையாகத் திகழ்ந்த கோகிலாவுடன் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டு விடவே, அவளை மனைவியாக அடையும் பாக்கியம் செய்திருக்கும் அவள் கணவனையும் காண வேண்டும், கண்டு அறிமுகம் செய்து கொள்ள வேண்டும் என்ற ஆசை விஜயலக்ஷ்மியின் உள்ளத்திலே பீறிட்டுக் கொண்டு எழுந்தது.

பகல் பொழுதில் பெரும் பகுதியை ஜகதீஷ் தனது பத்திரிகை சம்பந்தமான காரியங்களில் செலவிட்டு வந்தான். ஆனால் அவன் வீட்டில் இருக்கும் நேரமெல்லாம் கோகிலா அவனைச் சுற்றிச் சுற்றியே வளைய வளைய வந்து கொண்டிருப்பாள். அவள் அப்படி அவனையே வட்டமிட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்தால், கோகிலாவின் சேவை சிசுருஷை இன்றி ஜகதீஷினால் வாழ முடியாதோ என்று கூட எண்ணத் தோன்றியது.

ஜகதீஷ் காரியாலயத்துக்குப் புறப்பட்டுச் சென்றதும் கோகிலாவை விஜயலக்ஷ்மி தன் வீட்டுக்கு அழைப்பதுண்டு. தானும் கோகிலாவின் வீட்டுக்குப் போய் வருவது உண்டு. கோகிலாவுக்குத் தன் கணவன் ஜகதீஷைப் பற்றி எத்தனை பேசினாலும் அலுக்காது; வாய் ஓயாமல் அவனைப் பற்றியே பேசுவாள். எதைப் பற்றிப் பேசினாலும் அவன் பேச்சிலேயே கொண்டு வந்து முடித்து விடுவாள்.

ஏழைக் கணவனிடம் மனைவிக்கு எப்படித் தான் இத்தகைய அன்பு ஏற்பட்டதோ என்று விஜயலக்ஷ்மி அதிசயிப்பாள். ஆனால் அவளுக்கு அதன் காரணம்தான் விளங்குவதில்லை.

நவீனங்களிலும் கதைகளிலும் வேண்டுமானால் ஏழைக் கணவனிடம் காதல் மூண்டு விட்டதாக எழுதலாம்; படிக்கலாம்; ஒப்புக் கொள்ளவும் செய்யலாம். இதெல்லாம் கற்பனையில் நிகழக் கூடிய காரியங்கள் என்பதில் சந்தேகமில்லை. நடை முறையில் நடக்கக் கூடியது தானா என்று கேட்டால் சற்று யோசிக்க வேண்டியதுதான். உண்மை வாழ்க்கையில் கணவன் ஏழையாக இருந்து, அந்த ஏழைமையினால் அவன் கஷ்டப்பட்டு வருந்தி மனைவியையும் தன் கஷ்ட நஷ்டங்களுக்கு உட்படுத்தினால் கணவனிடம் மனைவிக்கு உள்ள சிரத்தை எத்தகையது என்று தெரிந்துவிடும். கஷ்டத்தில் உழலும் கணவனிடத்தில் மனைவிக்குச் சிரத்தை உண்டாவது என்பது கனவிலும் நினைத்துப் பார்க்க முடியாத காரியம். அதனால்தான் விஜயலக்ஷ்மிக்குக் கோகிலாவின் அந்த அன்பில் சட்டென்று நம்பிக்கை விழவில்லை.

விஜயலக்ஷ்மியின் கணவரோ ஏழையில்லை. அவள் வேண்டுவதை நிறைவேற்ற அவர் எப்பொழுதுமே தயாரா யிருந்தார். ஏன்? அவள் எப்பொழுது எதற்கு வாய் திறப்பாள் என்றுகூட எதிர்பார்த்திருந்தார். ஒருவேளை அதனால்தானோ என்னவோ, விஜயலக்ஷ்மிக்குக் கோகிலாவைப் போல் கணவரிடம் அன்பு உண்டாக வில்லை. சுலபமாகக் கிட்டி விடக் கூடிய காரியங்களில் அசிரத்தையும் எட்டாக் கனியாகத் தோன்றும் காரியங்களில் அதிக சிரத்தையும் காட்டுவதுதான் மனித இயல்பு. விஜயலக்ஷ்மியும் அந்தக் கொள்கையைத்தான் கடைப் பிடித்தாளோ, என்னவோ? யார் கண்டார்கள்?

ஒரு நாள் விஜயலக்ஷ்மியின் வீட்டைத் தேடிக் கொண்டு கோகிலா வந்தாள். அப்பொழுது லால்ஜியும் விஜயலக்ஷ்மியும் உட்கார்ந்து ஏதோ பேசிக் கொண் டிருந்தார்கள். அதைக் கண்டு விட்ட கோகிலா சட்டென்று அவர்களைப் பார்க்காதவள் போல் திரும்பினாள். அவள் முகத்தில் இயல்பாகவே அப்பொழுது பரபரப்பும் கலவரமும் தாண்டவமாடிக் கொண்டிருந்தன. கோகிலா வந்தவள் திரும்பிப் போவதைப் பார்த்த விஜயலக்ஷ்மி எழுந்து சென்று அவள் கையைப் பிடித்து இழுத்து வந்தாள். கோகிலா கோணிக் கோணிக் கொண்டே அவள் பின்னால் அவள் அறைக்குச் சென்றாள்.

கோகிலா சிறிது நேரம் ஏதேதோ பேசிக் கொண்டிருந்தாள். பிறகு மிகவும் மெதுவான குரலில், "ஏன், விஜயா! எனக்கு ஒரு காரியம் செய்து தருவாயா?" என்று தயங்கியவாறே கேட்டாள்.

"தாராளமாகச் சொல். என்னால் செய்யக் கூடியதாக இருந்தால் கட்டாயம் செய்து தருகிறேன்!" என்றாள் விஜயலக்ஷ்மி.

கோகிலா ஒரு முறை சுற்று முற்றும் பார்த்து விட்டு மிகுந்த சங்கோசத்துடன் தங்கச் சங்கிலி ஒன்றைத் தன் மடியிலிருந்து எடுத்து விஜயலக்ஷ்மியிடம் கொடுத்தாள். "இந்தத் தங்கச் சங்கிலியை வைத்துக் கொண்டு உனக்குத் தோன்றிய ரூபாயைக் கொடு. எனக்குக் கொஞ்சம் பண முடையாக இருக்கிறது!" என்றாள்.

அதைக் கேட்ட விஜயலக்ஷ்மி திடுக்குற்றாள். 'இவர்கள் இவ்வளவு ஏழையா?' என்ற கேள்வி அவள் மனத்தில் எழுந்தது. "இந்தச் சங்கிலியை ஒன்றும் நீ வைக்க வேண்டாம். உனக்குத் தேவையான ரூபாயைக் கேள், தருகிறேன்!" என்றாள்.

"அதெல்லாம் முடியாது. நான் சும்மா வாங்கிக் கொள்ள முடியாது. இந்தச் சங்கிலியை அடகாக வைத்துக் கொண்டு நீ பணம் தருவதா யிருந்தால்தான் நான் வாங்கிக் கொள்வேன்!" என்று தீர்மானமாகச் சொல்லி விட்டாள் கோகிலா.

வெகு நேரம் முடியாது, மாட்டேன் என்று எத்தனையோ தர்க்கம் செய்த பிறகு விஜயலக்ஷ்மி சங்கிலியை வாங்கிவைத்துக் கொண்டு அதற்குத் தகுந்த ரூபாயைக் கொடுத்தாள்.

ஆனால் அத்துடனேயே அந்த விஷயத்துக்கு ஒரு முடிவு ஏற்பட்டு விடவில்லை. ஒரு மாதம் ஒன்றரை மாதத்துக்கு ஒரு தடவை கோகிலா ஏதாவது ஒரு நகையை விஜயலக்ஷ்மியிடம் எடுத்துச் செல்வாள். அதை அடகு வைத்துத் தனக்கு வேண்டிய தொகையை வாங்கிச் செல்வாள்.

கோகிலாவின் அத்தகைய நிலையைக் கண்ட விஜயலக்ஷ்மிக்குத் தன்னை யறியாமலே அவள்மீது இரக்கம் பிறந்தது. இவ்வளவு நல்ல மனைவிக்கு இத்தகைய கணவனா வந்து வாய்க்க வேண்டும் என்று எண்ணம் அவள் உள்ளத்தில் எழுந்து ஜகதீசைப் பற்றி அலசி ஆராயுமாறு தூண்டிற்று. கடைசியில் ஒரு நாள் அவள் பொறுமை இழந்து அவள் கணவன் ஜகதீசைப் பற்றிக் கோகிலாவிடம் கேட்டே விட்டாள்.

அன்று ஏதோ ஒரு நகை அடகு வைத்துப் பணம் வாங்கிச் செல்வதற்காகக் கோகிலா அவளிடம் வந்திருந்தாள்.

"ஆமாம், எத்தனையோ நகைகளைக் கொண்டு வந்து அடகு வைத்துப் பணம் வாங்கிப் போகிறாயே! இந்த விஷயம் உன் கணவருக்குத் தெரியுமோ, தெரியாதோ?" என்று கேட்டாள் விஜயலக்ஷ்மி.

கோகிலாவுக்கு ஒரு நிமிஷம் என்ன பதில் சொல்வதென்று ஒன்றும் புரியவில்லை. இருந்தாலும் தன்னைச் சீக்கிரம் சுதாரித்துக் கொண்டு, கண்மூடிக் கண் திறக்கும் நேரத்துக்குள் யோசனை செய்து ஒரு முடிவுக்கு வந்து விட்டாள். "இந்தச் சந்தேகம் உனக்கு ஏற்படுவானேன்? அவருக்குத் தெரியாமல் இதெல்லாம் நடக்க முடியுமா?" என்று விஜயலக்ஷ்மியின் கேள்விக்குப் பதிலை ஒரு கேள்வியாகவே கேட்டு வைத்தாள்.

கால்கேட்
குளோரோபில் டூத்பவுடர்



குளோரோபிலின் பூரண நன்மைகள் நீங்கள் உபயோகிக் கையில் தருகிறது!

வீரிய குளோரோபில்தான் பலன் தரும்!

வீரிய குளோரோபிலின் நன்மைகளை எல்லாம் புதிய கால்கேட் குளோரோபில் டூத் பவுடர் தருகிறது. வீரிய குளோரோபில் தான் வாய் நாற்றம், கிரிமிகளை நீக்கி ஈறுகளைப் பலப்படுத்துகிறது. கால்கேட் முறையில் குழந்தைகளுக்கு குளோரோபில் கவனிப்பை அளியுங்கள்—அரிய சந்தர்ப்பம்.



வாய் நாற்றத்தை அழிக்கிறது

ஒரு விசேஷ சூத்திரம் காரணமாக கால்கேட் குளோரோபில் டூத்பவுடர் துரிதமாக, திருத்தமாக வேலை செய்கிறது. உங்கள் வாய் அதிகநேரம் புதுமை, இனிமையுடன் இருக்கிறது. அதன் வாசனை ஜோரானது!

கிருமிகளை ஒழிக்கிறது

சாப்பிட்டவுடன் கால்கேட் குளோரோபில் டூத் பவுடரை உபயோகிப்பதால் பற்களைச் சிதைக்கும் அமிலங்கள் ஒழிகின்றன.





ஈறுகளை பலப்படுத்துகிறது

ஈறுகளை குளோரோபில் பலப்படுத்துகிறது. தினசரி கால்கேட் குளோரோபில் டூத் பவுடரை உபயோகிப்பதால் குளோரோபிலின் பூரண நன்மைகளைப்பெற்று ஈறுகளைப் பாது காக்கலாம்.



CTP5/

விஜயலக்ஷ்மிக்கு அவள் வார்த்தையில் உடனடியாக நம்பிக்கை விழவில்லை. அதற்குப் பதிலாகக் கோகிலாவின் கணவனைப் பற்றிக் குறைகூற அவளுக்கு ஒரு ஆதாரமே கிடைத்தது. "ஆமாம், அவருக்குத் தெரியும் என்கிறாயே, தெரிந்திருந்தால் அவர் உன்னை இப்படிச் செய்ய ஏன் விடுகிறார்? அவருக்கு வெட்கம், மானம், சூடு, சொரணை என்பது கொஞ்சங்கூடக் கிடையாதா? இத்தகைய காரியம் செய்யச் சொல்லும் பொழுது உன் ஆசைக் கணவருக்குச் சிறிதும் வெட்கமா யில்லை?" என்று கேட்டாள்.

தன் கணவனுக்கு எதிராக ஒருத்தி இப்படிக் குறை கூறுவதைக் கேட்கக் கோகிலாவுக்குக் கொஞ்சமும் தாளவில்லை. "அவருக்கு இல்லாத வெட்கம் - மானம் வேறு யாருக்கு இருக்க முடியும்? அவர் செய்து போட்ட நகைகள்! அவற்றை விற்க அவருக்கு உரிமை கிடையாதா? அவர் விற்காமல் வேறு யார் விற்பதாம்?" என்று கேட்டாள்.

"என்ன இருந்தாலும் நகைகளைக் கொடுப்பவன் நீதானே?" என்றாள் விஜயலக்ஷ்மி.

"ஆமாம், ஆனால் நான் யாருக்குச் சொந்தமாம்?" என்று கேட்ட கோகிலாவின் முகத்தில் நாணம் கலந்த இனிய இள நகை தாண்டவமாடியது; பாரத நாட்டின் பண்பு பிரதானமாகப் பிரதிபலித்துப் பரிமளித்தது.

விஜயலக்ஷ்மி வைத்த கண் வாங்காமல் கோகிலாவையே பார்த்துக் கொண்டிருந்தாள். கோகிலாவின் முகத்தில் தாண்டவமாடிய காதல் உணர்ச்சி நாணத் திரையில் நாணிக் கோணி மனத்தைக் கவரும் முறையில் மறைவதைக் கண்ணுற்ற பொழுது விஜயலக்ஷ்மிக்கு அவளை அப்படியே கட்டித் தழுவிக் கொள்ள வேண்டும் என்ற ஆசை அளவுக்கு அடங்காமல் ஏற்பட்டு விட்டது. அவள் வாய் திறந்து ஒன்றும் பேசவில்லை. உள்ளத்தில் எழுந்த பெருமூச்சை ஒருவருக்கும் தெரியாமல் சிறுகச் சிறுக மெதுவாக வெளியேற்றி மனத்தில் ஏற்பட்ட சுமையை இறக்கிக் கொண்டாள்.

"நம் உள்ளத்தில் இதற்கு முன்னால் இத்தகைய உணர்ச்சிகள் இடம் பெற்றதே இல்லையா?"

விஜயலக்ஷ்மி தன்னைத்தானே இந்தக் கேள்வியைக் கேட்டுக் கொண்டாள்.

கண்களை நிமிர்த்திய விஜயலக்ஷ்மியின் பார்வையிலே சுவரில் மாட்டப்பட்டிருந்த அவளது கணவரின் புகைப்படம் விழுந்தது. கணவரது படத்தைக் கண்ணுற்றதும், கண்களெதிரே கணவரின் சொத்து சுதந்திரம் ஆகியவை விழலாடின. அதைத் தொடர்ந்தாற் போலவே, தனக்குக் கிட்டியுள்ள இன்பானுபவங்களும் சுகபோக சாதனங்களும் நினைவுக்கு வந்தன. தன் கணவர் தனக்கு அடிமையாக, என் என்று சொல்வதற்கு முன் எண்ணெயாக நிற்பது நினைவு வரவே, அவள் தேகத்தில் புல்லரிப்பு ஏற்பட்டது. தன் கணவரிடம், தான் கண்ட நல்லியல்புகள் பலவும் நினைவுக்கு வரவே அவளுக்கு அவரிடம் அபார சிரத்தையும் பக்தியும் உண்டாயின.

எனவே, அவள் தன்னை மறந்தாள். கோகிலா விடை பெற்றுக் கொண்டு சென்ற சிறிது நேரத்துக் கெல்லாம் அவள் தன் கணவரிடம் சென்று கோகிலாவின் குடும்பத்து அந்தரங்க விஷயங்களை யெல்லாம் ஆதியோடு அந்தமாக எடுத்துச் சொன்னாள்.


கோகிலா பரம ஏழை, நகைநட்டுகளை அடகு வைத்து வீட்டுச் செலவுகளை நடத்தி வருகிறாள் என்பதை அறிந்ததும் லால்ஜியின் கண்கள் பளிச்சிட்டன.

இந்த உலகத்தில் ஏழைமை பணக்காரர்கள் இன்பக் கேளிக்கைகள் புரிவதற்கு உரிய விளையாட்டு மைதானமாகத் திகழ்கிறது. பணக்காரர்கள் நினைத்தால் ஏழைகளை விலைக்கு வாங்கி வைத்துக் கொள்ளலாம். வாடகைக்குப் பேசி வைத்துக் கொள்ளலாம். குத்தகைக்குக்கூட எடுத்துக் களிக்கலாம். ஏழைமை பணக்காரர்களின் பல விதத் தேவைகளையும் தீர்த்து வைக்கும் வற்றாக் களஞ்சியமாகக் கருதப்படுகிறது; அள்ள அள்ளக் குறையாத மாபெரும் கிடங்காகக் கருதப்படுகிறது.

'ஆட்டி வைத்தால் யார் ஒருவர் ஆடாதாரே!' என்னும் முதுமொழிக்குத் தாயகமாக விளங்குபவர்கள் ஏழைகள்! அவர்களைக் கொண்டு பணக்காரர்கள் எந்தக் காரியத்தைத்தான் சாதித்துக் கொள்ள முடியாது? ஏழை யென்று ஒரு இனம் மட்டும் இல்லா விட்டால் பணக்காரர்களின் வாழ்க்கை பாழ்த்து விடும். பத்தும் செய்யும் பணத்துக்கு உள்ள மதிப்பே அலாதி. ஏழைகளையும் பணக்காரர்களையும் தன் இச்சைப் படி ஆட்டி வைக்கும் ஆற்றல் அதற்கு இருப்பது போல் வேறு எந்தப் பொருளுக்குமே கிடையாது. அதனால்தான் பணம் படைத்து விட்டால், பணக்காரனுக்குத் தலைகால் புரிவதில்லை. ஏழையைக் கிள்ளுக் கீரையாகக் கருதுகிறான்; தனக்கு இன்பம் அளிக்கும் ஒரு கருவியாக மதிக்கிறான்.

பணம் பெருத்த லால்ஜி சேட்டுக்கு அழகை ரசித்துப் பருகுவதில் அலாதி ஆனந்தம். அவருடைய ஆசைக்கேற்றபடி அவருக்கு வாய்த்த மனைவி அழகியாக இருந்தாள். ஆனால் இந்த உலகத்தில் அவருடைய மனைவி மட்டும்தானா அழகி? அவளைப் போல் இந்த உலகத்தில் இன்னும் எத்தனையோ அழகிகள் இல்லையா? இந்த நினைவு அவருடைய கவனத்தைவிட்டு என்றுமே அகன்றதில்லை. ஒருத்தி அழகிய பெண்ணாயிருந்தால் நன்றாகத் தானிருக்கும். அவளோடு இன்னொருத்தியும் அழகியாகவே சேர்ந்து விட்டால் பொன்னுக்கு மணம் ஏற்றினாற்போல் இன்னும் நன்றாகத்தானே இருக்கும்? அழகைப் பருகும் விஷயத்தில் யாருக்குமே அலுப்புத் தட்டுவதில்லை; சலிப்பு ஏற்படுவதில்லை. அப்படி ஆளை மயக்க அழகினிடம் என்ன

அவர் அலுவல்!



பாகிஸ்தான் பிரதம மந்திரி ஜனாப் முகம்மது அலிக்கு இந்தியாவைக் குற்றஞ் சாட்டிப் பேசுவதற்கே ஒரு வாரம் முழுதும் சரியாயிருக்கிறது!

தான் சொக்குப்பொடி இருக்கிறதோ, தெரியவில்லை! எனவேதான், லால்ஜி ஸேட் எதுவும் ஒன்றுக்கு இரண்டாயிருந்தால் நலம் என்று அபிப்பிராயம் கொண்டிருந்தார்.

லால்ஜி ஸேட்டின் இந்த அபிப்பிராயம் வெகு தெளிவானது, சரளமானது; சுலபமானது. சுலப கணிதத்தைக் காட்டிலும் சுலபமானது. இதற்கு விரிவுரை தேவையில்லை; அவ்விரிவுரையை விரித்து உரைக்க உரையாசிரியரும் வேண்டியதில்லை.

விஜயலக்ஷ்மி கோகிலாவுக்குப் பணம் கொடுத்து உதவுகிறாள் என்ற விஷயத்தை அறிந்த லால்ஜி ஸேட் அவளுடைய அந்த செய்கைக்கு ஆக்கம் அளித்தார்; ஊக்கமும் அளித்தார். தோழி என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று வாயாரப் புகழ்ந்தார். 'பணம் என்ன? இன்று போகும், நாளை வரும். சமயத்தில் உதவுவதுதான் பெரிது!" என்று விஜயலக்ஷ்மிக்கு உபதேசம் செய்தார். அவர் எந்த நோக்கம் கொண்டு அப்படிச் சொல்லியிருந்தால் என்ன? அதன் பலனாகக் கோகிலாவையும் அவள் குடும்பத்தையும் கண்காணித்துக் கவனித்துக் கொள்ளும் காரியம் விஜயலக்ஷ்மிக்கு வெகு சுலபமாகப்போய் விட்டது. அவள் விரும்பியதும் அதுதானே?

கோகிலாவின் குழந்தையை அடிக்கடி அவள் தன்னிடம் கூப்பிட்டுக் கொஞ்சுவாள். விளையாட்டுப் பொம்மைகளும் மிட்டாய்களும் வாங்கிக் கொடுத்து மகிழ்வாள். இம்மாதிரி ஏதாவது சாக்குகளை வைத்துக் கொண்டு விஜயலக்ஷ்மி ஜன்னல் வழியாகக் கோகிலாவின் வீட்டில் பார்வையைச் செலுத்துவாள். கோகிலா சமையல் அறையில் ஏதாவது கைக்காரியமாக இருந்தாலும் சரி, அவளைக் கூப்பிட்டு அடிக்கடி ஏதாவது பேச்சைத் தொடங்கி அவளுடைய அறிமுகத்தையும் பழக்கத்தையும் அதிகமாக்கிக் கொள்ள முயற்சி செய்வாள்.

கோகிலாவின் குடும்பத்தில் தாண்டவமாடும் தாம்பத்திய உறவையும் ஸௌஜன்ய வாழ்க்கையையும் கண்ணாரக் கண்டு கவனித்து வந்த பொழுதிலும் விஜயலக்ஷ்மியின் மனத்தில் லால்ஜி ஸேட்டினிடம் அன்பு உதயமாகவில்லை. லால்ஜியின் குணங்களில் கவனம் செலுத்தும் பொழுதெல்லாம் அவளுக்கு அதில் வெளிப் பூச்சும் பகட்டும் தாண்டவமாடுவதாகவே தோன்றும். அந்த வெளிப் பூச்சிலும் பகட்டிலும் மயங்க அவளுக்குத் தோன்றாது. கணவரிடம் நிறைவைக் காணும் கற்பனையில் ஈடுபட்டுக் குறைவைத்தான் காண்பாள்; நற் பண்புகளைக் காணும் நல்லெண்ணத்தில் ஆழ்ந்து, பண்பாடற்ற பிண்டத்தைத்தான் காண்பாள். இதன் பலனாக விஜயலக்ஷ்மிக்குத் தன் வாழ்க்கையே வெறிச்சோடி விட்டதாகத் தோன்றியது. எண்ணற்ற சுக போகங்கள் நிறைந்த தன் வாழ்க்கை வேம்பாகக் கசப்பதாகத் தோன்றவே, அவள் மனத்திலே அளவற்ற அதிருப்தி நிலவியது. (தொடரும்)


இயற்கையின் நடுவே அழகு
அழகுக்குக் காரணம் வாயில்
அச்சடித்த, சாயம் ஏற்றிய மெர்ஸிரைஸ்
செய்யப்பட்ட
கடாவ்
வாயில்
சுதேசியே வாங்குங்கள்
சிறந்ததையே வாங்குங்கள்

சேற்றில் மலர்ந்த செந்தாமரை

தில்லைவாசி

ஆனந்தனுக்கு அது புதுமையான அனுபவம். பட்டினத்து நாகரிகச் சூழ்நிலை நீங்கிப் போய்க் கொண்டிருக்கிறான். அறுபது மைல் தூரம் காரில் பிரயாணம். எங்கோ மூலையில் கேட்பாரற்றுக் கிடக்கும் கிராமம் அவனை அன்போடு வாவென்று அழைத்திருக்கிறது. அங்கே பள்ளிக்கூடத்து ஆண்டு விழா; தலைமை வகிக்கப் போய்க் கொண்டிருக்கிறான்.

ஆனந்தன் நல்ல பேச்சாளன். தேமதுரத் தீஞ் சுவைத் தமிழில் தங்கு தடையின்றி, உணர்ச்சி வெள்ளத்தை அள்ளி வீசுவதில் அவனுக்கு இணை அவனே தான்.

அவன் பேச்சில் மூழுக்க மூழுக்கக் கிராமத்தைப் பற்றிய பெருமையும் சிறுமையும் வெளிப்படும். உள்ளம் உருக்கும் உண்மை. ஆனால் அவனைப் பொறுத்தவரையில் கிராமத்துப் பேர்வழியல்ல. நகரத்து நாகரிகத்தில் பிறந்து வளர்ந்தவன். எப்போதோ சின்னஞ் சிறு வயதில் கிராமத்துக்குப் போய் வந்ததோடு சரி.

இப்பொழுதோ திடீரென்று ஒரு வாய்ப்பு, கிராமத்துக்குப் போக நேர்ந்து விட்டது. அடுத்த ஆண்டு வந்தால், படிப்பு முடிந்துவிடும். அவன் எங்கோ போய்விடப் போகிறான். பட்டின வாசமோ, அமைதி நிறைந்த கிராமத்து வாழ்க்கையோ சொல்ல முடியாது.

உறங்கிக் கிடந்த அவன் உள்ளம் விழித்துக் கொண்டது. விழிப்பூட்டியவர் அவனிடம் அன்பு கொண்ட அவன் சரித்திரப் பேராசிரியர்.

ஒருநாள் மாலை ஆசிரியர் அவன் அறையைத் தேடி வந்தார். அவர் கூட இன்னொரு மனிதரும் வந்தார். பார்ப்பதற்கு அவர் கிராமத்துச் சூழ்நிலையில் ஒதுங்கி வாழ்பவர் போல் தோன்றினார்.

"ஆனந்தன்! இவர் என் நண்பர். கிராமவாசி. கிராமத்தில் ஆறுமுகம் என்று சொன்னால் போதும். அன்பான மரியாதை கிட்டும். அவ்வளவு செல்வாக்கு. சுற்றிப் பத்துப் பதினைந்து கிராமங்களில் இவர் பெருமைக்கு ஈடு இணை கிடையாது. மக்கள் சேவைதான் இலட்சியம். அதுவேதான் மூச்சுக் காற்று. அறியாமையில் கிடந்துழலும் மக்களுக்குக் கல்வி ஒளியைப் பரப்புகிறார். அங்கு ஒரு பள்ளி நடத்துகிறார். அதற்கு ஆண்டு விழா வருகிறது. கிராமத்தில் இதுவே ஒரு உற்சவம். இம்முறை அப்பொறுப்பை யார் தலையில் சுமத்துவது என யோசனை கேட்க வந்தார். நீதான் ஆண்டு விழாவுக்குத் தலைமை வகித்து நடத்திக் கொடுக்க வேண்டும். என்ன சொல்கிறாய்!" என்று கேட்டு விட்டு, கிராமத்து மனிதரை அவனுக்கு அறிமுகம் செய்து வைத்தார் ஆசிரியர்.


"ஐயா! அனுபவமே ஒரு நல்ல பள்ளி. ஆனால் அதற்குக் கட்டணமோ அதிகம். வாழ்வின் அனுபவம் பெறாத எனக்குப் பெருமை தேடித் தரும் தங்களுக்கும் தங்கள் நண்பருக்கும் என் மனமுவந்த நன்றி. எப்பொழுது வேண்டுமானாலும், என் பணி மக்களுக்குண்டு" என்று தயங்காமல் ஒப்புக் கொண்டான்.

கிராமத்து மனிதர் ஆறுமுகம், அகமும் முகமும் மலர்ந்து, கரம் குவித்து ஆனந்தனிடம் விடை பெற்றுக் கொண்டார்.

அடுத்த வாரமே அதிகாலையில் அவனை அழைத்துப் போகக் கார் வந்து விட்டது. ஏதோ ஒரு புதிய சக்தி ஆனந்தனை ஊக்குவித்தது.

இதமான குளுமைத் தென்றல். ஆடம்பரம் நீங்கி, அமைதி வழியும் கிராமச் சூழ்நிலை. கண்ணுக் கெட்டிய நெடுந்தூரத்துக்கு நெடுந்தூரம் பசுமையாகத் தோன்றும் பூமி.

செம்மண் சாலை. அதன் இரு மருங்கும் வானை முட்டும் பசு மரங்கள் அடர்ந்து வரிசையாக நின்ற கவர்ச்சியான தோற்றம்.



மயிலாப்பூர் ஸ்ரீ வி. ராமசாமி ஐயர் அவர்களின் குமாரர் ஸ்ரீ விஸ்வநாதன் அவர்களுக்கும் சென்னை ஸ்ரீ என். வி. சுகவனம் ஐ. ஏ. எஸ். அவர்களின் புத்திரி செல்வி ஸ்வர்ணத்துக்கும் ஜூன் மீ 2உ சென்னையில் சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது. திருமணத்துக்கு ஏராளமான நண்பர்களும் உறவினர்களும் விஜயம் செய்து மணமக்களுக்கு வாழ்த்துக் கூறினர். வாழ்க மணமக்கள்!


கார் விரைந்து ஓடிக் கொண்டிருந்தது.

சிறு மழை பெய்திருந்ததற்கு அடையாளமாக நனைந்த தரை காய்ந்தும் காயாமலு மிருந்தது. குழி விழுந்த இடங்களில் தண்ணீர் தேங்கி நின்றது. மண்வளம் நிறைந்தும், தண்ணீர் வளம் நிறையாத பிரதேசங்கள் என்பது போகப் போக அவனுக்குத் தெரிந்தது. கறுகறுப்பு நிறைந்த பாட்டாளி உழவர்கள் சோம்பலின்றி உழைத்துக் கொண்டிருந்தார்கள். வயலில் கலப்பையைக் கொண்டு உழுது கொண்டிருந்தார்கள்.

சாலையை அடுத்து இரு பக்கமும், நெடுந் தூரத்துக்கு நெடுந்தூரம் முந்திரி மரங்கள். இல்லை, ஒரே முந்திரிக் காடுகள் தாம். அடர்த்தியாக இருந்தன.

குடையை விரித்துத் தரையில் ஊன்றி வைத்தாற் போன்று, அடர்ந்து படர்ந்திருந்த முந்திரி மரங்களும், அவை பழம் தாங்கி நின்ற காட்சியும் ஆனந்தனைக் கவர்ந்தன; மயக்கின.

கண்களில் குளுமை ஏறி, இதயத்தின் இன்பப் பூரிப்போடு, அவன் அங்கே கண்ட காட்சிகள் அனந்தம்.



சென்னை ஆடிட்டர் ஸ்ரீ டி.எஸ். நாராயண ஐயர் அவர்களின் குமாரர் ஸ்ரீ என். சுந்தரராஜனுக்கும் கல்கத்தா நேஷனல் இன்ஸுலேடட் கேபிள் கம்பெனி மானேஜர் ஸ்ரீ டி. எஸ். சீதாபதி அவர்களின் தமையனார் புதல்வி செல்வி சந்தானலக்ஷ்மிக்கும் (கற்பகாம்பாள்) ஜூலை 7உ திருமாநிலையூரில் வெகு சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது. திருமணத்துக்கு நண்பர்களும் உறவினர்களும் திரளாக விஜயம் செய்து மண மக்களுக்கு ஆசி கூறினார்கள். நம் ஜனாதிபதி, உதவி ஜனாதிபதி, மாகாண மந்திரிகள் முதலிய பல பிரமுகர்களிடமிருந்து தம்பதிகளுக்கு வாழ்த்துச் செய்திகள் வந்தன.

கடைசியில் ஆனந்தன் ஏழு லட்சம் கிராமங்களின் பிரதிநிதியாகத் தோற்றமளித்த அந்தக் கிராமத்துக்கே வந்துவிட்டான்.

அங்கே ஆண்டு விழாவுக்கு அறிகுறியாக மாவிலைத் தோரணங்கள், வண்ணக் காகிதங்களைத் தொங்கவிட்ட அலங்காரிப்பு. ஒரே புதுமைப் பொலிவு கொண்டு விளங்கியது.

ஆனந்தனை வரவேற்க மனித வெள்ளம் திரண்டு வந்தது. சிறுவர், சிறுமிகள் அதில் குதூகலத்துடன் அக்கூட்டத்தில் மிதந்து கொண்டிருந்தார்கள்.

அங்கே ஆனந்தன் அறிந்தது ஒன்று. வறுமையை அல்லும் பகலும் உழைப்பால் விரட்ட முயன்ற அவர்கள் அனைவரின் முகத்திலும் பொங்கும் மகிழ்ச்சியின் தாண்டவம். அன்புப் பார்வை. வெள்ளைப் பல் வரிசை தோன்றும் சிரிப்பு. நகரத்தின் பெரிய ஜன சமுத்திரத்தில், தலைபோகிற அவசரத்தில், பல்வேறுபட்ட விவகாரத்தில் இந்த அமைதியை எங்கே காண முடியும்!

"வாருங்கள், ஐயா!" என்று எல்லாருமே ஒருத்தர் மாற்றி ஒருத்தர் கரமலர் குவித்து அவனை மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

ஆறுமுகம் ஆனந்தனைக் கிராமத்துப் பெருமக்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார். பின் அவனைப் பள்ளிக்கூடத்துக்கு அழைத்துப் போனார்.

பள்ளிக்கூடம் விசாலமான ஒரு கீற்றுக் கொட்டகைதான். அழகு நிறைந்து காணப் பட்டது. அதைச் சுற்றிலும் பசுமையான தோட்டம். மணம் கமழும் மலர் குலுங்கும் மல்லிகை, முல்லைச் செடிகள். ஆனந்தன் படித்த பள்ளியிலோ, படிக்கும் கல்லூரியிலோ காணக் கிடைக்காத கொள்ளை அழகைக் கண்டு மகிழ்ந்தான்.

ஆறுமுகத்தின் அயர்விலாத சேவையை அவன் வியந்தான். அறிவொளி பரப்பும் அவர் முயற்சி அற்ப சொற்பமல்ல.

அடுத்தபடியாக ஆறுமுகம் ஆனந்தனை சமீபத்திலிருந்த தம்முடைய வீட்டுக்கு அழைத்துப் போனார். மாலையில்தானே கூட்டமும், ஆண்டு விழா நிகழ்ச்சிகளும். அதுவரை உணவுக்குப் பின் ஓய்வு கொள்ள அங்கேதான் இருந்தாக வேண்டும்.

அங்கும் அவன் இது வரை கண்டறியாத ஒரு ஆச்சரியம் காத்துக் கிடந்தது.

எளிமையும் தூய்மையும் சேர்ந்த இருப்பிடம். மண் குடிசை. அழகுற விளங்கியது. அங்கே நிம்மதியும் திருப்தியும் கொண்ட மூன்று உள்ளங்கள். ஆறுமுகம், அவர் மனைவி, மகள்.

ஆறுமுகத்தின் வீட்டில் ஆனந்தனுக்கு அன்பான உபசரிப்பு; இதமான பேச்சு; குறைவிலாத அனுசரணை.

"செந்தாமரை! இங்கே வாம்மா! அன்பர் ஆனந்தனுக்கு மோர் கொண்டு வந்து கொடு" என்றார் ஆறுமுகம். அடுத்த கணம் ஒரு யௌவன மங்கை அங்கே இன்முகம் காட்டினாள்.

கையில் மோர் டம்ளர்களுடன் வந்தாள் செந்தாமரை. இருவரும் பருகினார்கள்.

ஆறுமுகம் தம் சேவையைப் பற்றி விளக்கமாக ஆனந்தனிடம் சொன்னார்.

"ஆனந்தன்! இப்போது வேறு ஒரு உண்மையையும் உங்களிடம் சொல்லப் போகிறேன். அது என் பழைய கதை. இதைக் கேட்கும் முதல் ஆசாமியும் நீங்களே" என்ற பீடிகையோடு சொன்னார். ஏனோ இதை அவனிடம் சொல்ல வேண்டும்போல் அவருக்குத் தோன்றி விட்டது. அவர் சொன்ன விவரம் பின்வருமாறு:

அப்போது ஆறுமுகம் கட்டிளம் காளை. துடிப்பான வாலிபப் பருவம். ஆனால் அவருக்குச் சொத்து ஏதுமில்லை. தாய்தந்தையரும் இல்லை. உற்றார் உறவினர் உதவியில்லை. நண்பர்களின் ஆதரவுமில்லை. கல்லூரிப் படிப்புதான் அவருக்குத் துணை. எங்கெங்கோ வேலைக்கென்று அலைந்த பின், அவருக்குக் கிட்டியது ஏதோ ஒரு கம்பெனியில் குமாஸ்தா உத்தியோகம். சொற்ப சம்பளம். ஆனால் உள்ளத்து ஆசைகளோ அதிகம். செல்வச் சீமானாக ஆக வேண்டுமென்ற ஒரே நினைவுதான் எப்போதுமே. பணம் பெற வழி! கிடைத்த ஊதியத்தில், சாப்பிட்டது போக எஞ்சியது எல்லாமே குதிரைப் பந்தயத்தில் கரைந்து கொண்டிருந்தது. இருந்தாலும் நம்பிக்கை விடவில்லை. மேலும்மேலும் இதே பைத்தியம். முடிவு! கம்பெனிப் பணத்தில் நூறு ரூபாயைக் கையாளும்படி நேர்ந்தது. அதையும் பந்தயத்தில் இழந்தார். கொஞ்சம் விழிப்பு ஏற்பட்டது. குற்றம் பெரிதாகத் தோன்றியது. களவு வெளியானால் தண்டனை! சிறை வாசம்! என்ன மானக்கேடு!



சென்னை சிந்தாதிரிப் பேட்டை திருவருள் தவநெறி மன்ற ஆண்டு விழா ஜூலை மாதம் ஐந்தாம் தேதி முதல் மூன்று தினங்கள் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இந்த மூன்று தினங்களிலும் பல அறிஞர்கள் பங்கெடுத்துக் கொண்டு சொற்பொழிவு நிகழ்த்தி விழாவைச் சிறப்புறச் செய்தனர். மதுரை திருஞானசம்பந்த ஆதீன இளவரசு சுவாமிகள், திருமுருக கிருபானந்தவாரியார், ஸ்ரீ ராஜாஜி முதலியவர்கள் அமர்ந்திருப்பதையும், ஸ்ரீ வீர சிவசுப்பிரமணியம் சொற்பொழிவாற்றுவதையும் காணலாம்.

அப்புறம் உயிர் வாழ்வதா! அதைவிட உயிரேயில்லாமல் போய்விட்டால்! தற்கொலை முயற்சி! சத்தம் கேட்டுப் பக்கத்து வீட்டுக்காரர் விரைந்து ஓடி வந்தார். கதவு பலவந்தமாக உடைத்துத் திறக்கப்பட்டது. ஊசலாடிய உயிர் பிழைத்துக் கொண்டது. அது மட்டுமா! இதைப் பற்றிப் போலீசுக்குத் தகவல் எட்டினால்! அடுத்தது சிறைவாசம்தான். ஆனால் அப்படி எதும் நிகழவில்லை. உயிர் காப்பாற்றிய பக்கத்து வீட்டுக்காரர் மிக மிக நல்லவர். அவர் வக்கீல். அப்பொழுதுதான் தொழில் தொடங்கியிருந்தார். இந் நிகழ்ச்சியைப் பிறர் அறியாமல் மூடப் பட்டது. காரணமறிந்த வக்கீலே பணம் கொடுத்து உதவினார். கம்பெனியிலும் களவு வெளிப்படவில்லை. ஆறுமுகத்துக்குப் புதிய பாதை தோன்றியது. மனமாசு அகன்றது. வீணான ஆசையைத் தலை முழுகினார். கம்பெனி வேலையையும் விட்டார். வக்கீலின் உதவிக்கு நன்றி செலுத்தி, கரம் குவித்து விடை பெற்றுக் கொண்டார். அக்கணமே நகரத்தின் எல்லையைத் தாண்டி, அமைதி தவழும் கிராமத்துக்கு வந்து விட்டார்.

இந்தக் கிராமத்து ஜனங்கள் அன்பு செலுத்தி ஆதரவு காட்டினார்கள். எழுத்தறிவிக்கும் திருப்பணியை அப்பொழுதிலிருந்தே தலைமேற் கொண்டார். கிராமமே நிரந்தரவாசம். கிராமப் பெண்மணி ஒருத்தியை மணந்து கொண்டார். அவரும் ஒரு கிராமவாசியாகி விட்டார். குடும்பம் அவருக்குத் தந்த ஒரே அரிய செல்வம் செந்தாமரை. கிராமத்து மக்களுக்கு ஆற்றும் தொண்டும், அதனால் பிறர்க்கு விளையும் நன்மையுமே அவருக்குத் திருப்தி யளித்துக் கொண்டிருக்கிறது.

ஆறுமுகத்தின் உணர்ச்சி நிறைந்த சோகக் கதை ஆனந்தனின் மனத்தை உருக்கியது.

சிறிது நேரம் அங்கு மௌனம்.

"ஆனந்தன்! இன்று நான் உயிர் வாழ்கிறேன். என்னால் கிராமத்துப் பிள்ளைகள் பயன் அடைகிறார்கள். இதற்கெல்லாம் காரணகர்த்தா அந்த வக்கீல். அவரிடம் எனக்கு அதிகப் பழக்கமில்லை. அவர் பெயர் எதுவென்றும் எனக்குத் தெரியாது. இங்கு வந்த பின் ஒருமுறை அவரைப் பார்க்கச் சென்றேன். ஆனால் அவர் அங்கிருந்து வேறு எங்கோ போய் விட்டார். இதுவரை அவரைக் காண முடியவில்லை. அவரையும் அவர் செய்த உதவியையும் மறக்க முடியவில்லை. இப்போது கூட அவரைக் காணவே மனம் விழைகிறது. அவர் எங்கிருந்தாலும் நலமுற்று விளங்க வேண்டும். இதுவே சதா என் பிரார்த்தனை" என்றார் ஆறுமுகம் தொடர்ந்து.

"ஐயா! இந்தக் கிராமம் செய்த அதிர்ஷ்டம். தொல்லை நீங்கி, நீங்கள் ஆரம்பித்த தொண்டை நெஞ்சார வாழ்த்துகிறேன்" என்றான் ஆனந்தன்.

இப்படி இவர்கள் பேச்சில் பகற்பொழுது கழிந்தது. மாலை நெருங்கியது.

மீண்டும் கிராமம் சுறுசுறுப்படைந்தது.

ஆண்டு விழா!

சுற்று வட்டாரத்துக் கிராமங்களிலிருந்தும் ஜன வெள்ளம் அங்கே திரண்டு விட்டது.

செந்தாமரை இனிய குரலில் இன்னிசையுடன் இறை வணக்கம் பாடினாள். மற்ற நிகழ்ச்சிகள் தொடர்ந்தன. ஆனந்தன் தலைமைப் பீடத்தில் அமர்ந்திருக்கிறான். ஆனால் அவன் கண்கள் செந்தாமரையின் அழகைப் பருகத் தவறவில்லை. உள்ளத்திலும் கிளர்ந்தெழுந்தது உணர்ச்சிப் பிரவாகம். அன்பு துளிர்த்தெழுந்தது. அதுவே மலையென வளர்ந்து விட்டது. அவனுள்ளே செந்தாமரை விசுவரூபம் எடுத்து வியாபித்தாள்.

அடுத்தது தலைவர் சொற்பொழிவு. கடல் மடை திறந்தது. வெறும் வார்த்தைகளா அவை! ஜீவ நாடியைத் தட்டி விட்டு உணர்வூட்டும் உன்னதப் பேச்சு. மயங்கினர் மக்கள். உலகத்தைக் கண் முன்னே காட்டும் மாயா ஜாலம் எப்படித்தான் ஆனந்தனால் முடிந்ததோ! மக்கள் எல்லாரும் அவன் திறனை வியந்து வாழ்த்தினர். அவர்கள் நெஞ்சம் பெருமிதத்தினால் விம்மியது.

ஆண்டு விழா முற்றுப் பெற்றது. திருப்திப் பெருக்கோடு மலர்ந்த முகத்தோடு மக்கள் கலைந்து சென்றனர்.

அன்றிரவு ஆனந்தன் ஆறுமுகத்தின் கூரை வீட்டிலே தங்கினான். விடிந்த பின்தான் அவனை இட்டுச் செல்லக் கார் வரும்.

இரவு சாப்பாட்டின்போது ஆனந்தன் மெதுவாகச் சொன்னான்.

"ஐயா! நீங்கள் வேறு விதமாக நினைக்கா விட்டால், என் மனத்தில் உள்ளதைச் சொல்லி விடுகிறேன். உங்கள் அனைவரையும் எனக்கு நன்கு பிடித்து விட்டது. செந்தாமரையை மாலை சூட மனம் விழைகிறது. நீங்கள் என்ன சொல்கிறீர்கள்!" என்று தன்னையும் மறந்து உணர்ச்சியோடு ஆனந்தன் பேசினான். அன்றைய அனுபவம் அவனை அப்படியெல்லாம் பேசச் செய்தது. ஆறுமுகம் இதை ஆனந்தனிடம் எதிர்பார்க்கவில்லை. அவருக்குச் சொல்லொணாத வியப்பு!

"ஆனந்தன்! கரும்பு தின்னக் கூலி வேண்டுமா! உங்கள் பெற்றோர்கள் சம்மதித்தால், எனக்குத் தடையில்லை. என் பெண் பாக்கியம் செய்திருந்தால், தங்கள் இஷ்டம் நிறைவேற இறைவன் கருணை காட்டுவான்" என்று ஆறுமுகமும் உணர்ச்சி வயப்பட்டுப் பேசினார்.

"ஐயா! நீங்கள் பார்க்கத்தான் போகிறீர்கள். என் தந்தை தடை சொல்ல மாட்டார்."

"தம்பி! அறி விவேகமும், பேரன்பும் மிக்க உங்களை எங்களுக்கு அளித்த அந்தப் பெருமை வாய்ந்த பெற்றோர்களை நான் காணவே விழைகிறேன். நீங்கள் படிப்பு முடிந்து ஊருக்குப் போகும்போது எனக்கு எழுதுங்கள்."

"அப்படியே செய்கிறேன், ஐயா."

கல்லூரிக்குத் திரும்பிய பின்னரும் கூட ஆனந்தனின் நினைவு கிராமத்தைச் சுற்றிச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்தது. அந்த அருமை மனிதர் ஆறுமுகம் அவன் சிந்தனையில் சதா இருந்தார். செந்தாமரையின் செயற்கை மெருகு சேராத அழகு, அவன் இதயத்தில் இன்ப லாகிரியைக் கணத்துக்குக் கணம் அதிகரிக்கச் செய்து கொண்டிருந்தது. இந்த அனுபவத்தை அவன் எப்படி மறப்பான்!

அவன் சொல்லி வந்தபடியே நடந்தேறுமா! அவனுக்கே ஓரோர் சமயம் சந்தேகம் கிளம்பி விடும். "ஊர் பேர் தெரியாதவன் பெண்ணை மணப்பதா!" என்று அவன் தந்தை மறுத்து விட்டால்! அவன் பொய்யனாகி விடுவதா! இந்த எண்ணம் மன அமைதியைக் குலைக்கும். காரணமில்லாத பயம் பற்றிக் கொள்ளும்.

இதற்குப் பரிகாரம் காணவே விடுமுறை நாட்களில் ஒருமுறை அவன் ஊருக்குப் போனான்.

தந்தையிடம் பேச அவனுக்கு நெஞ்சுத் துணிவு ஏற்படவில்லை. தாயிடம் சொன்னான். ஒன்று விடாமல் எல்லாவற்றையும் சொன்னான். அன்னையின் அனுமதி கிடைத்தது. அவன் எண்ணம் ஈடேற வேண்டும். தந்தைதான் பாக்கி.

சாப்பாட்டு வேளையில், மகனுக்கும் கணவருக்கும், உணவு இடும்போது, தாய் இந்த விவகாரத்தை வெளியில் விட்டாள்.

"தம்பி! உனக்குரியவளைத் தேர்ந்தெடுக்க உனக்குத்தான் உரிமை. ஆனால் ஒன்று. உனக்கேற்றபடி படித்த பெண்ணைப் பட்டணத்திலே பார்த்துக் கொள். நம்முடைய செல்வ நிலைமைக்கு





தஞ்சை ஜில்லா பிரஜா சோஷலிஸ்ட் கட்சியின் முதல் அரசியல் மகாநாடு ஜூலை மீ 4௳ நாகைப் பட்டினத்தில் வெகு விமரிசையாக நடைபெற்றது. மகாநாட்டின் கொடியை ஸ்ரீ பி. எஸ். சின்னதுரை ஏற்றினார். ஸ்ரீ கே. எஸ். ராமசாமி, பட்டுக்கோட்டை ஸ்ரீ வேதாசலம், ஸ்ரீ. எஸ். ஏ. ரஹீம், ஸ்ரீ. ஏ. வி. நாராயணசாமி முதலியோர் மகாநாட்டில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மகாநாட்டின் கொடியேற்று விழாக் காட்சியை இந்தப் பக்கத்தில் உள்ளப் படங்களில் காணலாம்.

ஏற்படவும் இருக்கட்டும்" என்றார் வக்கீல் பரமசிவம் சாந்தமாகவே.

"அப்பா! எல்லாம் தெரிந்த நீங்களா இப்படிப் பேசுவது! ஏழைப் பெண் பணக்கார வீட்டில் வாழ்க்கைப் படாமல் இருப்பது நியாயமா! செந்தாமரை படித்தவள். பண்பு நிறைந்தவள். அவள் கிராமத்துப் பெண்தான்; ஆனாலும் அவள் சேற்றில் மலர்ந்த செந்தாமரை. அவள் பெற்றோர்கள் மிக்க நல்லவர்கள்."

"சரி! தம்பி! உன்னிஷ்டம். உன் நல்வாழ்வு தானே எனக்கு வேணும்" என்றார் சட்ட நுணுக்கங்களும், மகனின் போக்கும் புரிந்து கொண்ட வக்கீல். அவருடைய இயற்கையான நல்ல குணம் இதற்கு இடம் கொடுத்தது. ஆனந்தனுக்கும் தெம்பு ஏற்பட்டது.

"ஏண்டா! தம்பி! அவர்களை ஒரு முறை குடும்பத்தோடு இங்கு வரும்படி எழுதேன்" என்று கூறினாள் அன்னை.

"அவரே ஒரு முறை இங்கு வந்து உங்களையெல்லாம் பார்க்க வேணுமென்றார். இப்பொழுதே எல்லாரையும் வரும்படி சொல்லி விட்டால் போகிறது" என்றான் ஆனந்தன்.

** ** **

பரீட்சை முடிந்து, ஆனந்தன் ஊர் வந்து சேர்ந்தான். அவன் கூட ஆறுமுகமும் அவர் குடும்பத்தாரும் வந்திருந்தனர்.

வக்கீல் பரமசிவமும் அவர் மனைவியும் வந்தவர்களை அன்போடு வரவேற்றார்கள்.

பரமசிவம் ஆறுமுகத்தை உற்று நோக்கினார். எப்போதோ அறிமுகமானவர். நினைவுக்கு வந்தது. ஆறுமுகமும் வக்கீல் நிலைமையில்தானிருந்தார்.

"நீங்கள்தானா!" என்று மிகுந்த ஆச்சரியத்தோடு பரமசிவம் வினவினார்.

"அடியேன்தான்! எனக்கு வாழ்வளித்த தங்களை மறக்க முடியுமா!" என்று கரம் குவித்து நன்றியுணர்ச்சியுடன் நின்றார் ஆறுமுகம்.

"ஐயா! தங்களைப் பற்றியும் நான் எண்ணாத நாளில்லை. தாங்கள் என்ன ஆனீர்களோ! எங்கிருக்கிறீர்களோ" என்று சதா சிந்தனை, கடைசியில் பையன் தங்களைக் கண்டு பிடித்து விட்டான். தங்களைப் பற்றி ரொம்பவும் சொன்னான். தங்கள் சேவை மகத்தானது. தங்களைப் பார்த்த பின்னர்தான் எனக்குத் திருப்தி. பழக்கம் அதிகமில்லாத பழைய நண்பர்களை ஒன்று சேர்த்திட்ட ஆண்டவன் கருணை இது. அவனுடைய எண்ணற்ற திருவிளையாடல்களில் இது ஒன்று. நாம் மிக மிக நெருங்கி வந்து விட்டோம்" என்று கூறிப் பரமசிவம் ஆறுமுகத்தை அழைத்துப் போனார்.

ஆனந்தனின் அன்னை செந்தாமரையை அழைத்துப்போனாள். செந்தாமரையின் தாய்க்குக் கண்ணைக் கட்டி விட்டது போன்ற வியப்பு. அவள் உள்ளம் பூரித்து மகிழ்ந்தது.

"அப்பாதான் ஆறுமுகம் சொன்ன வக்கீல்" என்பதையறிந்த மகனுக்குத் தந்தையின் பெருமை இமயத்தின் சிகரத்தை ஒத்து விளங்கியது. "அப்பா ஒரு லட்சியவாதி" என்ற நினைவும் அவர் மகன், தான் என்பதும் அவனுக்கு மேலும் மதிப்பை யளிப்பதாக யிருந்தன.

அவன் செந்தாமரையை அப்போதுதான் முதன் முறையாக முகம் கொடுத்து நோக்கினான். அவள் முகம் சிவந்தது. ஒரு முறை குறுநகை புரிந்து, தலையைக் கீழே கவிழ்த்துக் கொண்டாள்.

அன்று வக்கீல் வீட்டில் தடபுடலான விருந்து. அங்கே அன்பு வெள்ளம் ஓடியது. ஆனந்தன் செந்தாமரையைக் கடைக்கண்ணால் பார்த்தான். செந்தாமரையும் அவனை ஓரக் கண்ணால் பார்த்தாள். கண்கள் ஒன்றை ஒன்று சந்தித்து விட்ட பிறகு வெறும் வாய்ப் பேச்சுக்கு இடம் ஏது!

வட்ட மேஜை

குறை தீர வழி உண்டா?

நான் சென்ற 1951ம் வருடம் எத்தனையோ இன்னல்களுக் கிடையில் கோவைக்கு அருகில் உள்ள பெரியநாயக்கன்பாளையத்திலுள்ள ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயத்தில் காந்தி ஆதாரப் பயிற்சிச் சாலையில் சேர்ந்து ஆசிரியர் தொழிலுக்குப் பயின்று, 1953ம் வருடம் நடைபெற்ற சர்க்கார் பரீட்சையில் தேர்ச்சி பெற்று, செகண்டரி கிரேடு ஆசிரியராகி யுள்ளேன்.

பின்னர் பொள்ளாச்சியில், என் சொந்த ஊரில் 1953ம் வருஷம் ஜூன் மாதம் தனியாய் நடத்தப் பட்டு வந்த மானேஜ்மெண்டார் பள்ளியில் பணியாற்றியபின்னர் அங்கிருந்து விலகிப் பொள்ளாச்சி நகர சபைப் பள்ளிக்கு ஆசிரியர் பணிக்கு விண்ணப்பம் போட்டு முனிசிபல் சர்வீஸில் உழைக்கப் பிரியப்பட்டேன். மே மாதம் 7ந்தேதி விண்ணப்பம் போட்டு உத்தரவை எதிர்பார்த்தேன். எந்த விதமான தகவலும் தெரியாததின் பேரில் மறுபடியும் ஜூன் மாதம் 9ந் தேதி மற்றொரு மனு அனுப்பலானேன். அதற்கும் ஒருவித தகவலும் தெரியவில்லை. பின்னர் தகவல் அலுவலகத்துக்குச் சென்று அறிந்து வந்ததில் செகண்டரி கிரேட் படித்துப் பயிற்சி பெற்ற ஆசிரியருக்கு இடம் இருப்பதாகத் தெரியவில்லை என்றும் ஹையர் கிரேடு படித்த ஆசிரியருக்கு இடம் கிடைக்கலாம் என்ற செய்தி கிடைத்தது. உடனே குறைந்த பட்ச ஊதியத்தையாவது பெற்று நகர சபையில் ஆரம்ப ஆசிரியனாகப் பணியாற்றலாம் என்ற எண்ணத்தினாலும் என் வறுமையினாலும் மற்றுமொரு மனு தயாரித்து நகரசபை ஆணையாளருக்கு அனுப்பி வைத்தேன். அதற்கும் யாதொரு தகவலும் தெரியவில்லை.

இடையே சென்ற ஜூன் 25ந் தேதி செய்தித் தாளில் வந்த செய்தி என்னையும் என்னைப் போன்றுள்ள சகாக்களையும் திடுக்கிட வைத்தது. அதாவது ஆரம்ப ஆசிரியர்கள் இனிமேல் "வேலை தேடித் தரும் ஸ்தாபனம்" அதாவது, 'எம்ப்ளாய் மெண்ட் எக்ஸ்சேஞ்ச்' மூலமாகத்தான் தங்கள் ஆசிரியர் வேலையைப் பெறவேண்டுமென்பதாகும். இரண்டு வருட காலமும் ஆசிரியர் தொழிலில் பயின்று பட்டம்பெற்று தன் எதிர்காலம் சுபிட்சமாக இருக்கவேண்டும் என்று நினைக்கும் அப்பாவி ஆசிரியர் தொழிலுக்குக் கூடவா எம்ப்ளாய் மெண்ட் எக்சேஞ்ச் போக வேண்டும்!

பின்னர் ஆபீசுக்குச் சென்று விசாரித்ததில், "இன்னும் மேலிருந்து எந்தவிதமான தகவலும் வரவில்லை. நாங்கள் இது விஷயமாய் ஜில்லா கல்வி அதிகாரிக்கு எழுதி யுள்ளோம். அவ்விடமிருந்து தகவல் எங்களுக்கு வந்தவுடன் தான் ஆசிரியர் நியமனத்தை நாங்கள் தீர்மானிக்க முடியும்" என்று கூறி விட்டார்கள். பாவம் அவர்கள்தான் என்ன செய்ய முடியும்!

இந்த விஷயத்தில்தான் எதற்குக் குறை வைக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் கோவை சென்று என் பெயரையும் 'எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்சில்' பதிவு செய்து கொண்டு திரும்பி வந்தேன். தற்சமயம் பொள்ளாச்சி ஆரம்பப் பள்ளிகளில் ஆசிரியர்கள் தேவைப் படுகிறது. நானும் என்னைப் போன்றவர்கள் சிலரும் படித்துத் தேறித் தயாராய் இருக்கிறோம். ஆனால் இன்னும் இந்த ஒரு மாத காலமாக யாரையும் அந்த வேலைகளுக்கு நியமனம் செய்யவில்லை.

பள்ளிகளிலோ பிள்ளைகளுக்கு ஆசிரியரின்றித் தவிப்பு; இங்கு ஆசிரியர்களுக்குப் பிள்ளைகள் இன்றிக் கஷ்டம். என்ன செய்வது! பிச்சை எடுத்தும் பட்டினி என்னும் பழமொழியின் படியாகி விட்டது எங்கள் பிழைப்பு. இன்னும் இதே போல் எத்தனை நாள் கழியுமோ தெரியவில்லை!

பொள்ளாச்சி
5—7—54

ஒரு ஆசிரியன்

★

சர்வீஸ் கமிஷன்

படித்தவர்களுக்குச் சர்க்கார் வேலையை முன் வந்து அளிக்க முதல் படியாக இருப்பது சர்வீஸ் கமிஷன் காரியாலயம். அதே அலுவலகத்தார் நடத்தும் பரீட்சை விஷயமாய்ச் சந்தேகம் கேட்டால் பதில் போடுவதற்கு அவர்களுக்குக் கஷ்டமாயிருக்கிறது. நிற்க, 1953 சர்வீஸ் கமிஷன் பரீட்சைக்கு ஆஜரானவர்களில் எனது சகோதரனும் ஒருவன். தற்சமயம் இக்கட்டான நிலைமையில் தத்தளிப்போர்களில் எனது சகோதரனும் ஒருவன். சமீபத்தில் 1953-ல் ஸர்வீஸ் கமிஷன் நடத்திய பரீட்சையின் முடிவுகள் ஏப்ரல் மாதத்தில் வெளிவந்தது. அதுவும் சர்க்கார் கெஜட்டில் பிரசுரிக்கப் பட்டிருந்தது. அந்த முடிவுகள் சர்வீஸ் கமிஷன் பரீட்சைக்கு (1953) ஆஜரானவர்களின் சம்பந்தப் பட்ட முடிவுகள்தானா என்று தெரிந்து கொள்ள முடியவில்லை.

இதைத் தெரிந்து கொள்வதற்காக சர்வீஸ் கமிஷன் காரியாலயத்துக்குக் கடந்த 29-ம் தேதியன்று எழுதியதில் இதுவரை பதிலில்லை. அது விஷயம் தெரிந்து விட்டால் அந்த முடிவுகளின் விஷயமாக பாஸாகி, மேற்கொண்டு விஷயங்களில் கவனம் செலுத்தலாம். இல்லையெனில் என்னைப் போன்ற குமாஸ்தாவின் பிள்ளைகளாக வாழ்க்கை நடத்துபவர்களுக்கு விமோசனம் இல்லாமற் போய் விடும். அந்த முடிவுகளைப் பற்றிய விஷயம் தெரியாவிட்டால் மறுபடியும் 1954 அக்டோபரில் வைக்கப்போகும் பரீட்சைக்கு ரூ. 10 பணம் கட்டி ஆஜராக வேண்டிய நிலைமை ஏற்படுகிறது.

மணிமுத்தாறு
3—7—54

கே. ராமச்சந்திரன்

★

"திரையில் கல்யாணம்"

மேற்படி தலைப்பில் ஜூலை 4உ இதழில் வெளியான கடிதம் முற்றிலும் உண்மை. பல உத்தமப் பெண்களின் மனோவேதனையை அது பிரதிபலிக்கிறது. பொறுப்பும், கௌரவமும் உள்ளவர்கள் போராடி இந்த அநியாயத்தைத் திரையில் இனியாவது காட்டாமல் இருக்க முற்பட வேண்டுவது மிகவும் அவசியம். திரையில் தாலி கட்டியதை ஆதாரமாகக் கொண்டு ஒரு திரை நடிகன் அந்த நடிகையைத் தன் தேன்மொழியாளாகக் கூறி நீதிமன்றத்தில் வழக்கிட்டு அது நல்ல வேளையாகத் தோற்றது. சில காலத்துக்குமுன் நடந்த உண்மையான சம்பவம் இது.

வயது வந்த ஆண், பெண் இருபாலாரிடத்திலும் ஒழுக்கத்தை வளர்க்கச் செய்யப் பொறுப்புள்ளவர்கள் உழைக்கா விட்டால் நாடு

வெகு சீக்கிரம் அழியும். 'ஒழுக்கம் தவறி மாதர்கள் நடந்தார்கள். மோகத்தில் மூழ்கினார்கள். அதனால்தான் பிரான்சு ஹிட்லருக்கு அடிமையாயிற்று' என்று மார்ஷல் பெட்டேன் தன் 92வது வயதில் சொல்லி மரித்தான். இந்த நாடு காந்திய நாடு. நாம்தான் பெண் இனத்தைத் தேவியாகக் கொண்டாடுகிறோம். இதை யெல்லாம் நாசம் செய்யும் முறையில் சினிமாவில் ஆபாசங்கள் இருக்கலாமா!

கூனூர்
5-7-54 எஸ். ஆர். சுப்பிரமணியன்

★

வேலையில்லாத் திண்டாட்டம்

'எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்சில்'
எந்தன்பேரும் இருக்குது.
இரண்டு வருடமாச்சுது
'இண்டர்வ்யூ'வும் வருகுது;
என்னபயன் அதனாலே?
எல்லாம் வீணாய்ப் போகுது!

என்று ஒரு கவிதையே பாடி விடலாம், வேலையில்லாமல் நாங்கள் படும் பாட்டை. படித்தோம்; மண்டையில் ஏறாத கணிதத்தை எப்படியோ மூளையில் ஏற்றினோம்; சன்னை தரும் சரித்திரத்தைச் சலியாது கற்றோம்; இலக்கணத்தை இசைந்துபடித்தோம்; அயலான் மொழியையும் அல்லும் பகலும் உருப் போட்டோம். இவ்வளவு கண்டங்களைத் தாண்டிப் பரீட்சை என்னும் அரக்கனையும் வென்று ஒரு வழியாக எஸ். எஸ். எல். ஸி.யில் தேர்வு பெற்றோம். என்ன பயன்! எங்கே வேலை கிடைக்கிறது! எவர் வேலை தந்து ஆதரிக்கின்றனர்! இந்த அழகில் "வேலை தேடித் தரும் ஸ்தாபனத்தார்" வேலை காலியுள்ள காரியாலயங்களுக்கு எங்களை நேரில் அனுப்பும் போது அதற்கு உண்டான பிரயாணச் செலவும் எங்களைச் சேர்ந்தது. அப்படியாவது ஒரு இடத்திலாவது வேலை கிடைக்கிறதா, கிடையாது. இந்நிலையில் நாங்கள் மேன் மேலும் இம்மாதிரி வேலை தேடுவதற்கே பணம் செலவழிக்க வேண்டுமென்றால் பணத்துக்கு எங்கே போவது!

பெண்களுக்கு ஆதரவு தரும் காரியாலயங்களிலேயே—பெண்களுக் கென்று ஏற்பட்டுள்ள ஸ்தாபனங்களிலேயே கூடப் பெண்களுக்கு வேலை தர மறுக்கின்றனர். 'கஸ்தூரி பா ஆஸ்பத்திரிக்கு' ஒரு சமயம் 'இண்டர்வ்யூ'க்குச் சென்றிருந்தோம். முடிவில் அவர்கள் என்ன கூறினார்கள் தெரியுமா! 'பெண்கள் வேலைக்குத் தேவையில்லை; ஆண்கள் தான் வேண்டும்' என்று கூறி விட்டார்கள். வேலை தேடிச் சென்றவர்கள் பெண்கள் நாங்கள் ஐவர்தாம். ஆண்கள் ஒருவரும் வர வில்லை. பெண்கள் வேலை செய்ய உகந்த இடத்திலேயே இப்படி யென்றால் இதை, விந்தையிலும் விந்தை என்றுதானே சொல்ல வேண்டும்!

"நாம் ஏன் படித்தோம்!" என்று ஒரோரு சமயம் மனம் வெறுப்படைகிறது. இவ்வளவு படித்து இப்படி அவதி யுறுவதை விட வேறு ஏதாகிலும் கைத்தொழில் கற்றிருந்தாலும் ஆண்களும் பெண்களும் யாரா யிருந்தாலும் இன்று வேலைக்காகப் பலப் பல இடங்களைத் தேடி அலையும் அவல நிலை ஏற்பட்டிராதல்லவா!

சென்னை
7-7-54 டி. ராஜேஸ்வரி



மனமும் மணமும்

கு. ப. சேது அம்மாள்

"ஜயராமன் இருக்கிறானா?" என்று வாசலில் நின்ற சீதாவைக் கேட்டுக் கொண்டே வந்தான் ரங்கநாதன்.

"இருக்கிறான்" என்று சீதா சொன்னதும் மாடிக்குச் சென்றான் ரங்கநாதன்.

பத்திரிகையைப் படித்துக் கொண்டு அங்கே உட்கார்ந்திருந்த ஜயராமனிடம் நெருங்கி அவன் கையிலிருந்த பத்திரிகையை எடுத்துக் கொண்டு, ஜோபியிலிருந்த கடிதத்தை எடுத்து அவனிடம் கொடுத்தான்.

கடித உரையை ஒரு தரத்துக்கு இரண்டு தரமாகத் திருப்பிப் பார்த்தான் ஜயராமன்.

ரேவதியின் கையெழுத்து! ரங்கநாதன் விலாசத்துக்கு எழுதுவானேன் என்று கலவரத்துடன் கடிதத்தை உடைத்துப் பார்த்தான். கடிதத்தின்மீது இன்னொரு முறை ஏறி இறங்கியது அவன் பார்வை. முகம் பொலிவிழந்து சுண்டி விட்டதைக் கண்ட ரங்கநாதன் "என்ன எழுதி இருக்கிறாள்?" என்று கேட்டான்.

கடிதத்தை நண்பன் கையில் கொடுத்து விட்டுச் சிந்தனையில் ஆழ்ந்தான் ஜயராமன். கடிதத்தின் வாசகத்தை எழுதிய ரேவதியின் எழிலுருவம் அவன் கண் முன் நின்றது!

கடிதத்தைப் படித்து முடித்த ரங்கநாதன், "வீட்டு விலாசத்துக்கு எழுதினால் உன் தாயார் கையில் அகப்படக் கூடும்; அகப்பட்டால் உனக்குக் கிடைக்காது என்றுதான் என் விலாசத்துக்கு எழுதி இருக்கிறாள். இப்பொழுது என்ன செய்யப் போகிறாய் ஜயராம்?"

"இனிமேல்தான் யோசிக்க வேண்டும்."

"எனக்குத் தோன்றிய யோசனையைச் சொல்லி விட்டுப் போகிறேன். அதையும் ஆலோசனை பண்ணி முடிவு செய். அம்மாவிடம் நயமாகக் கேட்டுப் பார். சம்மதிக்கவில்லையானால் இருக்கவே இருக்கிறது பதிவுத் திருமணம்! கொஞ்சம் நான் போனால் தன்னாலே சரியாக வந்துவிடுவார்கள்! நான் வரட்டுமா, அவசர வேலை கொஞ்சமிருக்கிறது; மாலை சந்திப்போம்" என்று கூறி நண்பனிடம் விடை பெற்றுச் சென்றான் ரங்கநாதன்.

சாய்மானத்தில் சாய்ந்து கொண்டு யோசனையில் ஆழ்ந்தான் ஜயராமன்.

"ஏண்டா, விடுமுறை நாளானால் காலாகாலத்தில் சாப்பிடக் கூடாதா...?" என்று கேட்டவாறு அங்கே வந்தாள் அவன் அம்மா ஜானகி அம்மாள். பிள்ளை எங்கேயோ லயித்த நிலையில் தான் சொன்னதைக் காதில் வாங்காமலிருந்ததைக் கண்டு "ஏனிப்படி பிரம்மமாக உட்கார்ந்திருக்கிறாய்?" என்று அருகில் வந்து கேட்டாள்.

அவன் கையில் கடிதம் இருப்பதைக் கண்டு "யாருடைய கடிதாசி?" என்று அதைக் கையிலெடுத்தாள்.

"ரேவதி எழுதி யிருக்கிறாள்" என்று சொன்னான் ஜயராமன்.

கடிதம் முழுவதையும் படித்துவிட்டு, "நன்றாக இருக்கிறது" என்று கடிதத்தை அவன் மடியில் போட்டாள் ஜானகி அம்மாள்.

"எது நன்றாக இருக்கிறது என்கிறாய்?"

"அவர்களுடைய கேவலமான பிழைப்பைத்தான் சொல்லுகிறேன்......"

"அவர்கள் பிழைப்பு கிடந்து விட்டுப் போகட்டும்; ரேவதி விஷயமாக உன் அபிப்பிராயம் என்ன?"

"எதுக்கு, உனக்கு அவளைக் கல்யாணம் பண்ணிக்கவா?"

"ஏன், கூடாதா?"

"ஐயோ, போதுமடா அப்பா! உங்கள் அத்தைகள் வகையறு சம்பந்தமே நமக்கு வேண்டாம், வேண்டாம்!......"

"காரணம்?"

"அதெல்லாம் வெளிப்படையாகச் சொல்லப் படாது. நான் பொல்லாதவள், என் பிள்ளைக்கு வாழ்க்கைப்பட்டு......"

"இந்த உதவாக்கரை சமாசாரங்களையும், மனஸ்தாபங்களையும் தூர விலக்கி விட்டு மனுஷத்தனமாக நடந்து கொண்டால் எல்லாருக்கும் நல்லது......"

"இந்த உபதேசத்தை உன் அத்தைக்குப் போய்ப் பண்ணு!"

"அவள் யதார்த்தவாதி. அதனால் அவளைக் கண்டால் உனக்குப் பிடிக்காது. அது இப்பொழுதைய சமாசாரத்துக்குப் பிரதானமில்லை. பெண் நல்லமாதிரி. என் மனசுக்குப் பிடித்திருக்கிறது."

"ஏண்டா வரவர உன் புத்தி இப்படி..."

வெற்றிலைப் பொட்டலத்துடன் அங்கே வந்த வரதய்யர் "என்ன, என்ன சமாசாரம்?" என்று விசாரித்தார்.

"ஒன்றுமில்லை. உங்கள் ட்ருமான் ரேவதி கடிதாசு எழுதி இருக்கிறான்."

"என்ன ?"

"ரேவதியின் படிப்புக்காக அவள் தகப்பனார் அனந்த கிருஷ்ணய்யரிடம் நிலத்தை அடமானம் வைத்துப் பணம் வாங்கினாராம். அது இப்பொழுது வட்டிக்கு மேல் வட்டியாக வளர்ந்து சொத்தின் பெறுமானத்துக்கு மேலே போய்விட்டதாம். நிலத்தை வாங்குவாரில்லை. பணம் கொடுக்க முடியவில்லை. அனந்த கிருஷ்ணய்யரிடம் வந்து 'உம் பெண்ணைக் கொடு' என்கிறாராம்."

"அட பாவமே !"

"பாவமாவது புண்ணியமாவது! தன் ஸ்திதி தெரியாமல் நிலத்தை வைத்து, அப்படியாவது படிக்க வைக்காவிட்டால் என்ன ?"

"அதையெல்லாம் நாம் எதற்கு இப்பொழுது கேட்க வேண்டும் ?"

"முழுக்கக் கேளுங்கள். நம் குழந்தைக்கு அவளைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள வேணுமென்று இருக்கு......"

"அது அவன்பாடு, உன்பாடு, அவர்கள் பாடு. ஆனால் ஒன்று நிச்சயம். பணம் இல்லாவிட்டால் 'பெண்ணைக் கொடு' என்கிற அந்தக் கிழக்கோட்டானுக்கு அந்தக் குழந்தையைப் பலி கொடுக்க முடியாது. என் வயிற்றில் பிறந்தால் என்ன, என் தங்கை வயிற்றில் பிறந்தால் என்ன ?" என்று மனம் குமுறினார் வரதய்யர்.

"சொல்லுவது புரியவே இல்லை எனக்கு !" என்று விழித்தாள் ஜானகி அம்மாள்.

"புரியும்படியாகச்சொல்லுகிறேன். அந்த நாலாயிரம் ரூபாய் சொச்சத்தைக் கொடுத்துக் கடனை ஒருமாதிரி அடைத்து......"

அவர் வார்த்தையை முடிக்கு முன்பே, ஜானகி அம்மாள் ஆத்திரம்பொங்க, "அதைத் திருப்பி அவர்களிடமிருந்து எப்படி வாங்குகிறது?" என்று கடுமையாகச் சீறினாள்.

"அந்த யோசனை இருக்கட்டும், அப்புறம்."

"எக்கேடும் கெட்டு ஒழியுங்கள். வீடு உருப்படப் போறதில்லை" என்று இரைந்து விட்டுக் கோபாவேசத்துடன் கீழே சென்றாள் ஜானகி அம்மாள்.

அவள் அங்கிருந்து நகர்ந்ததும் வரதய்யர் மகனிடம் வந்து, "என்னடா அது? கடிதத்தை இங்கே கொண்டு வா, பார்க்கலாம்!" என்று கடிதத்தை வாங்கிப் படித்து, சிறிது நேரம் யோசனையில் ஆழ்ந்து விட்டு, "சரி, உங்கம்மா குணம் தெரிந்ததுதான். வாயால் 'லொட லொட லொட'வென்று வார்த்தைகளைக் கொட்டி விடுவாளே தவிர மனத்தில் ஒன்றும் களங்கம் கிடையாது, அதனாலே ஒன்று செய்..." என்று கூறி விட்டுக் கொஞ்ச நேரம் யோசனையில் ஆழ்ந்தார்.

"என்ன?" என்பது போல ஆச்சரியத்துடன் பார்த்தான் ஜயராமன்.

"இன்றைக் கென்ன தேதி பதினேழா. இருபத்திரெண்டாம் தேதி தொகையை அவருக்குக் கொடுத்து விடலாம். அதைப் பற்றி நான் விவரம் கேட்டு நாணுவுக்கு எழுதுகிறேன் இன்று. இருபத்தோராம் தேதி ராத்திரி புறப்பட்டு விளாங்குடிக்குப் போ. நாணுவிடம் சொல்லி-நானும் எழுதுகிறேன்-கோபு சாஸ்திரிகளிடம் ஒரு முகூர்த்தம் பார்க்கச் சொல்லு. நாணு, ஜகதம், ரேவதி மூவரை மாத்திரம் அழைத்துக் கொண்டு ரங்கநாதன் வீட்டில் இறங்கு. இங்கே நான் ஏற்பாடெல்லாம் பண்ணி வைக்கிறேன். சரியாக முகூர்த்த நேரத்துக்கு ரிஜிஸ்டர் ஆபீஸுக்குப் போறது, பதிவு செய்து கொண்டு லட்சணமாக அகத்துக்கு வந்து விடுகிறது. அம்மா மனசிலே ஆயிரமிருந்தாலும், மாலையும் கழுத்துமாகப் பிள்ளை நாட்டுப் பெண்ணுடன் உள்ளே நுழைந்ததும் பறக்கப் பறக்க ஆரத்தி சுத்திக் கொட்டி அழைத்து விட்டு ஒரு மூச்சு சண்டை பிடிப்பாள். அதோடு சரி! ரேவதியோ 'தக்காருக்கு தக்கபடி' நடந்து கொள்ளும் பெண். இந்தக் கடிதாசு எழுதி நம்மைக் கவர்ந்தது போல, மாமியாருக்கு நல்ல தனமாக நடந்து கொண்டு அவளை நல்லவளாக்கி விடுவாள். இதுதான் சரி !" என்று அநாயாசமாக யோசனை செய்து முடித்து விட்டு வெற்றிலைக் கட்டைப் பிரித்து வெற்றிலை போட்டுக்கொண்டார் வரதய்யர்!



இருபத்திரண்டாம்தேதி ஓடி வந்து நின்றது !

விளாங்குடியில் தன் அத்தை வீட்டில் ஜயராமன் ரேவதியுடன் பேசிக் கொண்டிருந்தான். "உன் யோசனை எனக்கு உசிதமாகப் படவில்லை, ரேவதி !" என்று கலவரத்துடன் கூறினான் ஜயராமன்.

"நீங்கள் தவறாக நினைக்கிறீர்கள். அப்புறம் அவர் மனசை இளக்குவதை விட முன்னாடி இளக்கி விடுவதுதான் உசிதம், அதுதான் நியாயம். என் வாழ்வைப்

பரிமளிக்க வைக்கும் அன்புக்குரிய தங்களைப் பெற்ற தாயில்லையோ அவர்?''

''ரேவதி...!''

''தாங்கள் கூறப் போவதை நான் அறிவேன். மாமாவின் ஆக்ஞைப்படி செய்யலாம். அம்மா மனசில் கபடு இல்லை என்பதெல்லாம் சரி. ஆனால்... சமயம் நேர்ந்த போதெல்லாம்... 'திருட்டுத் தாலி கட்டிக் கொண்டு வந்தவள்தானே, நீ?' என்று படக்கென்று கேட்பார். அது எதற்கு? நல்லதைச் செய்து நடு வழியில் செல்ல வேண்டும். நம் விருப்பத்தை மாமா அங்கீகரிப்பது போல, அம்மாமியும் சந்தோஷமாக ஏற்றுக் கொள்ள வேண்டும். ஏற்றுக் கொள்ளும் வகையில் கடிதம் எழுதுகிறேன். பார்ப்போம். நான் பாக்கியசாலியானால் அவர்மனம்மாறட்டும்.''

''இல்லாவிட்டால்?'' என்று இடைமறித்துக் கேட்டான்.

''அதை இப்பொழுது நினைப்பானேன்?''

''உயிருக்குத் துணிந்து விட்டாய்! அது தானே?'' என்று ரேவதியைக் கேட்டான்.

ரேவதியின் கண்கள் ஜயராமனை நெடு நோக்காக நோக்கின. கண்ணீர் மல்க, ''ரேவதி...!'' என்ற தொனியுடன் ஜயராமன் நிறுத்தினான். கண்கள் பேசின. உள்ளங்கள் உறவாடின. உடல்கள் விதிர்த்தன.

அந்த விசித்திர வேதனையிலிருந்து முன்னதாக உதறிக் கொண்ட ரேவதி, ''கலங்காதீர்கள். நம் அன்பு சத்தியமாயிருக்கும் பட்சத்தில் உங்கள் தாயார் மனம் மலர்ந்து என்னைத் தம் குமாரனுக்குப் பெற்றுக் கொள்ளட்டும் என்று ஈசுவரன் மீது பாரத்தைப் போட்டு எழுதுகிறேன்'' என்று கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

இருபத்திரண்டாம் தேதி பொழுது விடிந்தது. வரதய்யர் தாம் நிச்சயித்தபடி நாராயணசுவாமி அய்யர் வாங்கின கடன் தொகை முழுவதற்கும் 'செக்' அனுப்பி விவரமான கடிதமும் எழுதினார்.

சந்தோஷ மிகுதியால் நாராயணஸ்வாமி அய்யர் கண்களில் நீர் நிரம்பியது. சங்கதி தெரிந்த ஜகதாம்பாளும், ''எல்லாருக்கும் தமையன், எனக்கும் தமையனா என்ன? நான்தான் அப்பவே கேளுங்கள், கேளுங்கள் என்று படித்துப் படித்துச் சொன்னேன். ஒருத்தரும் கேட்கவில்லை!''

''சரிதாண்டி, எல்லாம் இப்பொழுது சொல்லுவாய், நீ!'' என்று சமாளித்துக் கொண்டு உள்ளே சென்றார் அய்யர்.

''பழிகாரன் கொஞ்சம்கூட ஈவு இரக்கமில்லாமல், மனம் துணிந்து 'எப்படித்தான் கேட்டானோ, பெண்ணே......''

''பணக் கொழுப்பு கொழுத்துக் கிடக்கிற போது, அங்கே, ஈவு ஏது, இரக்கமேதடீ!'' என்று கூறிக்கொண்டே 'செக்'கைப் பெட்டியில் வைத்தார் அய்யர்.

''மூன்றடி அவன் மூஞ்சியில் எறிந்து விட்டு வாருங்கள் பணத்தை'' என்று சொன்னாள் ஜகதாம்பாள்.

''அப்பா'' என்று அழைத்தாள் ரேவதி.

''என்னம்மா?'' என்று கேட்டுக் கொண்டே உள்ளே சென்றார் அய்யர்.

''பணம் இருக்கட்டும் அப்பா, நான் அம்மாமிக்குக் கடிதாசு எழுதி இருக்கிறேன். பதில் வரட்டும். அப்புறம் கொடுக்கலாம். கெடுதான் முப்பத்தொரு தேதி வரைக்கும் இருக்கிறதே?'' என்று தணிந்த குரலில் சொன்னாள் ரேவதி.

அய்யர் திடுக்கிட்டார். திகிலுடன், ''என்ன எழுதி இருக்கிறாய்?'' என்று கேட்டார்.

''அப்பா, நான் காலமெல்லாம் அம்மாமியிடம் காலம் தள்ள வேண்டும். அதுவே இல்லை, என்றாலும், அவள் பெற்ற பிள்ளையை அவளறியாமல் கல்யாணம் செய்து கொள்ள எனக்கு இஷ்டமில்லை. அவள் 'சம்மதம்' என்று எழுதட்டும்.''

''அடி அதிகப் பிரசங்கி, உன்னை யார் எழுதச் சொன்னார்கள்?''

ரேவதி நிமிர்ந்து பார்த்து ''யாரா? அந்தக் கடிதம் யார் எழுதச் சொல்லி எழுதினேன்? அது நல்லதாக மாறினபடி இதுமாறினால் சந்தோஷம். இல்லை, கிழவன்தான் பிராப்தியென்று வாழ்க்கைப் படுகிறேன்......''

தலையிலடித்துக் கொண்டார் அய்யர்.

ரேவதியின் மனம் வேதனைப்பட்டது. ''அப்பா, நேர்மையும், கௌரவமும்தான் மனுஷனுடைய தன்மைக்குப்பூஷணம். இது உங்களுக்குத்தெரியாததன்று......'' என்று ஆரம்பித்தாள் ரேவதி.

கோப மேலிட்டால் அங்கிருந்து வெளியே சென்றார் அய்யர். கோபம் அடங்கிய பிறகு எது சரி என்று ஆராயத்தொடங்கினார்.

ரேவதியும் அதைத் தான் நினைத்தாள்!



குடந்தைத் திருமணம்

கும்பகோணம் ஸ்ரீ ஆர். சுப்பிரமணிய ஐயரின் குமாரத்தி செல்வி ஜானகிக்கும், பம்பாய் ஸிந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனியைச் சேர்ந்த ஸ்ரீ பாலசுப்பிரமணியத்துக்கும் சமீபத்தில் சென்னை நகரில் சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது. திருமணத்துக்குச் சென்னை நகரில் உள்ள பல பிரமுகர்கள் விஜயம் செய்து சிறப்பித்தனர். வாழ்க, மணமக்கள்!

நடந்தது ஒன்றுமே அவளுக்குத் தெரியாது. அவள் பாட்டில் பொழுதைப் போக்கிக் கொண்டு ஒரு கவலையுமின்றி ஸிம்பதியாகத் தன் வேலையைக் கவனித்துக் கொண்டிருந்தாள் ஜானகி அம்மாள்!

வாசலில் தயிர் வாங்கச் சென்ற ஸீதா, தபால்காரன் கொடுத்த கடிதத்துடன் உள்ளே வந்தாள். பிரித்துப் படித்துவிட்டு, சந்தோஷத்தால் குரல் தழுதழுக்க "அம்மா, ரேவதி உனக்குக் கடிதம் எழுதி இருக்கிறாள்" என்று சொன்னாள்.

கவலையில்லாமல் காராப்பூந்தியை மென்று கொண்டு, "என்னவாம்? படி பார்ப்போம்" என்றாள் ஜானகி அம்மாள்.

அம்மாமி அவர்களுக்கு, அனேக நமஸ்காரம்.

நான் அம்மாஞ்சிக்கு எழுதிய கடிதத்தை நீங்கள், மாமா, எல்லோரும் பார்த்து யோசித்தீர்கள் என்றும், என்னை மருமகளாக ஏற்பதில் தாங்கள் சம்மதப்படவில்லை என்றும் தெரிகிறது. நான் தங்களிடம் நாலு வருஷங்களாக இருந்து பழகி இருக்கிறேன். தங்கள் மனம் எனக்குத் தெரியும். மாமா அவர்கள் வேறுவிதமாக யோசனை சொன்னார்: என்னையும், என் பெற்றோரையும் அழைத்துக் கொண்டு அங்கு வந்து, சத்தப்படாமல் பதிவுக் காரியாலயத்தில் பதிவுத் திருமணம் செய்வித்து விட்டுக்கழைத்து வந்து விட்டால் அப்புறம் தாங்கள் மனம் திரும்பி விடுவீர்களாம்! இந்த உத்தேசத்துடன் அம்மாஞ்சி இங்கு வந்து நாலு நாட்களாகின்றன.

அம்மாமி, நான் கைப்பிடிக்கப்போகும் கணவன் தங்கள் மகன், அவரைப் பெற்ற தாய் தாங்கள். தாங்களறியாமல் தங்கள் குமாரனை மணக்க நான் இஷ்டப்படவில்லை. இஷ்டப் பட்டாலும் அது தர்மமன்று. மாமி, அவர்கள் சொல்வது ஒரு வகையில் நியாயமாக இருந்தாலும், நான் அதை விரும்பவில்லை. தங்கள் விருப்பத்துக்கு மாறாகத் தங்கள் குமாரனை மணந்து நான் அடையும் சந்தோஷத்தை விட, ஏற்கெனவே நிச்சயிக்கப்பட்ட இடத்தில் வாழ்க்கைப்பட்டுப் பெற்றோர்களுடைய கௌரவத்தை நிலைநிறுத்திவிட்டு, வாழ்விலிருந்து தப்பிச் சென்று விடுவேன்!

அம்மாமி, நான் நல்ல பெண் என்று தங்கள் மனம் ஒப்பி, சந்தோஷத்தோடு என்னை மருமகளாக ஏற்றுக் கொண்டால், ஏற்றுக் கொள்ளுங்கள். இல்லையானால்—அடுத்த ஜன்மத்திலாவது தங்கள் குமாரனை அடையப் பிரார்த்தனை செய்து கொண்டு இவ்வாழ்க்கையைத் துறப்பேன்.

இது என் அபிலாஷை. நமஸ்காரம்,

ரேவதி.

கண்ணீர் மல்க அந்தக் கடிதத்தைப் படித்து முடித்துவிட்டுத் தலைநிமிர்ந்தாள் ஸீதா.

"'உன் கடிதாசு கிடைத்தது. கவலைப்பட வேண்டாம். எல்லோருமாகப் புறப்பட்டு வரும்படி அம்மா எழுதச் சொன்னாள்' என்று ஒரு கடிதம் எழுதிப் போடு, அவளுக்கு" என்று உணர்ச்சி பொங்கக் கூறி விட்டுக் கண்களைத் துடைத்து விட்டுக் கொண்டாள் ஜானகி அம்மாள்.

கடிதத்தைப் படித்ததும் நொடி நேரத்தில் தன் தாயின் மனம் இளகிய விசித்திரத்தைக் கண்டு ஸ்தம்பித்து நின்றாள் ஸீதா!



யோகாசன சிகிச்சை

வி. என். குமாரசாமி

26.

ஆஸ்துமாவுக்கு முதல் பயிற்சி

ஆஸ்துமாவுக்கு யோகாசனப் பயிற்சிகள் தான் சிறந்தவை என்பதைப் பல கட்டுரைகளின் வாயிலாக அலசி, ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வந்துள்ளோம். இனி ஆஸ்துமாவுக்கு வேண்டிய ஆசனப் பயிற்சிகளும், பிராணாயமப் பயிற்சிகளும், ஆகார வகைகளும் வெளிவரும். ஆஸ்துமாவுக்குப் பல ஆசனங்கள் உண்டு. அவை வரிசைக் கிரமமாய்த்தான் வெளிவரும். அவை எல்லாமுமே ஆஸ்துமாவுக்கு எடுத்தது. ஆயினும், வயது, நோயின் நிலைமைக்குத் தக்க மாறுபடும். அவை பின் விளக்கப்படும். ஆசனங்களைச் செய்யும் விதங்கள் வெளியிடுவதுடன், அந்தந்த ஆசனம் எவ்வாறு ஆஸ்துமாவைக் குணப்படுத்த முடிகிறது என்பதைக் காரண காரியங்களுடன் கூடுமானவரை வாசகர்கள் புரிந்து கொள்ளும் அளவுக்கு விளக்க முயற்சிக்கிறேன். ஆசன அன்பர்களுக்கு உணவும் முக்கியமானதினால் அதைச் சரியானபடி அறிந்து அனுசரித்தால்தான் ஆசனங்களினால் உண்டாகும் பலனைப் பூரணமாய் அனுபவிக்க முடியும். ஆதலின் இடையிடையில் வழக்கமாய் உணவுக் கட்டுரைகளும் வரும்.

இப்பொழுது ஆஸ்துமா சிகிச்சைக்கு முதல் ஆசனப் பயிற்சியாகிய புஜங்காசனத்தை எடுத்துக் கொள்ளுவோம்.

புஜங்கம் என்றால் சம்ஸ்கிருதத்தில் பாம்பு என்று பொருள். இதற்குச் சர்ப்பாசனம் என்ற மற்றொரு பெயரும் உண்டு. புஜங்காசனம் செய்யும்போது நல்ல பாம்பு படம் எடுத்து ஆடினாற் போல் இருப்பதால் இதற்கு இப் பெயர் வந்தது.

செய்யும் விதம்

முதல்படி: சுத்தமான விரிப்பை மேடு பள்ளமற்ற சமதரையில் விரிக்கவும். குப்புறப் படுக்கவும். குதிகால்கள் இரண்டும் சேர்ந்திருக்க வேண்டும். உள்ளங் கைகள் இரண்டையும் தோள்களுக்கு அடியில் விரிப்பில் படியும்படி விரல்களை நீட்டிச் சேர்த்து வைத்துக் கொள்ளவும். விரிப்பில் முகவாய்க் கட்டையை வைத்துக் கொள்ளவும். இப்பொழுது புஜங்காசனத்தைச் செய்யத் தயாராய் இருக்கிறீர்கள். இதை முதல் சித்திரத்தில் பார்த்துத் தெரிந்து கொள்ளவும்.

சுவாசத்தை நிதானமாய் இழுத்தவாறே, கைகளை ஊன்றிக் கொண்டு, தலை, தோள்கள் இவைகளைத் தூக்கி இரண்டாவது சித்திரத்திலுள்ளபடி வளைக்கவும். முழங்கை வளைந்திருப்பதைக் கவனியுங்கள். தொப்புளும், அடி வயிறும் விரிப்பில் முட்டியிருக்க வேண்டும். வயிற்றின் மேற்பாகத்தை விறைப்பாய் வைத்துக் கொள்ளக் கூடாது. இறக்கமாய் விட்டுவிட வேண்டும். ஆரம்ப சாதகர்கள் மூச்சைச் சௌகரியப்படி விடவும் வாங்கவும் செய்யலாம். சிறிது பழக்கமான பின் மூச்சை விடாமல் அப்படியே நிறுத்தலாம். ஐந்து முதல் பத்து விநாடி இந் நிலையில் இருந்து பின் மூச்சை விட்டவாறு தலையையும் தோள்களையும் இறக்கி முதல் சித்திரத்திலுள்ளபடி புஜங்காசனத்தின் ஆரம்ப நிலைக்கு வரவும்.

இவ்வாறு செய்தால் ஒரு தடவை புஜங்காசனம் செய்ததாகும். ஆரம்பத்தில் மூன்று தடவையும், பின் ஆறு தடவையும் செய்யலாம். ஒவ்வொரு தடவைக்கும் இடையில் மூன்று அல்லது ஐந்து விநாடி இளைப்பாறலாம்.

இரண்டாவது படி: முதல் சித்திரத்தில் இருப்பது போலவே தயாராகவும், பின் தலை, தோள்கள் நன்கு மேல் தூக்கிக் கைகளை வளைக்காமல் நேராய் நிமிர்த்தி வைத்துக் கொண்டு, முதுகைப் பின்புறம் நன்கு வளைக்கவும். இதிலும் முன் சொன்னபடி மூச்சைக் கையாளவும். இதையும் முதலில் மூன்று தடவையும், பின் ஆறு தடவையும் செய்யலாம். ஒவ்வொரு தடவைக்கும் இடையில் முதல் சித்திர நிலையில் இருந்தவாறு மூன்று முதல் ஐந்து விநாடி அல்லது அவர்களுக்கு வேண்டிய நேரம் ஓய்வு எடுத்துக் கொள்ளலாம். ஓய்வு எடுக்கும்போது மூச்சுக் கட்டுப்பாடு ஏதுமின்றிச் சாதாரணமாய் இருக்க வேண்டியது.

முதல் படியைச் சரிவரச் செய்ய வந்தபின் இரண்டாவது படியைச் செய்யலாம். இரண்டையும் செய்பவர்கள் முதல்படி மூன்று தடவையும், இரண்டாவதுபடி மூன்று தடவையும் செய்யலாம்.

இந்த ஆசனம் பயிலும்போது அவரவர்களின் தேக நிலை வயதுக்குத்தக்க சில தவறுகள் நேரிடுவதுண்டு. எடுத்ததும் எல்லோருக்கும் சித்திரத்திலுள்ளபடி செய்ய வந்து விடாது.

புஜங்காசனம்

சிலருக்குத் தலையை மேலே தூக்கிப் பார்க்கும் போது உடல் வளையாமல் ஒரே பலகை மாதிரி தூக்கும். முதுகெலும்பு வளையாததே இதற்குக் காரணம். இவர்கள் முதுகெலும்பில் கவனம் செலுத்தி நடு முதுகைத் தாழ்த்தி, அடி வயிறு, தொப்புள் தரையில் ஒட்டும்படி முயற்சி செய்ய வேண்டும். முயற்சியுடன் பழகி வந்தால் சில நாட்களில் மேற்படி குறை தீரும்.

சிலருக்குக் கழுத்தைப் பின்பக்கம் வளைத்து நன்றாய்ப் பார்க்க முடியாது. வயது அதிகமானவர்களுக்கு முதுகெலும்பின் முற்றலின் காரணமாகவும் இவ்வாறு ஆகும். சிலருக்குப் பின்கழுத்துச் சதை கனத்து, சரிவரச் செய்ய வராது. இவர்கள் கூடுமானவரை கழுத்தை வளைத்துச் செய்ய வேண்டியதே. சிறு பிள்ளைகளுக்கு இம்மாதிரி குறைகளெல்லாம் இல்லாமல் நன்றாகச் செய்ய வரும்.

ஆரம்பசாதகர்கள் சிலருக்குக் கழுத்து நரம்புகள் முதலில் வலிக்கும். சிலருக்குக் கைகள் நடுங்கும். இவைகளெல்லாம் பழகப் பழகச் சரியாய் விடும். சிலருக்குத் தலையை நிமிர்த்திப் பார்க்கும் போது வாய் ஆவென்று திறந்து விடும். சிலர் வாயின் வழியாக மூச்சை விடுவார்கள். இதில் சிறிது கவனம் செலுத்தி வாய் மூடிக் கொள்ள வேண்டும். வாய் வழியே மூச்சு விடக் கூடாது. மூக்கின் வழியே தான் எப்பொழுதும் மூச்சை இழுக்கவும் விடவும் வேண்டும்.

இந்த ஆசனத்தை ஆஸ்துமாக்காரர்கள் மட்டுமல்ல, எல்லோரும் செய்யலாம்.

மூக்கின் வழியே சுவாசித்தால் காற்றிலுள்ள தூசுகளையும் தும்புகளையும் மூக்கிலுள்ள சிறு மயிர்கள் வடிகட்டி உள்ளே அனுப்பும். வாயின்வழியே சுவாசித்தால் காற்று வடி கட்டப்படாமல் போய் விடும். அதனால் தான் இயற்கையானது நமக்கு இத்தனை நீளமான மூக்கும், ஒன்று போதாதென்று இரண்டு துவாரங்களையும் ஏற்படுத்திச் அவைகளைச் சுற்றி, சிறு பொடி மயிர்களை உண்டாக்கி யிருக்கிறது. மூக்கு சுவாசிக்கவும், வாய் சாப்பிடவும் பேசவும்தான் உபயோகிக்க வேண்டும்.

யோக ஆசனங்களில் எதை எடுத்துக் கொண்டாலும் முதுகெலும்பை எந்தப் பக்கமாகவாவது வளைப்பதாகத்தான் இருக்கும். முதுகெலும்பு அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாகும். முதுகெலும்பை அவ்வளவு முக்கியமாய் யோகிகள் ஏன் எடுத்துக் கொண்டார்கள் என்றால் அதன் வழியாகத் தான் உடலுக்கு வேண்டிய நரம்புகள் மூளையிலிருந்து புறப்பட்டு வந்து அந்தந்த பாகங்களுக்கு வேண்டிய நரம்புகள் அங்கங்கு பிரிகின்றன. இந்த முதுகெலும்புகள் மோதிரங்கள் கோத்தாற் போல வரிசையாய்ச் சிறு சிறு எலும்புத் துண்டுகள் அடுக்காய் இருக்கின்றன. 31 எலும்பு வளையங்கள் கொண்டவை முதுகெலும்பு. இதற்கு 'மேரு தண்டம்' என்றும் சொல்லுவதுண்டு. இந்த வளையங்கள் வழியாகத்தான் மூளையிலிருந்து வரும் நரம்புகள் வருகின்றன. பன்னிரண்டு வித நரம்புக் கூட்டங்கள் மூளையிலிருந்து இதன் வழியாக வந்து பிரிகின்றன. இதில் பத்தாவது நரம்பாகிய வேகஸ் எனும் நரம்புதான் மார்பு பாகமாகிய நுரையீரல்கள் இருதயம் முதலியவைகளை ஆட்சி புரிகின்றது. இரைப்பை, குடல்களையும் கவனிக்கிறது.

புஜங்காசனம் செய்யும்போது முதுகெலும்பின் மேல் பாக எலும்புகள் வளைக்கப்படுகின்றன. எனவே, அந்த முதுகெலும்புகளுக்குப் பயிற்சி ஏற்படுகிறது. அதன் வழியே செல்லும் நரம்புகளுக்கு எல்லாம் பயிற்சி ஏற்படுகின்றது. முக்கியமாய் வேகஸ் நரம்புக்கும் பயிற்சி ஏற்படுகிறது. முதுகுத் தண்டின் நடு மையத்தில் மெல்லிய சந்து இருக்கிறது. அதில் ஒரு வித திரவ பதார்த்தம் இருக்கிறது. அது மூளைக்கும் நடு முதுகிலுள்ள சந்துகளிலும் சுற்றிக் கொண்டு இருக்கும். இதன் சக்தி அபரிமிதமானது. இதன் வேகமும் சிறிது அதிகமாகின்றது. இனி வரும் ஆசனங்களில் மேற்சொன்ன உறுப்புக்களுக்கெல்லாம் இன்னும் அதிக தீவிரமான பயிற்சிகள் அடங்கியிருக்கின்றன. ஆனால் முதலிலேயே அவ்வளவு அதிகமாய்ப் போகப்படாது என்றே ஆரம்பத்தில் இலேசாக, மெதுவாக இந்த அவயவங்களுக்குப் புஜங்காசனத்தில் பயிற்சி தரப்படுகின்றது. எனவே, புஜங்காசனமே பிரதானமல்ல. ஆரம்பப் பயிற்சியாகவும், முதுகெலும்பை வளைக்கும் பயிற்சியைப் படிப்படியாய்க் கொடுக்க வேண்டுமென்பதே இதன் முக்கிய நோக்கம்.

முதுகைப் பின்புறம் வளைத்துப் பார்க்கும் போது, மார்பு முன்னுக்கு நன்கு தள்ளப்பட்டு



சென்னை வித்யோதயா பிரின்ஸ்பாலாகவும், திருவல்லிக்கேணி லேடி வெலிங்டன் உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியையாகவும் இருந்த திருமதி ஆர். காந்திமதி எம். ஏ., பி. டி., அமெரிக்காவுக்குப் போகிறார். வாஷிங்டன் மாகாணத்திலே ஜார்க்ஸ்டவுன் என்ற ஊரில் உள்ள உயர்தரப் பொதுப் பாடசாலையில் ஓர் ஆண்டு ஆசிரியையாக இருந்து இந்திய சரித்திரம், இந்திய மக்கள் பண்பு, கலாசாரம், நடனம், சங்கீதம் ஆகிய கலைகளைப் போதிப்பதற்காகச் செல்கிறார். அமெரிக்காவுக்குச் செல்லும் ஸ்ரீமதி காந்திமதியை நண்பர்களும் உறவினர்களும் கல்வி அதிகாரிகளும் திரளாக வந்து வழியனுப்பிய காட்சியை மேலே படத்தில் காணலாம்.

காகிதத் தேர்வு

பொருவன்—கணேசன்

தேர்வுஎனுங் கூற்றினுக்கு அஞ்சிப் பையன்
தினந்தினமும் கதறலுற்றான் விடியுமுன்னே!

'மார்க்கு' எனும் வலிகயிற்றால் பிணிக்கப்பட்டோன்
மார்வலியாம் கொடுநோயைப் பெற்றான், அந்தோ!

கார்க்கு எனும் மென்மரத்தை ஒத்தபிள்ளை
காற்றோடு பறக்கலுற்றான் தேர்வின்பின்னே!

ஊர்மெச்சப் படித்தவனும் உடல் கெடுத்து
ஒருவாறாய்ப் படுக்கலுற்றான் தீரா நோயால்.

மருத்துவரை தம்மனைக்கே அழைக்கலுற்றார்
மகிழ்வோடு ஓர்மகவைப் பெற்ற தந்தை

உருக்கமுடன் மகனுக்கே செலவைச் செய்து
ஓரிரண்டு மாதத்தில் நலிவும் பெற்றார்

பருக்கைதனைத் தின்றானா அதுவுமில்லை
பழச்சாற்றைக் குடித்தானா அதுதான் இல்லை

கருத்தோடே படித்தபிள்ளை எழவேயில்லை
காகிதந்தான் அவன்தேர்வைக் காட்டிற்று அந்தோ!

அதிலுள்ள நுரையீரல் விரிவடைகின்றது. அப்படி விரியும்போது நன்கு மூச்சை இழுத்துக் கொள்வதால் பிராண வாயுவானது நுரையீரல்களில் நன்கு பிரவேசிக்க முடிகின்றன. அப்படியே மார்பு விரித்தபடி பத்து விநாடிகள் இருந்து மூச்சை நன்கு இழுத்து விடுவதால் நுரையீரல்களிலுள்ள பொடிக் காற்றுக் குழல்களுக்குள் எல்லாம் பிராண வாயு நன்கு நுழைய முடிகின்றது. அதனால் ஆஸ்துமாக்காரர்களுக்குக் காற்று அடைப்பட்ட இடங்களுக்கும் பிராண வாயு கிடைக்கிறது. ஆஸ்துமாக்காரர்களுக்கு இது ஆரம்பப் பயிற்சியாய் இருக்கிறது.

தவிர, முதுகெலும்பைத் தாழ்த்தித் தோள்கள் தூக்குவதால் முதுகில் இருக்கப்பட்ட அடிச்சதை நார்களுக்கு ஒரு நல்ல பயிற்சியும் ஏற்படுகிறது. நமது முதுகெலும்பு மூன்று பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. 'தொராசிக் ரீஜன்' என்றும், 'லும்பர் ரீஜன்' என்றும், 'சாக்ரல் ரீஜன்' என்றும் பெயர். தொராசிக் ரீஜன் எனும் முதுகெலும்பு பாகம் கழுத்துக்கு அடியிலிருந்து இடுப்பு வரையிலுள்ள பாகமாகும். இந்த இடத்திலுள்ள முதுகெலும்பிலிருந்து பிரியும் நரம்புக் கூட்டங்கள் இருதயம், காற்றுக் குழாய்கள், இரைப்பை, சிறு குடல் பெருங்குடலின் ஆரம்ப பாகத்தையும் ஆட்சி புரிகின்றன. லும்பர் ரீஜன் என்பது இடுப்புக்குக் கீழ் இருக்கும் முதுகெலும்பின் பாகமாகும். இதிலிருந்து பிரியும் நரம்புக் கூட்டங்கள் பெருங்குடலின் முடிவான கடைசிப் பாகத்திற்கு வேலை செய்கின்றன. சாக்ரல் ரீஜன் எனும் கடைசி முதுகெலும்புகளின் பாகத்திலிருந்து பிரியும் நரம்புக் கூட்டம் ஜனனேந்திரியங்களுக்கு வேலை செய்கிறது.

புஜங்காசனம் செய்யும்போது தொராசிக் ரீஜன் எனும் முதுகெலும்புப் பாகம் பின் பக்கம் வளைவதால் அதன் ஆளுகைக் குட்பட்ட இருதயம், காற்றுக் குழாய்கள், இரைப்பை, சிறு குடல், பெருங்குடலின் ஆரம்ப பாகம் முதலியனவெல்லாம் ஆரம்பப் பயிற்சியாகச் சிறிது பயிற்சி அளிக்கப்படுகின்றது. லும்பர் ரீஜனுக்கும் பயிற்சி உண்டாகிறது. அடி வயிறு நசுக்கப் படுவதால் மலச்சிக்கல் ஜீரணக் கோளாறுகள் முதலியன விலகும். கைகளுக்கும் முக்கியமாக தோள்களுக்கும் நல்ல பலம் உண்டாவது நிச்சயம்.

பயிற்சி உண்டாகிறது என்றால் என்ன! ஏன் பயிற்சி அளிக்க வேண்டும்! என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டும். ஒரு இடத்துக்குப் பயிற்சி அளிக்கும்போது அந்த இடத்திலுள்ள எலும்பு தசைகள், தசை நார்கள், இரத்த நரம்புகள் முதல் சகல அணுக்களுக்கும் இரத்தம் அதிகமாகச் செல்லுகின்றது. இரத்தம் அதிகமாகச் செல்லும் போது அத்துடன் பிராண வாயுவும் அதிகமாகச் செல்லுகிறது. எனவே பயிற்சி அளிக்கப் பெற்ற பாகம் அதன் சம்பந்தப்பட்ட மற்ற பாகங்களெல்லாம் சுறுசுறுப்படைந்து முன்னிலும் அதிக பலம் பெற்று ஆரோக்கியம் அடைகின்றன.

பல மணி நேரம் குனிந்தே மேஜையடியில் உட்கார்ந்து வேலை செய்யும் அன்பர்களுக்கு இந்த ஆசனம் ஒரு பரிகாரத்தை அளிக்கும். குனிந்திருந்த போது அடைந்து கிடந்த நுரையீரல்களுக்கு விடுதலை கிடைத்து, பிராணவாயுப் பிரயோகம் நன்கு கிடைக்கும். கழுத்துக்கும் சிரம பரிகாரம் ஏற்படுகிறது. (தொடரும்)

திரையில் விவாகம்

ஜூலை நாலாம் தேதி "கல்கி" இதழில் ஒரு சகோதரி திரையில் விவாகத்தைப் பற்றி எழுதியிருந்தார். அதை முற்றும் நான் ஆமோதிக்கிறேன். என்றாலும், அவர் எழுதாமல் விட்ட சிலவற்றை நான் எழுதுகிறேன். விவாகத்தை ஆதியோடு அந்தமாய்க் காட்டுவது நம் புனிதமான விவாகத்தை அவமதிப்பதாகிறது என்றால், அநேகமாய்ச் சமீபத்தில் வந்த படங்களில் எல்லாம் படுக்கை அறைக் காட்சி காட்டப் படுகிறதே!

சாதாரணமாய் நடக்கும் சாந்திக் கல்யாணம் தற்காலத்தில் குடும்பங்களில்கூட அவசியமென்று நடத்துவதில்லை. அப்படியிருக்க, மக்களின் மன மகிழ்ச்சிக்காக, இந்தப் படுக்கையறைக்காட்சிகள் அதிகரிப்பதின் காரணமென்ன! அதிலும் ஒரு தமிழ்ப் படத்தில் இரு கட்டில்களையும் சேர்த்தும், பிரித்தும், அதற்கு வியாக்கியானம் வேலையாள் மூலம் கேட்டும், பார்த்தோம். இது மிகவும் அசங்கியமாய்த் தோன்றியது. இதைச் சென்சார் போர்டார் எப்படி அனுமதித்தார்கள்!

மயிலாப்பூர்
5-7-54

எம். சுசீலா

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press,
No. 20, Dr. Guruswamy Mudaliar Road, Kilpauk, Madras 10.



REGISTERED No. M. 4392

Registered as a news paper in Ceylon



ருசிமிக்க சாப்பாட்டை தயாரித்திருந்தேன்... எப்படி என்று எனக்கே தெரியவில்லை!

என்றும்போல்தான் சாப்பாட்டு வேளையில் இன்றும் அமளி. எல்லோரும் ஒருவாறாக அமர்ந்ததும் சாப்பாட்டைப் பரிமாறினேன். அப்போதுதான் ஒரு அதிசயம் நடந்தது. ஒரே நிசப்தம். ஒரு சாப்பாட்டுப் போட்டி நடப்பதுபோலிருந்தது. இந்தகைய மாறுதலேற்பட நான் என்னதான் செய்தேன்!

என் கணவரும் குழந்தைகளும் எப்பொழுதுமே என் சமையலில் குற்றம் கண்டுபிடிப்பார்கள். இன்று ஏனோ ஒருவரும் ஒரு வார்த்தைகூட பேசவில்லை. சாப்பாட்டிற்கு இரு காலையில் என்ன சாமான்கள் வாங்கினேன் என்று நினைத்துப்பார்த்தேன். அதே காய்கறிகள்தான் ... அதே பருப்பு, உப்புத்தான் ... ஹாங்! ஞாபகத்துக்கு வந்து விட்டது. புதிதாக ஒன்று வாங்கத்தான் செய்தேன்!

அன்று காலையில்தான் டால்டா வனஸ்பதி உபயோகித்துப் பார்க்கலாம் என்று திட்டமிட்டேன். கடைக்காரர் பொரிக்கவும், வறுக்கவும், தித்திப்புப் பண்டம் தயாரிக்கவும் ஏற்ற சிறந்த தாவரக் கொழுப்பு என்று அதை சிபார்சு செய்தார். அவர் டால்டா டின் ஒன்றை தந்தவாறு, "உணவின் இயற்கை ருசியை இது பரிமளிக்கச் செய்கிறது. அதனால் உங்கள் வீட்டில் எல்லோரும் சாப்பாட்டை ரசிப்பார்கள்" என்றார்.

ஆம். இந்த மாறுதலுக்குக் காரணம் கட்டாயம் டால்டா வனஸ்பதியில் சமைத்ததுதான். அது எல்லாவித சமையல்களுக்கும் சிறந்தது. அன்றியும் ஞாபகமிருக்கட்டும் — சமையல் கொழுப்பை சில்லறையாக கடையில் வாங்குவது ஆரோக்கியத்திற்கு கெடுதல் விளைவிக்கலாம். மிகவும் விலையுயர்ந்த கொழுப்பும் கலப்படமாகவும், ஈ, அழுக்கு இலைகள் காரணமாக அசுத்தமானதாகவுமிருக்கலாம். காற்றுப்புகாத சீல்செய்த டின்னில் கிடைக்கும் டால்டா வனஸ்பதி எப்பொழுதும் புத்தம் புதிதாகவும், சுத்தமாகவும், ஆரோக்கியமளிப்பதாகவுமிருக்கிறது. மேலும் இது லாபகரமானது. மறுமுறை சாமான்கள் வாங்க கடைக்குச் செல்லும்பொழுது டால்டா வனஸ்பதியை உங்கள் ஜாபிதாவின் முதலில் குறித்துக்கொள்ளுங்கள்!

10, 5, 2, 1, ராத்தல் டின்களில் கிடைக்கிறது.
டால்டா வனஸ்பதியில் இப்பொழுது விடமின் 'ஏ', 'டி' இருக்கிறது.

ஊட்டமளிக்கும் உணவை உங்கள் குடும்பத்தினருக்கு அளியுங்கள்.

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே எழுதுங்கள்:
தி டால்டா அட்வைஸரி ஸர்வீஸ்
தபால் பெட்டி நெ. 353, பம்பாய் 1



மர அடையாளமுள்ள டின்னைப் பார்த்து வாங்குங்கள்.

டால்டா வனஸ்பதி

சிறந்த சமையல் — குறைந்த செலவு

HVM 218-50 TM